THE SUDAROLI

# சுடர் ஒளி

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

30.00

பக்கங்கள் -28

வார சஞ்சிகை

செப்ரெம்பர் 19- செப்ரெம்பர் 25, 2012

September 19 - September 25, 2012



## கிழக்கில் மு.கா அரசுடன் இணையப்போகின்றதா?

## ஒரு பானை நீருக்குள் தவளைகள்!

உண்மைச் சம்பவம்

## பழிவாங்கல் கொலை



# கிழக்குத் தேர்தல் கற்பிக்கும் பாடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா யார் என்று தெரிந்து கொள்ள நியூயோர்க்கை வலம்வரும் புதிய வாகனம்!




ஒரு குழந்தையின் அப்பாவை அறிமுகம் செய்வது அம்மா. ஆனால், அப்பா யார் என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுபவர்கள் மரபணு சோதனை செய்து கொள்ளுங்கள் என்ற அறிவிப்புடன் நியூயோர்க் நகரை வலம்வந்து கொண்டிருக்கிறது ஒரு வாகனம்.

இந்த வாகனத்தில் மரபணு சோதனை நடத்துவதற்கான அனைத்து பரிசோதனை வசதிகளும் உள்ளன. நிபுணர்களும் தயாராக உள்ளனர்.

மரபணு சோதனை நடத்துவதற்காக, ஒரு நபருக்கு 32 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்படுகிறது. தினமும் நியூயோர்க் நகரின் முக்கிய சாலைகளை சுற்றி வரும்போது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள ஏதாவது ஒரு இடத்தில் இந்த வாகனம் நிறுத்தப்படுகிறது.

ஏராளமான ஆண்கள், தங்கள் குழந்தைகளை அழைத்து வந்து இந்த குழந்தை தங்களுக்குப் பிறந்தது தானா? என்று பரிசோதனை செய்கின்றனர். அந்த ஆய்வு முடிவுகள் சில நாட்களுக்குப் பின்னர் அவர்களுக்கு மின்னஞ்சல் மூலமாகவோ, கடிதம் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படுகிறது.

இதுபோன்ற சோதனை நடத்துவதற்கு அமெரிக்காவில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதுபோன்ற சோதனைகள் மூலம் ஏராளமான தம்பதிகளிடையே தேவையற்ற மனக்கசப்பு ஏற்படுகிறது என்றும் சமூக ஆர்வலர்கள் புகார் கூறியுள்ளனர்.

அமெரிக்காவில் ஏற்கனவே விவாகரத்துகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் இதுபோன்ற சோதனைகளினால் குடும்ப வாழ்க்கையில் விரிசல்கள் அதிகம் ஏற்படும் என்றும் எச்சரிக்கின்றனர். ஆனால் ஒரு சிலரோ இதுபோன்ற மரபணு சோதனைக்கு வரவேற்பு அதிகரிக்கிறது என்று தெரிவித்துள்ளனர்.

## மனைவிகளிடம் அடி வாங்கிய ஜேம்ஸ் பாண்ட்



ஹொலிவுட் சினிமா படங்களில் ஜேம்ஸ் பாண்ட் வரிசையில் வெளியான திரைப்படங்கள் ரசிகர்களின் அமோக வரவேற்பை பெற்றவையாகும்.

இந்த படங்களில் ஜேம்ஸ் பாண்ட் கதாபாத்திரம் ஏற்று நடித்தவர்களில் ஒருவர் ரோஜர் மூர். சினிமா படத்தில் தான் அவர் துப்பறியும் வீரதீரர் வேடம் ஏற்றார்.

ஆனால், உண்மையான வாழ்க்கையில் அவர் தனது மனைவிகளிடம் அடி- உதை வாங்கி இருக்கிறார். தற்போது 84 வயதாகும் ரோஜர் மூர் இந்த தகவலை பேட்டி ஒன்றில் தெரிவித்து உள்ளார்.

அவருடைய முன்னாள் முதல் மனைவி டூர்ன்வான் என்பவர் ரோஜர் மூரை கையால் குத்து விடுவதுடன் நகத்தால் கீறி விடுவாராம். ஒரு முறை டீ கோப்பையாலும் தாக்கி இருக்கிறார்.

அடுத்து 2-வது மனைவியான டாரோதி ஸ்குரீஸ் என்பவரும் ரோஜர் மூர் தன்னிடம் நம்பிக்கைக்குரியவராக இல்லை என கருதி வன்முறையில் ஈடுபட்டு இருக்கிறார். இவர் தனது கணவரின் தலையில் கித்தார் இசைக்கருவியை கொண்டு தாக்கியுள்ளார்.

இத்தகவலை ஜேம்ஸ் பாண்ட்டே தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## எஜமானுக்காக 6 வருடங்களாக கல்லறையில் காத்திருக்கும் நாய்!



அர்ஜெண்டினாவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள விலாகார்லொஸ்பாஸ் என்ற நகரில் வசித்து வந்தவர் மிகுவல் கஸ்மென். இவர் கப்டன் என்ற பெயருடைய நாயினை செல்லப் பிராணியாக வளர்த்தார்.

இவர் கடந்த 2006ம் ஆண்டு உயிரிழந்தார். ஆனால் இவர் வளர்த்த கப்டன் என்ற நாய் மறைந்த தனது எஜமானின் கல்லறைக்கு அருகில் 6 வருடங்களாக வாழ்ந்து வருகிறது. இந்த நாய்க்கு உணவளிப்பது அந்த மயானத்தின் பராமரிப்பாளர் தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குத் தேர்தல் கற்பிக்கும் பாடங்கள்

இலங்கை அரசியலில் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடந்து முடிந்து, முடிவுகளும் வெளிவந்து விட்டன. எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெற முடியாத நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு 14 ஆசனங்களும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு 11 ஆசனங்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு 7 ஆசனங்களும் கிடைத்துள்ளன. கிழக்கு மூவின மக்களும் பரந்து வாழும் ஒரு பிரதேசம் என்ற வகையில் இத்தேர்தல் முடிவுகள் பெரும் ஆச்சரியத்தைத் தரக்கூடியன அல்ல என்ற போதிலும், த.தே.கூட்டமைப்பு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு கட்சி என்ற வகையிலும், முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு கட்சி என்ற வகையிலும் இவை மேலும் சில ஆசனங்களைப் பெற்றிருக்க முடியும் என்ற கருத்து மக்களிடம் நிலவுகிறது. அப்படியான ஒரு கருத்து உருவாவதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை.

முக்கியமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியில் இருக்கும் கட்சி என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டது. சகல அரச வளங்களும் அவர்களால் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. அரச ஊடகங்கள் கூட ஜனாதிபதியின் பரப்புரைப் பேச்சுகள், அமைச்சர்களின் கருத்துகள், அபிவிருத்தி சம்பந்தப்பட்ட செய்திகள், விழாக்கள் பற்றிய விவரணங்கள் என முழுமூச்சின் ஊடக தர்மத்தை மறந்து செயற்பட்டன. அபிவிருத்தித் திட்டங்கள், அடிக்கல் நாட்டு விழாக்கள், திறப்பு விழாக்கள் என எல்லா நிகழ்வுகளும் தேர்தல் பிரசார மேடைகளாக்கப்பட்டன. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக பல முனைகளிலும் பிரதேசவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. வடக்குக் கிழக்கு இணைப்பு என்பதை பிரதேசவாதச் சிந்தனையுடன் முன்வைத்து, தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பது கொச்சைப்படுத்தப்பட்டது. பலவிதமான இடையூறுகள் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரப் பணிகள் தடைசெய்யப்பட்டன. வேட்பாளர்களுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அதாவது ஒரு நீதியான தேர்தலில் என்னென்ன விஷயங்கள் செய்யக் கூடாதோ அத்தனையும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டன.

அதேபோன்ற அடாவடித்தனங்கள் முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்டன. அதைவிட மேலதிகமாக ஒரு இடமாற்றம் செய்யப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் அம்பாறை மாவட்டத்தில் நேரடியாக வந்து இறங்கி நின்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு எதிரான நடவடிக்கைகளை நெறிப்படுத்தினார் எனவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதாவது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சகல அரச வளங்களைப் பயன்படுத்தியதோடு, சகல வன்முறைகளிலும், சகல முறை மீறல்களிலும் ஈடுபட்டே பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றது எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை மறுப்பதற்கில்லை.

இப்படியான நிலையில் மாவட்டம் முழுவதும் 55 வீத மக்களும் சில குறிப்பிட்ட இடங்களில் 50 வீத மக்களுமே வாக்களிப்பில் கலந்து கொண்டனர். அதற்கு மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வன்முறைகளே காரணம் எனவும் கூறப்படுகிறது.

எனினும் தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவது, பள்ளிவாசல்கள் இடிக்கப்படுவது, ஆலய விக்கிரகங்கள் சூறையாடப்படுவது, ஆலய விழாக்கள் தடை செய்யப்படுவது போன்ற கொடுமைகள் அரசாலும் அரசின் ஆதரவாளர்களாலும் மேற்கொள்ளப்படும் போது தமிழ், முஸ்லிம் மக்கள் இத்தடைகளை மீறிச் சென்று ஏன் இவற்றிற்கு எதிராக வாக்களிக்கவில்லை என்ற கேள்வி எழுகிறதல்லவா?

ஏன் பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பதும், ஒரு பகுதி தமிழ், முஸ்லிம் மக்கள் ஏன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வாக்களித்தார்கள் என்பதுமேஇங்கு விடை கண்டு பிடிக்க வேண்டிய முக்கிய கேள்விகள்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து மூதூர் ஒரு இரட்டை அங்கத்தவர் தொகுதியாக விளங்கியது. ஒவ்வொரு தேர்தல்களிலும் ஒரு முஸ்லிம் வேட்பாளரும் ஒரு தமிழ் வேட்பாளரும் வெற்றி பெறுவதுண்டு. அதாவது நீண்ட காலமாகவே இது ஒரு தமிழ், முஸ்லிம் மக்களுக்கான தொகுதியாக விளங்கியது. மெல்ல மெல்ல ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள் மூலம் இலங்கை சுதந்திரம் பெறும் போது திருமலை மாவட்டத்தில் 4 வீதமாக இருந்த சிங்கள மக்கள் தொகை 33 வீதமாக உயர்ந்தது.



**எப்படியிருந்த போதிலும் கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளது என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக் கொண்டால் மட்டுமே அடுத்த கட்ட நடவடிக்கையை நோக்கி நகர முடியும்.**

இந்நிலையில் 1977ம் ஆண்டு தேர்தலுக்கு முற்பட்ட காலப்பகுதியில் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி மூதூர், சேருவில என இரு தனித்தனி உறுப்பினர் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.

இதன் காரணமாக மூதூரில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகவும் சேருவிலவில் சிங்களவர் பெரும்பான்மையாளராகவும் மாறினர். இரு தொகுதிகளிலும் தமிழ் மக்கள் சிறுபான்மையினராக்கப்பட்டனர்.

மூதூர் தமிழ் மக்களுக்கு நீண்டகாலப் போராட்ட வரலாறு உண்டு. அவர்கள் தமிழ்மக்களின் விடுதலை போராட்டத்திற்குக் கொடுத்த விலைகள் ஏராளம். கிளிவெட்டி குமாரபுரம் சந்தையில் பலவந்தமாகச் சிலர் படையினரின் உதவியுடன் அரச மரத்தின் கீழ் ஒரு புத்தர் சிலையைக் கொண்டு வந்து நிறுவியதும் அப்பகுதி மக்கள் இரவோடிரவாக அரச மரத்தை வெட்டி அதனையும் புத்தர் சிலையையும் ஆற்றில் தள்ளிவிட்டு அதே இடத்தில் ஒரு பெரிய ஆலமரத்தைக் கொண்டு வந்து நட்டு அங்கு பிள்ளையார் சிலையை வைத்ததை மறந்து விட முடியாது. அதற்காக சிங்களப் படையினர் அப்பகுதியைச் சுற்றி வளைந்து ஒரே நாளில் பல நூறு மக்களைக் கொன்று குவித்ததையும் மறந்து விட முடியாது.

அதேபோன்று, 2006ல் போர் மீண்டும் ஆரம்பித்த போது மூதூர் மக்கள் இடம்பெயர்ந்து பல உயிரிழப்புகள் உட்பட பலவித தியாகங்களைச் செய்து இறுதியில் வாகரையில் சிக்குண்டு பேரழிவுகளுக்கு முகம் கொடுத்தனர். இவர்களில் சம்பூர் மக்கள் இன்னும் மீளக் குடியேற அனுமதிக்கப்படவில்லை.

இப்படியான பாரம்பரியம் கொண்ட மூதூர், சேருவில தொகுதியில் இம்முறை இடம்பெற்ற கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்போ, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசோ குறைந்த பட்ச வாக்கைக் கூடப் பெறமுடியவில்லை.

மூதூரிலிருந்து வெருகல் வரை வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் தங்கள் இன, மத உணர்வுகளைக் கைவிட்டு விட்டனர் என்று அர்த்தம் கொள்ள முடியுமா? நிச்சயமாக அப்படி இருக்க முடியாது. அப்படியில்லையென்றால் இந்த நிலை ஏற்பட்டமைக்கு என்ன காரணம்?

அதேவேளையில், அம்பாறையில் சேனநாயக்கா சமுத்திரத் திட்டம், கரும்புச் செய்கை, சீன உற்பத்தி, அம்பாறை நகர நிர்மாணம் எனப் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பெருந்தொகையான சிங்களவர் குடியேற்றப்பட்டனர். கரும்புச் செய்கைக்கென நிலங்கள் சுவீகரிக்கப்பட்டபோது பல முஸ்லிம்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு அங்கிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த அம்பாறை ஒரு தனி மாவட்டமாகியது. இப்போது அது சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டம். அங்கு பாரம்பரியமாக வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் பலமிழக்கச் செய்யப்பட்டு விட்டனர்.

அங்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் 5 பேரும், முஸ்லிம் காங்கிரசில் 4 பேரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பில் 2 பேரும், ஐக்கிய தேசியக் கட்சியில் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முஸ்லிம் காங்கிரசின் கோட்டை என வர்ணிக்கப்படும் அம்பாறையில் கூட அவர்களால் எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியவில்லை. என்றைக்குமே தமிழ் மக்களின் வலுவான ஆதரவுத் தளமான மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்த்த ஆதரவைப் பெறமுடிவில்லை. பல தமிழ்க் கிராமங்களில் உள்ள மக்கள் மிகக் குறைந்த அளவிலேயே வாக்களித்துள்ளனர்.

எப்படியிருந்த போதிலும் கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளது என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக் கொண்டால் மட்டுமே அடுத்த கட்ட நடவடிக்கையை நோக்கி நாம் நகர முடியும்.

• சந்திரசேகர ஆசாத்

முஸ்லிம் மக்களின் தனித்துவமான தலைமையாக விளங்கிய முஸ்லிம் காங்கிரசை உடைப்பதிலும், பலவினப்படுத்துவதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் அவரின் குடைநிழலில் சுகம் காணும் சில முஸ்லிம் தலைவர்களும் கணிசமானளவு வெற்றி பெற்று விட்டார்கள். இவர்கள் தங்கள் அடிவருடித்தனத்தை மறைக்கத் தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லிம் மக்களைத் திசை திருப்புவதில் கூடுதல் அக்கறை காட்டி வருகின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் இதைச் சரியாகப் புரிந்து கொண்டு வியூகங்களை வகுத்து முன்செல்ல வேண்டும்.

போரின் போதும் அதன் பின்பும் எமது மக்கள் உயிரிழப்புகள், சொத்திழப்புகள், தொழிலிழப்புகள், இடப்பெயர்வுகள் எனப் பலவிதமான தாங்க முடியாத இன்னல்களை அனுபவித்தவர்கள். அதுமட்டுமன்றி சொந்தக் காணிகள் அபகரிப்பு, இராணுவ நெருக்குவாரங்கள், சொந்த நிலங்களில் குடியேற அனுமதிக்கப்படாமை, தொழில்களைச் செய்வதில் கொடுக்கப்படும் நெருக்கடிகள் எனப் பலவிதமான சிக்கல்களைச் சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில், ஒருவிதமான சலிப்பும் நம்பிக்கையீனமும் எமது மக்களுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாது. இதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு சரியாகப் புரிந்து கொண்டு அவர்களிடம் இறங்கி, அவர்களுடன் இணைந்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வழிகளைத் தேட வேண்டும். அவர்களின் தேவைகளுக்கான நியாயமான போராட்டங்களுக்குத் துணிச்சலாகத் தலைமைதாங்க வேண்டும். பிரச்சினைகள் எழும்போது ஒவ்வொரு போராட்டங்களை நடத்தி விட்டு ஓய்ந்து போவதில் எவ்வித பயனுமில்லை.

மக்கள் ஒவ்வொரு நாளும் பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். அவை பற்றி எவரும் அக்கறை காட்டாத போது சலிப்படைவது தவிர்க்க முடியாது. எனவே, அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நாம் அவர்களுக்குத் தலைமை கொடுக்கும் போது மட்டுமே எம்மேல் அவர்களுக்கு நம்பிக்கை பிறக்கும்.

இப்பணியைச் சரியாகச் செய்வதானால் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இரும்பு போன்ற ஐக்கியம் வேண்டும். ஒவ்வொரு கட்சியினரும் ஏனைய கட்சிகளை விட நமது கட்சிக்கு முக்கியத்துவம் கோருவது நிச்சயமாக ஐக்கியத்தை உருவாக்க உதவாது. நாம் ஒரு கொடூரமான மனிதத் தன்மையற்ற எதிரிக்கு எதிராக ஜனநாயக வழியில் போராடுபவர்கள். எமது பலம் எமது ஐக்கியமும் உறுதியும் எம் பின்னால் திரளும் மக்களுமே என்பது உணரப்பட வேண்டும்.

அனுபவங்கள் தரும் பாடங்களை புரிந்து, அதை அறிவாக்கும் போது அது பிரமாண்டமான சக்தியாக மேலெழும்.

* * *

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொலையா நினைவுகள்...



# அன்னைக்கு நீயே உலகம்

நெடுந்தீவு மகேஷ்

நான் பிறந்து வளர்ந்த போதில் அவளிடத்தில் என்னை மனிதனாகக் காணும் ஆவலோடு தோன்றிய கனவுகள் நிறைந்திருந்ததை, சிறுவனான நான் அன்று அறிந்திருக்கவில்லை. ஒவ்வொரு தாயிடத்திலும் தனது பிள்ளைகள் குறித்த கனவுகளும் ஆசைகளும் நிறையவே உள்ளன.

என்னைக் குளிப்பாட்டி ஆடை உடுத்து அழகாகத் தன்னோடு அணைத்துக் கூட்டிச் செல்வதில் அவளுக்கிருந்த ஆவலை அவளது செயல்கள் எனக்குக் காட்டிக் கொடுத்தன. எனது உடல் முழுவதையும் உரசி அழுக்கைப் போக்கி என்னைக் கழுவிக் குளிப்பாட்டுவாள். எனது முதுகுப்புற அழுக்கைத் தேய்த்து சவர்க்காரம் இட்டுக் கழுவுவாள். எனது முகத்தைக் கழுவும்போது எனது கண்களில் சவர்க்காரம் எரிவை உண்டாக்கும். நான் கண்களைக் கசக்கிக் கொண்டே அழுவேன். "ஒரு கொஞ்ச நேரந்தான் பொறுத்துக் கொள்" என்பாள். நான் குளிப்பதற்கு மறுப்புத் தெரிவித்து அடம்பிடித்து ஆர்ப்பாட்டம் செய்யும் போதெல்லாம் செல்லமாகக் கழுத்து எனக்கு நோவு ஏற்படாதவாறு அடிப்பாள். என்னைச் சுகத்துடன் வாழ வைக்கவும் பாதுகாப்பாக வளர்த்தெடுக்கவும் அவள் எடுத்துக்கொண்ட பொறுப்புக்கள் பற்றி நான் அன்று அறிந்திருந்ததில்லை. எனது முதுகின் அழுக்கை நீக்க அவள் கொண்ட முயற்சி அவளைவிட்டு நான் அகன்ற அன்றைய நாளிலிருந்து இன்றுவரை வேறெவர் மூலமும் மீண்டும் தொடரவேயில்லை.

எனக்குப் பசிக்கும் வேளைகளில் உணவு கிடைக்கும் என்பதற்கான உத்தரவாதமும் இல்லாத அந்த நாட்கள் பாத்திரத்தில் இருக்கும் கொஞ்சம் உணவையும் எனக்கெனத் தந்துவிட்டுப் பட்டினி கிடப்பாள். அவள் சாப்பிட்டாளா? என்பதைக் கேட்கும் எண்ணம் எனக்குக் காலதாமதமாகவே தோன்றும். அப்போது அவளின் பதில் "எனக்குப் பசிக்கவில்லை மகன்" என்பதான பொய்யாகவே இருக்கும். அவளின் பொய்களிலும் எனது வளர்ச்சியும் உயர்ச்சியுமே இழையோடியிருக்கும்.

ஆரம்பத்தில் நான் பள்ளிக்குப் போக விரும்பாத நாட்களோ நிறைய இருந்தன. ஆனால் அவளோ "நீ படிக்க வேண்டுமடா படித்தால்தான் உன்னுடைய நாட்களில் நீ ஒரு நல்ல தொழிலில் சேர்ந்து எவருக்கும் அஞ்சாமல் பெரியவனாக வாழலாம்" என்பாள்.

ஒருநாள் நான் பள்ளிக்குப் போவதாக வீட்டிலிருந்து புத்தகங்களோடு புறப்பட்டுச் சென்றேன். ஆனால் எங்கள் ஊரில் உள்ள புல்வெளியான வெல்லை வெளிக்குக் குதிரைகளைப் பார்க்க அன்று எனது நண்பர்களோடு சென்றிருந்தேன். மாலையில் பள்ளிக்கூடம் முடிவடையும் நேரம் பார்த்துப் பள்ளியிலிருந்து வருவதாகப் பொய்யைக் கூறிக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். அவளோ நான் பள்ளியில் இருந்து வருகிறேன் என்ற எனது பேச்சை உடனேயே நம்பிவிட்டாள். மிக விரைவிலேயே உண்மையைத் தெரிந்து கொண்டபோது அவள் என்னை ஏசவில்லை அடிக்கவில்லை நான் சொன்ன பொய்க்காக அவள் அழுதாள் "நல்ல பிள்ளையாகப் படித்த பிள்ளையாக பொய் சொல்லாதவனாக நீ வளர வேண்டும் என்று விரும்பினேனே" எனச் சொல்லிச் சொல்லி வேதனைப் பட்டாள். அவளது வேதனையைக் கண்டு என் மனமும் அழுதது. நான் அன்றிலிருந்து பொருத்தமான காரணமின்றியும் அம்மாவுக்குச் சொல்லிக் கொள்ளாமலும் பள்ளிக்குப் போகாமலிருந்ததேயில்லை. அதனாலேயே இன்று மகிழ்ந்திருக்கிறேன்.

நான் கற்ற கல்வி எனக்கு ஒரு தொழிலைப் பெற்றுத் தந்தது. அதன் வெற்றியில் எனது அன்னையை நான் அடிக்கடி நினைத்துக் கொள்ளுகின்றேன் அவளை அதில் காணுகிறேன்.

ஒருநாள் நடுஇரவில் திடீரெனக் கண்விழித்தேன். குப்பி விளக்கின் மங்கிய ஒளியில் அவள் விழித்திருந்தாள். அங்கே அன்றைய நாட்களில் எங்கள் ஊரவர் பலரும் குடிசைக் கைத்தொழிலாகச் செய்து வந்த வெண்காயக் கூடைகளைப் பின்னுவதில் அவள் அந்த இரவில் ஈடுபட்டிருந்தாள். "ஏனம்மா இந்த நேரத்தில் இதையெல்லாம் செய்கிறீர்கள் விடிந்ததும் செய்யலாமே" என்றேன் அதற்கு அவள் "எனக்குத் தூக்கம் வரவில்லை" என்றாள். அவள் சொல்வதில் உண்மை இல்லை என்பதை நான் அறிவேன். எனது பாடசாலைத் தேவைக்கான காசை நாளைக்கே பெற்று அதனை என்னிடத்தில் தருவதில் அவளுக்கிருந்த அக்கறையின் வெளிப்பாடு அது. ஒரு வெண்காயக் கூடையைப் பின்னுவதன் மூலம் மூன்று சதமே கிடைக்கும். அவ்வாறு ஆக்கிக் கொடுக்கும் ஒவ்வொரு கூடைக்கும் எங்களின் சந்தைக் கடையில் காசு தருவார்கள். அல்லது அத்தொகைப் பணத்திற்குப் பெறுமதியான கடைச் சாமான்களை வாங்கிக் கொள்ளலாம். எனது கல்விக்காக அவள் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் இதுவுமொன்று. அவை அனைத்தையுமே நான் இன்று எண்ணிப்பார்க்கிறேன்.

ஒரு தாய் தனது பிள்ளைக்காகத் தன்னை ஒறுத்து வருத்திச் செய்யும் பணிகளையும் வேலைகளையும் நாம் அவளது கடமைகளாகக் கருத முடியுமா? எனது முதுகில் தேங்கும் அழுக்கைப் போக்க அவள் அன்றெடுத்த முயற்சிக்குப் பின்னர் அவளை நான் விட்டுப் பிரிந்து வாழும் இன்றைய நாள்வரை முதுகிற் படிந்த அழுக்கை என்னால் அகற்ற முடியவேயில்லை அம்மா இப்பொழுது அருகில் இல்லை.

அம்மா என்னைத் தாங்கிச் சுமந்து நான் சுகதேகியாக வளர வாழ உந்து சக்தியாக இருந்தாள் - இருக்கிறாள். ஒவ்வொரு தாயும் தனது பிள்ளை துன்பப்படுவதையோ குற்றவாளியாக உலகத்தாரால் தூற்றப்படுவதையோ விரும்புவதில்லை.

தாயின் எண்ணமும் செயலும் பிள்ளையின் பாதையைச் செம்மைப்படுத்துவதிலேயே முன்னின்று உழைக்கின்றன. எனவே அவளின் தெய்வீகத்தை உணர்வோம். ஒவ்வொரு பிள்ளையும் நல்லவன் என்று ஊர் போற்ற வாழ்வதையே ஒவ்வொரு அன்னையும் விரும்புகிறாள். அன்னையின் ஆசையை மனத்தில் இருத்தி அவளின் கனவுகளுக்கு மதிப்பளித்து அவளைத் துயரத்திற்குள் ஆழ்த்தும் எந்தச் செயலையும் செய்யாதிருக்க முயலுவோம்.

---

எனது கிராமம் என்னுடையது. அங்கே வாழும் மக்கள் எல்லோருமே என் உறவினர். அவர்களை வாழவைக்கும் எனது கிராமச் சூழல், அதன் இயற்கை எழில், அதனால் எம்மை நாமே வளப்படுத்திக் கொள்ள வாய்த்துள்ள சந்தர்ப்பங்கள் யாவுமே எமக்கு மகிழ்ச்சியைத் தருபவை. அவற்றைப்பாடும் ஒரு கவிஞரைப் பாருங்கள்.

[illegible]

# மருதமுனையைப் பாடும்

- கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

[illegible]



[illegible]

மருதமுனை எனும் சிற்றூர் அதில் வாழும் முஸ்லிம்கள் அவர்களின் ஆற்றுமை. அவர்களால் ஒருபுறம் செழிப்புறு வயல் நிலங்கள் மறுபுறம் கடல் வந்து மோதும் கடற்கரை புடைவைநெய்யும் தொழிலாளர்கள் சிறுகைத்தொழில் செய்வோர் இங்கே உள்ளனர் பாண்டிருப்பு நீலாவணை ஆகிய கிராமங்கள் உள்ளன என்கிறார் கவிஞர்.

[illegible]

தொழுகையை ஒழுங்காகப் பேணுவோர் தமிழ்க்கவியுடன் நெசவுத் தொழிலில் ஈடுபாடு காட்டுவோர் எனத் பக்தியோடும் தம்முழைப்போடும் வாழும் மக்கள் நூல்நூற்று விரும்பிய நிறமூட்டி அதற்குப் பசைபோட்டுக் காயவைப்பார்களாம்.

[illegible]

பசை போட்ட பின்னர் காய்ந்த பாநூல்களை இழைகளாய்ப் பிரிப்பதற்காய் தட்டித்தட்டித் தனித்தனியாக அவற்றை வேறுபடுத்துவார்கள்.

[illegible]

பாவும் ஊடையுமான நூல்கள் ஒன்றிணைத்துப் பின்னப்படத் தறிகளிலே இருவர் ஆடை பின்னுவர். அந்தத் தொழிலால் உயர்ந்தது மருதமுனை 'மக்கத் தப்பினால் மருதமுனை' என்ற பழமொழிக்குப் பொருளாகி உயர்ந்த கிராமம் அது என்கிறார் கவிஞர் காப்பியக்கோ.ஜின்னாஹ் ஷரிபுத்தீன். கிழக்கிலங்கையில் புகழ் பூத்த புலவர்மணி. ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களின் மகனான இவர் அண்மையில் வெளியிட்ட காவியம். "வாத்தியார் மாப்பிள்ளை" அதிலிருந்து பெறப்பட்ட கவிதையே இது தனது ஊரான "சின்னமக்கா" எனப் போற்றப்படும் மருதமுனை மீதுள்ள அவரது நேசம் கவிதைகளில் தொனிக்கின்றன. இவர் இதுவரை பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். பல இலக்கியப் பரிசுகளைப் பெற்றவர். இவரது இலக்கியப்பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

மைதிலி தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த மூன்று தசாப்தங்களாக நடைமுறையில் இருந்துவந்த அவசரகால விதிமுறைகளை சென்ற ஆவணி மாதத்தில் செல்லுபடியற்றதாக்கியது அரசு. எனினும் பரந்தளவில் தடுத்து வைக்கும் அதிகாரம் ஏனைய சட்டங்கள் மற்றும், புதிய விதிமுறைகளின் கீழ் இன்றும் நடைமுறையிலேயே இருக்கின்றன. இன்னும் பல ஆயிரக்கணக்கானோர் விசாரணைகள் ஏதுமின்றி வழக்குகள் எதுவும் தொடரப்படாத நிலையில் சர்வதேச சட்டத்தை மீறும் வகையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

# ஒரு பானை நீருக்குள் தவளைகள்!

நாடுகள் தோறும் மக்களுக்கு நற்சேவையாற்றும் தகுதிப்பாடுடைய அரசியல்வாதிகள் கிடைக்கும் வாய்ப்பு அமைந்துவிடுகின்றதா என்பது ஆழ்ந்து கவனமாகச் சிந்திக்கப்படாத ஓர் உண்மையாகும். இலங்கையராகிய நாங்களும் அத்தகைய தகுதிப்பாடுடையவர்களைப் பெற்றுள்ளோமா? குறுகிய மனம் படைத்த தகுதியற்ற, தவறான வழியில் நடக்கும், சுய நோக்கத்திற்காகப் பிறரைப் பயன்படுத்தும், மனம் போன போக்கில் காரியங்களைச் செய்து வருகின்ற ஏமாற்றும் தன்மையுடையவர்களையே நாம் எமது அரசியல்வாதிகளாகப் பெற்றுக் கொண்டுள்ளோம். நாங்கள் அவர்களை எல்லாம் நீண்ட காலத்திற்கு முன்பதாகவே எட்டி உதைத்துத் தள்ளியிருத்தல் வேண்டும். ஆனால் நாங்கள் அவ்விதம் செய்யவில்லை.

அண்மையில் நடந்து முடிந்த மற்றுமொரு தேர்தலின் முடிவை நாங்கள் சீர்தூக்கிப் பார்ப்போமானால் அதிகாரத்தில் விடாது ஒட்டிக் கொள்வதற்காக அரசியல்வாதிகள் எந்தமட்டத்திற்கும் கீழிறங்கி குனிந்து வளைந்து செல்லுவார்கள் என்பதனை மக்களுக்கு மீண்டும் ஒருமுறை தெளிவாகக் காட்டியுள்ளது.

தேர்தல் விதிகளை மீறிய வகையில் தேர்தல் பிரச்சாரத்திற்காக அரச சொத்துக்களான வாகனங்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் போன்ற பலதரப்பட்ட உத்தியோகத்தர்களின் மனிதவளங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டுள்ளமை பல ஊடகங்கள் வாயிலாகவும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மூலமாகவும் வெளிவந்தன. ஒவ்வொரு தேர்தலின் போதும் சொல்லப்படுவது ஒரே தாரக மந்திரம்தான். சொல்வது ஒன்று செய்வது ஒன்று. யாரை யார் கேட்பது? ஆள்வதும் அவர்களே அதிகாரமும் அவர்கள் கையிலே. எவர் என்னதான் செய்துவிட முடியும்?

தேர்தல் கண்காணிப்பாளர்கள் வன்செயல்கள் நிகழக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக எச்சரிக்கை விடுத்திருந்தனர். அவர்கள் மீளவும் ஒருதடவை கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது சட்டத்தை அமுல்ப்படுத்தும் அதிகாரிகள் சட்டம் ஒழுங்கினைச் சரிவரப் பேணத்தவறின் வன்முறைச் சம்பவங்கள் நிகழக்கூடிய சாத்தியம் உள்ளதாக எச்சரித்திருந்தனர்.

தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 'கபே' எனும் அமைப்பு முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறையில் உள்ள அக்கரைப்பற்றில் சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் போட்டியிடும் முஸ்லிம் கட்சிகளுக்குள் மற்றுமொரு கொலன்னாவைச் சம்பவம் போன்று மாறக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதாகக் குறிப்பிட்டிருந்தது.

கடந்தவருடம் ஐப்பசி மாதத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்கள் சமயத்தில் கொலன்னாவையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சமரில் ஜனாதிபதியின் ஆலோசகரான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரா உட்பட நால்வர் கொல்லப்பட்டும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சண்டியனுமான துமிந்த சில்வா படுகாயமுற்றதுமான ஓர் வன்முறைச் சம்பவம் இடம்பெற்றமை நாடறிந்த விடயமே.

கடந்தவருட உள்ளூராட்சித் தேர்தலின் போதும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் விடுத்த எச்சரிக்கைகளை சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் அக்கறை காட்டாது புறக்கணித்தமையே கொலன்னாவை வன்செயல் இடம்பெறக் காரணமாயிற்று எனக் 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கீர்த்தி தென்னக்கோன் தெரிவிக்கின்றார்.



அதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை.

அதேபோன்று அக்கரைப்பற்றிலும் அதே பதற்ற நிலைமையிருந்தது. ஆங்காங்கே பல மோதல்கள் சிறுசிறு சச்சரவுகளும் இடம்பெற்றன.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் (SLMC) தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கும் மற்றும் தேசிய முஸ்லிம் காங்கிரசின் (NMC) தலைவரும் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லாவுக்குமிடையிலான முழு வீச்சிலான முரண்பாடுகள் நிலவியதாக தென்னக்கோன் தெரிவித்திருந்தார்.

இத்தனைகளுக்கும் மத்தியில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் யூ.என்.பியினரும் களத்தில் குதித்திருந்தனர்.

சிறீலங்காவின் ஆட்சி மோசமான நெருக்கடி நிலைக்கு முகம் கொடுக்கின்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்டி அடித்து அரச தரப்புடன் இணைவதற்குத் தன்னைக் கேட்ட வண்ணமுள்ளனர் என இடைவிடாது தனது கட்சிக்காரர்களுக்குப் பெருமையடித்துக் கொண்டிருக்கின்றார். சிறீலங்கா மீண்டும் ஒருமுறை நடுச்சந்தியில் நிற்கப் போகின்றது. குறுகிய மனம் படைத்த, கல்வியறிவற்ற தலைவர்களினால் சூழ்ச்சி வலையில் சிக்கியுள்ளது. தலைவர்கள் எனப்படுபவர்கள் ஜனநாயகத்தின் மீது எச்சிலைத் துப்பியுள்ளனர். நேர்மையற்ற வழிமுறைகளை விரும்பிப் பின்பற்றுகின்றனர். அத்துடன் இடம்பெறும் அபிவிருத்தியினை காலால் மிதித்துத் துவைக்கின்றனர்.

ஒழுக்கக் கேடுகளும் அத்துடன் அதிகார துஷ்பிரயோகங்களும் இந்நாடு பூராவும் தலைவிரித்தாடுகின்றன! பொது மக்களிடமிருந்து [illegible] வெளிப்படுத்தாத வகையிலான அளவிற்கு அவர்களைத் தன்னலமற்றவர் எனக் கருதுமளவிற்கு வெள்ளை யானைகள் போன்ற அம்பாந்தோட்டைத் துறைமுகம், விமான நிலையம் மற்றும், கிரிக்கெட் விளையாட்டரங்கு போன்றவற்றைத் திட்டமிட்டு அரங்கேற்றிய அதேநேரத்தில் இவற்றிற்கு சமாந்தரமாக இந்நிலையை ஓர் புதிய உச்சநிலைக்கு உயர்த்தக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தி விருப்பின் சிறீலங்கா திட்டமிட்டிருந்தபடி ஓர் அதிசயமான நாடாக விளங்குவதில் எவ்வித தடங்கலும் ஏற்பட்டிராது. அரசின் தறுமாறான போக்கே இதற்குக் காரணமாக அமைந்தது. மக்களும் சந்துபொந்தில் இருந்து உயர்மட்டம் வரையில் ஒழுக்கக்கேடும் ஊழலும் இடம்பெறுகின்றது.

'கோப்' அறிக்கை விபரங்கள் பொது மக்களின் நிதி மற்றெவரையும் விட நாடாளுமன்ற உறுப்பினர்களின் மத்தியிலுள்ள பலராலேயே வீண்விரயமாகச் செலவு செய்யப்படுகின்றதென்பதைத் தெரிவிக்கின்றன. அதிலும் சிலர் இன்று கபினெற் அமைச்சர்களாகவும் இருக்கின்றனர். நாட்டிற்கான பாரிய நன்மைக்காக, அன்றி நாட்டு மக்களுக்காக, ஓர் நிலையான சமாதானத்தை நிலைநாட்ட அல்லது சுபீட்சம் தரும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி அல்லது ஏனைய 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் எவருமே சிறிதளவு நாட்டம் கூட காட்டவில்லை. அவர்கள் மக்கள் நலனைக் கருத்திற் கொள்ளாது தமக்கான தனிச் சலுகைகள் மற்றும் வருமானங்களுக்காக ஒருவரையொருவர் நெருக்கியடித்துக் கொள்கின்றனர்.

அரசியல்வாதிகளின் இழிவான தரத்தைப் பேணி வைப்பதற்குத் தேவைப்படுவது அவர்களுடைய பைத்தியக்காரத்தனமான திட்டங்களும் மலிவான பகட்டு வார்த்தைகளேயாகும்.

நாட்டுமக்களின் பாதுகாப்பு உரிமைகள், நலன்கள் மற்றும் அவர்களது உயிர்கள் குறித்து அரசாங்கத்தின் மூர்க்கத்தனமான நாணயமற்ற அலட்சியப்படுத்தல் என்பவை நல்ல உதாரணங்களாகும்.

பாதுகாப்புப் படையினரால் செய்யப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பான உண்மைகளைக் கண்டறிவதற்காக ஓர் நம்பத்தகுந்த விசாரணையை நடத்துவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது. எல்.ரீ.ரீ. ஆதரவாளர்கள் பிரச்சாரம் செய்வது போல அரசாங்கம் திணறியடித்துக் கொண்டு ஆதாரங்களை நிராகரிக்கின்றது.

அரசாங்கத்தின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும், நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் ஆழமான குறைபாடுகள் உள்ளன. இது சர்வதேச தரத்தினைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன் சுமத்தப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பில் முறைமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவுமில்லை.

கடந்த மூன்று தசாப்தங்களாக நடைமுறையில் இருந்துவந்த அவசரகால விதிமுறைகளை சென்ற ஆவணி மாதத்தில் செல்லுபடியற்றதாக்கியது. எனினும் பரந்தளவில் தடுத்து வைக்கும் அதிகாரம் ஏனைய சட்டங்கள் மற்றும் புதிய விதிமுறைகளின் கீழ் இன்றும் நடைமுறையிலேயே இருக்கின்றன. இன்னும் பல ஆயிரக்கணக்கானோர் விசாரணைகள் ஏதுமின்றி வழக்குகள் எதுவும் தொடரப்படாத நிலையில் சர்வதேச சட்டத்தை மீறும் வகையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

நட்டத்தில் இயங்குபவற்றைச் சீர்ப்படுத்தி மேம்பாடடையச் செய்வதே தேசியமயப்படுத்தல் என்பதன் அடிப்படைக் கோட்பாடாகும். அரசாங்கத்தின் இலக்கு அதுவாகவே இருக்குமேயானால் தொடர்ந்தும் பணி நஷ்டத்தில் இயங்கிவரும் 'மிகின் லங்கா ஏயர்லைன்ஸ்' அல்லது மின்சார சபை இவையிரண்டினையும் அரசாங்கம் மேலும் பார்த்துக் கொண்டிருப்பதற்கு அவசியமேயில்லை.

அந்தவகையில் 'ஹில்ரன் ஹொட்டல்' கோல்டிங் கம்பனி என்பன தவறாக நிர்வகிக்கப்பட்டன என்ற ஒரு குற்றச்சாட்டுடன் தேசியமயமாக்கப்பட்டன. ஆயினும் ஒருசில தேசியமயமாக்கப்படவேயில்லை. அங்ஙனம் செய்வதென்பது அரசுக்கும் கடினமாக இருந்திருக்கலாம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சரியான ஒலிகளை உரிய நேரத்தில் எழுப்புவதிலும் சிறந்தவர். அத்துடன் பொலிஸ்காரன் விளையாட்டிலும் சிறந்தவர். இப்பொழுதிருக்கையில் அவர் தனது சகோதரர்களுக்கும் அடியாட்களுக்கும் பொலிஸ்காரன் விளையாட்டு விளையாடுவதற்கு சுதந்திரமும் அனுமதித்துள்ளார்.

***சண்டே லீடர் பத்திரிகையில் நிரோஷிகா சான்ஸ் எழுதிய கட்டுரை.***

**தமிழில் ஜஸ்ரின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

19, செப்ரெம்பர் - 25 செப்ரெம்பர், 2012

95, ஜெயந்த மல்லிமாரச்சி மாவத்தை,
கொழும்பு-14, டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 -5

E-mail: editorial@sudaroli.com

## தலைமைகள் மக்களை ஏமாற்ற முடியாது!

தாம் சார்ந்த மக்களுக்கு விசுவாசமாக இருக்க வேண்டிய அரசியல்வாதிகள் பதவிகளுக்கும் சலுகைகளுக்கும் விலை போகின்றமை இந்நாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற ஒன்றுதான். ஆனால், தனிமனிதர்களை தலைவர்கள் என்று கொண்டாடிய காலம் போய், கொள்கைகளுக்கு முன்னுரிமை வழங்குகின்ற உணர்வு இன்று பொதுமக்கள் மத்தியில் மேலோங்கி வருகின்றது.

குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றால் அந்த அமைப்பைத் தவிர தங்கள் உரிமைகளுக்காக குரல்கொடுக்கக்கூடிய அமைப்பு வேறெதுவும் இல்லை என தமிழ் மக்கள் நம்புகின்றார்கள். தனிநபர்களை விடவும் அமைப்பையே தமிழ் மக்கள் நம்புகின்றார்கள் என்பதற்கு சில உதாரணங்களைக் கூட குறிப்பிடலாம். கூட்டமைப்பிலிருந்து முரண்பட்டுப் பிரிந்து போனவர்களை கடந்த சில தேர்தல்களில் தமிழ் மக்கள் நிராகரித்திருக்கின்றார்கள். அவர்கள் தனிப்பட்ட வகையில் நல்லவர்களாக இருந்தாலும் கூட அமைப்பையே மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

அது மட்டுமல்லாமல் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை மக்கள் தங்கள் தலைவர்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்பதையும் விரும்புகின்றார்கள். இந்த ஒற்றுமையினூடாகவே ஒடுக்கப்படும் தங்களுக்கான குரல் உறுதியானதாக அமையும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு.

மலையகத்தில் கொள்கை ரீதியாக எதிரும் புதிருமாக செயற்பட்ட கட்சிகளான ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, மறைந்த சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியவை கூட்டுச்சேர்ந்ததால் சப்ரகமுவ மாகாணத்தில் இரண்டு ஆசனங்கள் கிடைத்திருக்கின்றது. ஒரு ஆசனத்தையே இக்கூட்டு எதிர்பார்த்திருந்ததாகவும் ஆனால், மக்களின் ஆதரவினால் இரண்டு ஆசனங்கள் வெல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தங்களின் தலைமைகள் ஒன்றிணைய வேண்டும் என்கிற மக்களின் கருத்து வெளிப்பாடாகவே இதனையும் நோக்கலாம்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இம்முறை முஸ்லிம் காங்கிரசுக்கு கிடைத்த வாக்குகள் முஸ்லிம் மக்களின் கருத்து வெளிப்பாடாகவே அமைந்தது. இத்தேர்தலில் அரசாங்கத்துடன் சேராமல் தனித்து முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட வேண்டும் என்பது கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களால் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு விடுக்கப்பட்ட அழுத்தமாகும். அரசாங்கத்துடன் சேர்ந்து நின்றால் மக்கள் தங்களை நிராகரித்து விடுவார்கள் என்பதாலும், கட்சியில் தனது தலைமைக்கும் சிக்கல் வரலாம் என்கிற அச்சம் காரணமாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் திரு.ரவுப் ஹக்கீம் தனித்துப் போட்டியிடுவதென்ற முடிவை எடுத்தார்.

கிழக்கில் முஸ்லிம் மக்கள் அரசாங்கத்தின் மீது கொண்டுள்ள அதிருப்திகளையும் அவநம்பிக்கைகளையும் புரிந்துகொண்ட அவர் தேர்தல் கூட்டங்களில் அரசாங்கத்தைக் கடுமையாகச் சாடிப் பரப்புரை செய்ததை யாவரும் அறிந்ததே. இப்போது தேர்தல் முடிவடைந்து கிழக்கின் ஆட்சியைத் தீர்மானிக்கின்ற சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் திகழ்கின்ற நிலையில் அவரால் மக்களின் உணர்வுகளைப் புறக்கணிக்க முடியுமா? அவ்வாறு செய்தால் அதனை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா?

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தமிழ் பேசும் மக்கள் என்கிற வகையிலும், ஒடுக்கப்பட்டு வரும் சிறுபான்மையினர் என்கிற வகையிலும் ஒன்றிணைய வேண்டிய ஒரு காலகட்டத்தில் உள்ளனர். இது அம்மக்களின் எதிர்காலத்திற்கான வரலாற்று திருப்பு முனையாக அமையவேண்டும் என இரு தரப்பிலுள்ள பொதுமக்களும் புத்திஜீவிகளும் விரும்புகின்றனர்.

கடந்த காலங்களில் பல கசப்பான சம்பவங்கள் இருதரப்பிற்குமிடையில் விரிசலையும், பகைமை உணர்வையும் ஏற்படுத்தியிருந்ததை மறந்து விடமுடியாது. ஆனாலும், ஒரு புதிய காலகட்டத்திற்குள், சிறுபான்மை மக்களின் இருப்பே அச்ச நிலைக்குள்ளாகியுள்ள ஒரு சூழ்நிலையில், பழையவற்றை மறந்து புதிய தொடக்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என இரு சமூகங்களும் விரும்புகின்றன. மக்களின் அந்த நம்பிக்கையினையும் எதிர்பார்ப்பினையும் தலைமைகள் புறக்கணித்தால் தலைமைகளைத் தூக்கியெறிய மக்கள் தயங்க மாட்டார்கள். ஏனெனில், தலைவர்கள் மக்களை வழிநடத்தும் காலம் போய், தலைவர்களை மக்கள் வழிநடத்தும் காலம் வந்து விட்டது.

# வேலையற்றோர் வீதம் அதிகரிப்பு!

- ஜெகநாதன்



நாட்டின் மொத்த சனத்தொகையான இரண்டு கோடி மக்களின் மத்தியில் 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடைய இளம் சந்ததியினரில் வேலை யற்றிருப்போரின் வீதம் 21 வீதமாக அதிகரித்துள்ளது.

இது 2009 ஆம் வருடத்தில் இருந்ததை விட 2 வீதத்தால் அதிகரித்துள்ளது என சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி எம்.ரட்நாயக்கா தெரிவிக்கின்றார்.

உலகளாவிய ரீதியாக எடுக்கப்பட்ட புள்ளிவிபரத் தகவல்களின் பிரகாரம் எமது நாடு வேலையற்றோர் வீதத்தில் 180 நாடுகளில் 39வது இடத்தில் உள்ளது. அதை விடவும் முக்கியமானது என்னவெனில் இவ்வேலையற்றோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் படிப்படியாக எமது நாட்டில் அதிகரித்து வருகின்றதென்பதேயாகும்.

ரட்நாயக்கா கூறுகையில் "தற்பொழுது நாடு பூராவும் அபிவிருத்தித் திட்டங்களும் வேலைகளும் அதிகரித்தளவில் நடைபெறுகின்ற வேளையிலும், அதன் நிமித்தம் வேலைவாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படும் நிலையிலும் இவ்விதமாக வேலைவாய்ப்பின்மை அதிகரித்துச் செல்வது விளக்க முடியாத ஒன்றாகவே உள்ளது. ஆனால், அது குறித்து விமர்சிக்க இயலாததாகவும் உள்ளது. எனினும் இவை அநேகமாகப் பின்தங்கிய கிராமப்புறங்களிலேயே இருக்கக் கூடுமென்பதை அனுமானிக்கக் கூடியதாகவுள்ளது" எனவும் தெரிவித்தார்.

எனினும், அவர் இலங்கையின் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கியதான வேலையற்றோர் தொகை 2010இல் இருந்த 5.6% இப்பொழுது 4.2% மாக குறைந்துள்ளது எனவும் குறிப்பிடத் தவறவில்லை.

பொருளாதார நிபுணரான கறோன் திஸ்ஸநாயக்கா இளைஞர்கள் மத்தியில் இத்தகைய வேலைவாய்ப்பின்மைஅதிகரிப்பு ஓர் அறிந்து கொள்ள முடியாத புதிராக உள்ளது எனத் தெரிவித்துள்ளதோடு அபிவிருத்தியடைந்துவரும் ஓர் நாட்டில் வேலையற்றோர் எண்ணிக்கையை அதிகரிக்க விடாது பார்த்துக் கொள்ளுதல் கட்டாயமானதொன்றாகும். ஒரு சிலரின் உழைப்பில் பலர் தங்கியிருந்து வாழ்வதினால் சமூக மேம்பாடு பாதிப்படையும் சந்தர்ப்பங்கள் அநேகம் உண்டு. மேலும் இலங்கையில் அரச ஊழியர்கள் வேலையில் இருந்து ஓய்வுபெறும் வயதெல்லையும் நீடிக்கப்படவில்லை. எனவே, அவர்கள் அவர்களது பதவிக்கால எல்லைக்கு மீறி நீண்டகாலத்திற்கு வேலைகளில் தங்கியிருக்க மாட்டார்கள். அப்படியிருக்கையில் நாட்டில் வேலையற்றோர் எண்ணிக்கை அதிகரிக்கும் வேகமானது அதற்குத் துரிதமான மக்கள் சனத்தொகைப் பெருக்கமே காரணமாக அமைதல் வேண்டும். ஆனால், சனப்பெருக்கம் அவ்விதமாகவும் இல்லை" என விளக்கிக் கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து கூறுகையில் "இப்பிரச்சினைக்கான் சாத்தியக் கூறு ஒன்று உளது. அது யாதெனில் பட்டதாரிகள் அவர்கள் கற்ற துறையினை விடுத்து பரந்த மனப்பாங்குடன் வேறு துறைகளில் வேலை தேடுவதில் காட்டும் தயக்கமேயாகும். அத்துடன் பட்டதாரிகள் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறியதும் அவர்கள் கற்றுத் தேர்ந்த துறைகளிலேயே வேலைகளில் நுழைந்து விட வேண்டும். அல்லாவிடில் அவர்களின் பல்கலைக்கழகத்தில் செலவழித்த காலம் வீணடிக்கப்பட்டுவிடும் எனக் கருதுகின்றனர். அது மட்டுமன்றி அவர்களில் பெரும்பாலானோர் அரசாங்கத்தின் திணைக்களங்களிலோ அன்றி அரச சார் துறைகளிலோ பணிக்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பின் காரணமாகத் தனியார் துறைகளில் வேலைக்குச் செல்வதில் தயக்கம் காட்டி அதில் அக்கறையெடுப்பதையும் தவிர்த்து வருகின்றனர். இதுவும் வேலையற்றோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணங்களில் ஒன்றாகும்" என அவர் விளக்கமாகக் கூறினார்.

இதேவேளையில், நாட்டில் அபிவிருத்தித் திட்டங்களும் அவற்றினைச் சார்ந்த நிர்மாண வேலைகளும் பரந்தளவில் நடைபெறுகின்ற போதிலும் அத்தகைய நிர்மாண வேலைகளாயினும் சரி, வேறு எதுவித வேலைகளாயினும் சரி சம்பந்தப்பட்ட அமைச்சுக்களினாலோ அன்றித் திணைக்களங்களினாலோ தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கே ஒப்பந்த ரீதியில் பெரும்பாலும் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஒப்பந்தங்களைப் பெற்றுப் பணியில் ஈடுபடும் ஒப்பந்தகாரர்கள் தத்தமது சுய இலாபங்களையே முக்கியமாகக் கருத்திற்கொண்டு அதன்பொருட்டு அரச சேவைகளில் இருந்து ஓய்வுபெற்று ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும் அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் படவரைஞர்கள், நில அளவையாளர்கள் மற்றும் பலதுறை சார்ந்த ஓய்வூதியர்களைக் குறைந்த வேதனத்தில் வேலைக்கு இலகுவில் அமர்த்திக் கொள்கின்றனர். இதுவும் ஒருவிதத்தில் இளம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக் குறைவாக இருப்பதற்கான காரணமாகவும் இருக்கின்றது. இதனைத் தடுப்பதற்குச் சட்ட மெதுவும் இல்லை.

உண்மையில் பல்கலைக்கழகங்களில் பயின்றுவிட்டு வெளியேறும் பட்டதாரிகள் அனைவரும் நிதி வசதி படைத்த செல்வந்தர்கள் எனக் கூறிவிட முடியாது. அவர்கள் தத்தமது குடும்பங்களின் கஸ்ர நிலைமைகள் மத்தியிலும் எப்படியாகினும் பெற்றோர்கள் சகோதர சகோதரிகளை நன்னிலைக்குக் கொண்டு வரும் வகையில் சம்பாத்தியம் பெறும் ஓர் தொழிலை அடைதல் வேண்டுமென்பதே அவர்களது இலட்சியமாக இருந்திருக்குமென்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. அது முற்றிலும் இயற்கையானதொன்றேயாகும். இதனை எவரும் குறை கூறுவதற்கில்லை.

ஆயினும், தற்காலச் சூழ்நிலையினைக் கருத்திலெடுத்து அரச திணைக்கள வேலைகள் குறித்து தீவிர ஆர்வத்தினைக் காட்டாது தனியார் துறைகளிலோ அன்றி நிறுவனங்களிலோ கிடைக்கும் வேலைவாய்ப்புக்களைத் தவற விடாது பயன்படுத்திக் கொள்வது எதிர்கால சுபீட்சத்திற்கு வழிவகுக்கும்.

கிடைக்கும் தொழிலினைப் பயன்படுத்தி வாழ்வினை வளம்படுத்தும் அதே சமயத்தில் தத்தமது கற்கைத் துறைகளுக்கேற்பத் தமது மேம்பாட்டிற்கான வழிமுறைகளைப் பெறுவதில் ஈடுபட வேண்டும் இதுவே புத்திசாலித்தனமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் மு.கா. அரசுடன் இணையப் போகின்றதா?



கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மு.கா. வுக்கு பாரிய தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. கிழக்குத் தேர்தலில் மு.கா. ஒரு பேரம் பேசும் சக்தியாக மாறியதால் இந்த தர்ம சங்கடம் ஏற்பட்டுள்ளது. இந்த தர்ம சங்கடத்தை தவிர்ப்பதற்காக மு.கா. பேரம் பேசும் சக்தியாக வந்திருக்கக் கூடாது. என்ன செய்ய வந்து விட்டது.

அரசு பக்கமாக மு.கா. இணைந்து ஆட்சி அமைத்தால் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் நிலைமை அந்தோ பரிதாபம், தமிழ் முஸ்லிம் இன ஒற்றுமை நோக்கி வரும் நிலையில் தாழியை உடைத்தது போல் ஆகிவிடும். இது தமிழ், முஸ்லிம் இன உறவில் பாரிய நிரந்தர விரிசலை ஏற்படுத்தி விடலாம்.

ஏற்கனவே பௌத்தரும், பேரினவாதமும் இணைந்து வடகிழக்கில் புத்தர் சிலை வைப்பதும், பள்ளிகளை உடைப்பதும், சிங்களப் பத்திரிகைகளில் முஸ்லிம்களுக்கு எதிரான துவேசத்தை அள்ளி வீசுவதுமாக உள்ளன. புலிகளுடன் ஹக்கீம் கூட்டுச் சேர்கின்றார் என்று அதாவுல்லா மேடைகளில் குறிப்பிட்டுள்ளார். இன்னும் பேரினவாதிகள் முஸ்லிம்கள் மீது கடுப்பாகவும், எரிச்சலாகவும் உள்ளார்கள்.

தேர்தல் கணிப்பீடுகளின் படி மட்டக்களப்பில் கூட்டமைப்பின் ஒரு ஆசனம் அதிகாலை வேளையில் திருடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அப்படியானால் எங்களது கணிப்பீட்டின் படி கூட்டமைப்பு 12 ஆசனங்களுடன் 2 போனஸ் ஆசனங்களாக 14 ஆசனங்கள் என்பது சரியானதே.

தேர்தல் கணிப்பீட்டின் படி மட்டக்களப்பிலும், ஒரு ஆசனம் அதிகாலையில் திருடப்பட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அப்படியானால் கூட்டமைப்புக்கு 12 ஆசனங்களுடன் 2 போனஸ் ஆசனங்களுமாக 14 ஆசனங்களைப் பெற்று ஐ.தே.க யுடன் இணைந்து கூட்டமைப்பு ஆட்சி அமைத்திருக்கும். அப்படியானால் எங்களது கணிப்பீட்டின்படி கூட்டமைப்பு 14 ஆசனங்களும் மேலதிகமாக ஒரு ஆசனம் பெறக் கூடிய அதிக வாய்ப்பு உள்ளதாக பதிவு செய்திருந்தோம். மோசடி மூலமாக கூட்டமைப்பின் 1 ஆசனம் திருடப்பட்டதன் மூலம் மு.கா. பேரம் பேசும் சக்தியாக மாறி இப்போது ஒரு பாரிய தர்ம சங்கடத்தை உருவாக்கி உள்ளது.

இப்போது மு.கா. அரச தரப்போடு பேசி வருகின்றது. இந்தப் பேரம் பேசும் முறையானது நாட்டிலுள்ள முஸ்லிம் சமூகத்தின் மீது அதிக அக்கறை காட்டியதானால், மத்தியில் முழு அமைச்சும் அரை அமைச்சும் மாகாணத்தில் முதலமைச்சும் 2 மாகாண அமைச்சும் என மு.கா. அரசிடம் கேட்டு வருகின்றதாம்.

மு.கா. அரசு பக்கமாக இணைவதற்கான அதிக வாய்ப்புக்கள் உள்ளன. மு.கா. அரசு பக்கமாக இணைவதற்காக முதலாவது முன்வைக்கும் கோரிக்கை அமைச்சுப் பதவிதான். மு.கா.வுக்கு முஸ்லிம்கள் கொடுத்துள்ள ஆணையானது அரசுடன் இணைவதற்கான ஆணை அல்ல. முஸ்லிம்களின் பாதுகாப்பு, உரிமை சம்பந்தப்பட்ட தேவைகளுக்காகவே மக்கள் மு.கா.வுக்கு வாக்களித்தார்கள். ஆனால் இப்போது முஸ்லிம்கள் மகிந்த கம்பனியிடம் அடகு வைக்கப்படப் போகின்றார்கள். கிழக்கு மாகாண முஸ்லிம் புத்திஜீவிகள் மட்டுமல்லாது, தமிழ் புத்தி ஜீவிகளும் மு.கா. கூட்டமைப்புடன்தான் இணைந்து ஆட்சி அமைக்க வேண்டும் என்று தெரிவிக்கின்றார்கள்.

இந்த இனவாத அரசு முஸ்லிம்களின் வர்த்தகத்தின் மீதும், தமிழர்களின் கல்வியின் மீதும் மிகவும் பொறாமைப்படுகின்றது. குறிப்பாக முஸ்லிம்களின் வியாபாரத்தின் மீது மிகவும் வயிற்றெரிச்சல் கொண்டு முஸ்லிம்களை நெருக்கி வருகின்றது.

கூட்டமைப்புடன் மு.கா. இணையுமானால் முதலமைச்சர் உட்பட எந்த விட்டுக்கொடுப்புக்கும் கூட்டமைப்பு தயார் என்று பகிரங்கமாகவே கூறியது. ஆனால் ஹக்கீம் அரசு பக்கம்தான் சாயப்பார்க்கின்றார். மு.கா. அரசு பக்கம் சாய்வது என்பது இந்த அரசு முஸ்லிம்கள் மட்டுமல்லாது தமிழ் சமூகத்திற்கும் செய்துள்ள, இன்னும் செய்யத் திட்டமிட்டுள்ள கொடுமைகளுக்கான அனுமதியாகவே பார்க்கப்படும்.

அரசு பக்கமாக இணைந்து கொண்டு அரசாங்கம் செய்யும் கொடுமைகளை மு.கா. தட்டிக் கேட்குமா? அந்தளவுக்கு திராணி மு.கா. வுக்கு உள்ளதா. ஹக்கீம் பள்ளி உடைப்பு பற்றியோ அல்லது முஸ்லிம்களின் பிரச்சினை பற்றியோ எந்தவொரு அமைச்சரவைக் கூட்டத்திலும் பேசியது கிடையாது என்று ஜனாதிபதி உட்பட அமைச்சர்களும் தெரிவிக்கின்றார்கள். இப்போது அரசுடன் பேரம் பேசும் ஹக்கீம் அம்பாறை கச்சேரி பற்றியோ, அம்பாறை, திருகோணமலை தமிழ் அரசாங்க அதிபர் பற்றியோ பேசப்பட்டதாகவில்லை. ஆனால் அமைச்சுப் பதவி மட்டும்தான் பேரம் பேசப்படுகின்றது.

இது மு.கா. வை நம்பி வாக்களித்த முஸ்லிம் மக்களை மகிந்த கம்பனியிடம் அடகு வைப்பதற்கு சமமானது. பள்ளி உடைப்புக்கும், சிங்களக் குடியேற்றத்திற்கும், முஸ்லிம்கள் மீது இந்த அரசால் மேற்கொள்ளப்படும் கொடுமைகளுக்கும் எதிராக முஸ்லிம்களின் வாக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மு.கா. அரசுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இன்னும் பல பள்ளிவாசல்கள் பௌத்தத்தில் குறியில் உள்ளன. மூதூர் 3 ஆம் கட்டையில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. சீனாவின் உதவியின் மூலம் சிங்கள இராணுவக் குடியிருப்புக்கள் அமைக்கப்படவுள்ளன. முஸ்லிம்களின் காணிப் பிரச்சினை உள்ளது. இவைகளுக்கு முழு அங்கீகாரம் வழங்குவதற்காக அரசுக்கு முட்டுக் கொடுக்க மு.கா. தயாராகி விட்டது. மு.கா. பேரம் பேசுகின்றது என்று மக்களை ஏமாற்றி விட்டு சோரம் போய்விட்டது.

ஆயுத இயக்கங்கள் தலை தூக்குவதற்கு முன்பு முஸ்லிம்களின் அரசியல் தாயகம், அரசியல் களங்கள், அரசியல் தாய்வீடு அண்ணன் தம்பி உறவுகள் நல்லது கெட்டது, முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்தது எல்லாமே தமிழரசுக் கட்சிதானே. ஆயுத இயக்கங்கள் தலைதூக்கிய பின்புதான் தமிழ் கட்சிகளுடனான உறவுகள் முற்று முழுதாக அறுந்துவிட்டது. இப்போதைய நிலை ஆயுத இயக்கங்கள் இல்லாத நிலையாக மாறியுள்ளது. ஆயுத அச்சுறுத்தல் [illegible]

முஸ்லிம் உறவுக்கான எல்லாக் கதவுகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் கூட்டமைப்புடன் இணைந்து இணக்க அரசியல் நடாத்தக்கூடிய கட்சியொன்று அவசரமாக, அவசியமாக உதயமாக வேண்டிய கட்டாய தேவையொன்று முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. கூட்டமைப்புடன் முஸ்லிம்கள் பயணிக்க வேண்டிய இடைவெளியொன்று இன்னும் நிரப்பப்படாமல் உள்ளது. அந்த இடைவெளியை நிரப்புவதற்கு மு.கா. மறுத்து வருகின்ற நிலையில் முஸ்லிம்கள் மத்தியில் புதிய உதயமொன்று மருதமுனையில் இருந்து உருவாக வேண்டியுள்ளது. ஏனெனில் எப்போதும் தமிழர்களுடன் ஒற்றுமையாக அன்யோன்யமாக வாழும் மக்களின் பிரதேசம் மருதமுனையாகும். அங்கிருந்துதான் இந்தச் சக்தி கிளம்ப வேண்டும். மருதமுனை புத்திஜீவிகளே சிந்தியுங்கள்.

மு.கா. வுக்கு கிழக்கில் இருந்து ஒரு தலைவர் பதவி வகித்திருந்தால் நிச்சயம் அந்தத் தலைவர் முஸ்லிம்களின் நன்மை எதிர்காலம் கருதி கூட்டமைப்புடன்தான் கூட்டுச் சேர்வதற்கு இணங்கி இருப்பார். ஏன் மறைந்த தலைவர் அஷ்ரப் உயிருடன் இருந்திருந்தாலும் கூட்டமைப்புடன்தான் இணைந்து இருப்பார்.

கிழக்கு மாகாண தேர்தல் பிரச்சாரத்தின் போது அரசுக்கு எதிராக ஹக்கீம் முழக்கமிட்டார். பள்ளிவாசல்கள் தாக்கப்படுகின்றது. சிங்களவாதம் சிறுபான்மையினங்களை நசுக்குகின்றது என்றெல்லாம் வீராவேசம் பேசிய ஹக்கீம் எந்த வகையில் அரசோடு இணைவது? மு.கா. வுக்கு கிழக்கு முஸ்லிம்கள் அளித்துள்ள வாக்கானது அரசுக்கு எதிரான வாக்குகளே. மு.கா.வுக்கு மக்கள் இட்ட ஆணையானது அரசுக்கு எதிரான ஆணைகளே. மு.கா. பேரம் பேசும் சக்தி என்பதே உண்மை. தற்போது மு.கா. வுக்கு கிடைத்துள்ள 7 மாகாண உறுப்பினர்களும் எந்தவொரு அரசியல் அனுபவமும் இல்லாதவர்கள். இவர்களால் எந்தவொரு பலனும் முஸ்லிம் சமுதாயம் பெறப்போவதில்லை.

மு.கா.தலைவர் ஹக்கீம் கூட அரசிடம் கேட்கும் கோரிக்கை என்பது மக்கள் பிரச்சினை என்பது இல்லையே. குறிப்பாக மு.கா. முஸ்லிம் சமுதாயத்திற்கு எந்தவொரு நன்மையையும் பெற்றுக் கொடுக்கப் போவதில்லை. இன்று கிழக்கில் வெற்றிபெற்றுள்ள அத்தனை உறுப்பினர்களும் 50 லட்சத்திற்கு மேல் செலவு செய்துள்ளார்கள். இப்போதைய முஸ்லிம் அரசியல் என்பது பணம் போட்டு, பணம் பார்க்கும், பணம் [illegible]ட்டு வியாபாரமாக மாறிவிட்டது. 50 லட்சத்திற்குக் குறைந்த செலவு செய்துள்ளவர்கள் தான் தற்போது தோற்றுள்ளார்கள்.

பணம் போட்டு, பணம் பார்க்கும் வியாபாரத்தில் மக்களுக்கான நன்மை கிடைக்குமா? சொத்துக்களை விற்று, வயல், காணிகளை விற்று இந்த அரசியலுக்காக செலவு செய்த ஒவ்வொரு உறுப்பினர்களும், செலவு செய்த பணத்தை எப்படிப் பெறுவது? கொந்தராத்து வேலைகள் மற்றும் மாகாண சபையால் வழங்கப்படும் 1 கோடி ரூபா பெறுமதியான வாகன பேர்மிட் போன்றவற்றின் மூலமாகத்தானே பெற வேண்டும். அதனால்தான் இன்று முட்டி, மோதிக் கொண்டு, நானா நீயா என்று மல்யுத்தம் செய்து ஆளை, ஆள் வெட்டிக் குழிபறித்து வெற்றியடைந்துள்ளார்கள். மு.கா. உருவான காலத்தில் இல்லாத இந்தப் போட்டி ஹக்கீம் மு.கா. தலைவரான பின்புதான் ஏற்பட்டுள்ளது. முஸ்லிம்களிடம் உச்ச கட்டப் பதவிப் போட்டியும் அதிகார மோகமும், அரசியல் ஆசையும் தலைவிரித்தாடும் ஒரு இடத்தில், ஒரு அணியில், ஒரு குழுவில் முஸ்லிம் சமூகத்தின் நலனை எதிர்பார்க்க முடியுமா?

நல்ல சகுனம், நல்ல வாய்ப்பு கைகூடி வந்துள்ளது. இந்த நிலையில்தான் தமிழ், முஸ்லிம் சமூகம் ஒற்றுமைப்பட வேண்டிய அவசியத் தேவையிலுள்ளது. இந்த வாய்ப்பையும் தவறவிட்டால் இந்த ஜென்மத்தில் முஸ்லிம், தமிழ் ஒற்றுமை என்பது பாரிய பள்ளத்திலும், இடைவெளியிலும் போய்விடும். தனது சமூகமா? கதிரைப் பதவியா என்பதற்கு அப்பால் சிங்கள பௌத்த பிடிக்குள் முஸ்லிம்களை அடகு வைப்பதை விட்டு முஸ்லிம்களை காப்பாற்ற வேண்டிய பாரிய பொறுப்புக்குள் ஹக்கீம் தள்ளப்பட்டுள்ளார்.

இந்தக் கட்டுரையை எமது வாசகர்கள் படித்துக் கொண்டிருக்கும் போது மத்தியில் பல அமைச்சுக்களும், மாகாணத்தில் 2 அமைச்சுக்களும் மு.கா. பெற்று அல்லது பெறுவதற்கான இணக்கப்பாட்டுக்கு வந்து அரசு கிழக்கு மாகாணத்தில் மு.கா. துணையோடு ஆட்சி அமைப்பதற்கான செய்தி வெளியாகி இருக்கும்.

கூட்டமைப்பை நம்ப வைத்து கழுத்தறுத்த செயலாகவே இது அமைந்து விட்டது. சர்வதேசத்தில் பலம் பெற்றுள்ள தமிழ் இனத்தை காட்டி உதைத்து விட்டு மு.கா. வெறும் அமைச்சுப் பதவிகளுக்காக அரசிடம் சோரம் போயுள்ளதானது தமிழ் பேசும் இனத்தின் சாபக் கேட்டுக்கு சமமானது. அநீதிகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் மு.கா. இந்த அரசுக்கு ஒரு அங்கீகாரத்தை வழங்கி விட்டது. இதுவொரு தேசிய வரலாற்றுத் துரோகம் மட்டுமல்லாது மன்னிக்க முடியாத வரலாற்றுத் துரோகமாகும்.

இந்தியா, அமெரிக்கா கூட கூட்டமைப்புடன் மு.கா. ஆட்சியமைக்க வேண்டும் என்று ஹக்கீமுக்கு பாரிய அழுத்தம் கொடுத்துள்ள நிலையில் அரசுக்கு மு.கா. முட்டுக் கொடுத்து விட்டது.

மு.கா. மனச்சாட்சிக் கட்சி என்று மார்தட்டிக் கொண்டு, முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு இந்த அரசிடம் அதனை அடகு வைத்துவிட்டார்கள். முஸ்லிம்களின் இணக்க அரசியல் தோல்வியுற்று வரும் நிலையில், இலங்கையுடன் சீனா நெருங்கி வரும் நிலையில், முஸ்லிம்களின் இருப்புக்கு ஆபத்துக்கள் ஏற்பட்டுள்ள நிலையில் முஸ்லிம்கள் மீது குறிவைத்து பல இணையத்தளங்கள் இஸ்லாத்திற்கும், இஸ்லாமியர்களுக்கும் எதிராக பல தாக்குதல்கள் தொடுத்துள்ள நிலையில் அரசுக்கு மு.கா. முட்டுக் கொடுத்துள்ளது என்பது எதிர்கால இலங்கை முஸ்லிம்களுக்கு ஆபத்தான முன்னெடுப்பாகும்.

எம்.எம்.நிலாம்டீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# வெறி

ஷபீர் ஹாபீஸ்
ஏறாவூர் - 01



விடிகாலைக்கு முன்னமே அவன் வெளிப்பட்டு விட்டான். எங்கும் அழுத்தமாகக் கவிந்திருந்த இருள் பயமுறுத்திற்று. ஆனாலும் அவன் பயப்படவில்லை. வைராக்கியத்துடன் பாதையில் கால்பதித்தான்.

அவனது உள்ளம் இறுகிக் கிடந்தது. இதற்கு முன் எப்போதுமே அவன் அப்படியிருந்ததில்லை. புதிதாக இதழ் விரித்த பூப்போல் சிரிப்பான். மென்மையாகப் பேசுவான். மெதுவாக நடப்பான். அனைவரையும் நேசிப்பான். அன்பாகப் பழகுவான். ஆனால் இப்போது எல்லாவற்றுக்கும் மாறுபட்டிருந்தான். அவனது இரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. மூச்சுக் காற்று உஷ்ணம் துப்பிற்று.

வீட்டிற்குள்ளிருக்கும் மனைவியைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. வீட்டிலிருந்து வெளிப்படும் போது அவன் அவதானித்தான். அவள் மல்லாந்து படுத்திருந்தாள். முந்தானைச் சேலை விலகியிருந்தது. கைகால்கள் துவண்டியிருந்தன. விழி பிதுங்கியிருந்தது. திறந்திருந்த வாயினூடு நாக்கு தலைநீட்டியிருந்தது. கழுத்தை இறுகச் சுற்றியவாறு ஒரு நைலோன் கயிறும் இருந்தது.

அவன் வெளிப்பட்ட போது அவள் தடுக்கவில்லை. அவளால் தடுக்க முடியாது என்று அவனுக்குத் தெரியும். ஏனெனில் அவளது உடல் மட்டுமே அங்கிருந்தது. உயிரைத்தான் அவன் திருகி எறிந்துவிட்டானே.

அவனது முகத்தில் இப்போது மலர்ச்சி தோன்றிற்று. குரூரமான மலர்ச்சி. நைலோன் கயிற்றுக்கு நன்றி கூறிக் கொண்டான்.

ஒரு சமுதாயத்தின் அசிங்கத்தைத் துடைத்து விட்டாய். ஒரு நச்சுக் களையை வேரோடு பிடுங்கி விட்டாய். ஒரு பெரும் நாசத்தை முற்றாக முறியடித்து விட்டாய். நன்றி நைலோன் கயிறே.

அவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான். அந்த இருளின் செறிவிலும் அவனது முகம் பளபளத்தது. அவன் அழகானவன். ஆறடி உயரத்தில் கம்பீரமாகவும் இருந்தான். அவசரத்தில் சட்டையை மாட்டியிருந்தான். அதனால் பொத்தான்கள் சரியாகப் போடப்படவில்லை. குளிர்காற்று நெஞ்சில் மோதியது. அந்தச் சூழலில் அது அவனுக்கு இதமாக இருந்தது. விரைப்புடன் நடந்தான்.

ஆறு மாதங்களாக அவனுக்குள் கனன்று கொண்டிருந்த நெருப்பு. இரவோடு அதற்கு நீரூற்றி அணைத்தாயிற்று. இனி ஆசுவாசப்பட வேண்டும். மனம் லேசாக வேண்டும். கவலைகளைக் களைந்து வீசவேண்டும். மீண்டும் வியாபாரத்தில் தீவிரம் காட்ட வேண்டும். அவன் தனக்குத் தானே உபதேசித்துக் கொண்டான்.

அவன் பெற்றோரைக் காதலித்தான். வியாபாரத்தைக் காதலித்தான். திருமணத்தின் பின் மனைவியைக் காதலித்தான். ஆனால் அவளோ அவனது பணத்தை மட்டுமே காதலித்தாள். அவனது அன்பு அவளுக்கு சுமையாயிற்று. அவனது பாசம் அவளுக்கு சிறையாயிற்று. அவள் சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் துடித்தாள். ஆடம்பரத்திற்கும் ஆணவத்திற்கும் சுதந்திரமெனப் பெயரிட்டாள். அவனது காதலைப் புறக்கணித்தாள். அவனது அழைப்பை நிராகரித்தாள். அவனது பணம் மட்டுமே அவளுக்குத் தேவையாயிற்று.

மனைவியின் பழக்கவழக்கங்கள் அவனை வெகுவாகத் தாக்கின. ஊரார் தாறுமாறாகப் பேசத் தொடங்கினர். அவன் புகைப்பதாகக் கூறினர். மதுவுக்கு அடிமையாகி விட்டதாய்க் கதைப்பட்டனர். வீதிகளில் விழுந்து கிடப்பதாகக் குமுறினர்.

அவன் பொறுமையிழப்பதுமுண்டு. அப்போதெல்லாம் அவனது ஏழைத்தாயின் கெஞ்சல் அவனது கைகளைக் கட்டிப்போட்டு விடும். ஆனால் இரவு அவன் முற்றாகப் பொறுமையிழக்க வேண்டியதாயிற்று. சில கதைகள் காதுக்குள் உலவின. அவை காதுகளினூடு அவனது நெஞ்சுக்குள் நெருப்பைக் கொட்டின. அவன் முற்றிலும் எதிர்பார்க்காத செய்தி அது. ஆனால் முற்றாக அவனை நொறுங்க வைத்த செய்தி. பிற ஆடவன் ஒருவனுடன் அவள் கள்ளத் தொடர்பு வைத்துள்ளாளாம்.

இரவு ஏழுமணிக்கு முன்பாகவே அவன் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டான். கேள்விப்பட்ட கதைகள் மனதை நைத்தன. உண்மையை அறிய வேண்டுமென்ற ஆவல் உந்திற்று. தெருக்கோடியில் காரை நிறுத்தினான். மழைத்தூறல் அவனைக் குளிர்வித்தது. அவனது வன்மத்தீயை அணைக்க முயன்றது. எதிரில் வந்தோர் அவனை அடையாளங் கண்டனர். நின்று பேச முயன்றவர்களை அவன் தவிர்த்தான். அவனுக்குத் தெரியும். அவனது நடத்தைக்கான காரணம் பற்றி அவர்கள் கேட்பர். மனைவியைப் பற்றி முறையிடுவர். எல்லாம் முடிந்த பின் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டு அப்பால் செல்வர். அவர்களுக்கெல்லாம் விடை சொல்லும் மனோநிலையில் அவன் இல்லை.

வீட்டை நெருங்கி விட்டான். வெளியில் நின்றவாறே நோட்டமிட்டான். அகன்றுயர்ந்த வாயிற் கதவு. முற்றத்தில் செழித்துக் குலுங்கும் மலர்ச்செடிகள். பளபளப்பான புற்தரை. மலர்களை வருடி நறுமணத் தென்றல். அவனது உழைப்புத் திறனின் பிரதிபிம்பம் அந்த வீடு. அவனும் மனைவியும் மட்டுமே அங்கு வாழ்ந்தனர். திருமணத்தின் பின் சில நாட்களிலேயே பெற்றோர் பிரிந்து சென்று விட்டனர். அவளது நடவடிக்கை பிடிக்கவில்லை என்றனர். அவளது பணமோகத்துடன் தம்மால் தாக்குப் பிடிக்க முடியாதெனக் கூறினர். எனினும் நீ சேர்ந்து வாழு எனப் பெருந்தன்மையுடன் விலகிச் சென்றனர்.

அவன் வாயிற் கதவைத் திறந்தான். சாத்திவிட்டு உள்ளே நுழைந்தான். அமைதியாக நின்றிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவனது கண்ணில் பட்டது. அடர்ந்த செடிகளிடை அது பாதி மறைந்து தெரிந்தது. முன்வாசலைத் தவிர்த்தான். பின்வாசலை நோக்கி மெல்ல நகர்ந்தான். உள்ளிருந்து கதைக்கின்ற சிரிக்கின்ற ஒலிகள் கசிந்தன. ஆண், பெண் குரல்கள் மாறி மாறி ஒலித்தன. பெண்குரல் அவனது மனைவியுடையது. ஆண்குரல்!?

பின்கதவின் அருகே வந்துவிட்டான். தனக்குத் தெரிந்த உத்தியினூடாகக் கதவைத் திறந்தான். சந்தடியில்லாமல் உள்ளே நுழைந்தான். கதவைச் சாத்தித் தாளிட்டான். இப்போது பேச்சுகளும் சிரிப்புகளும் சத்தமாகவே கேட்டன.

அவள் சிரிக்கின்றாள்; சிணுங்குகின்றாள். கூட இருப்பவன் சீண்டுகின்றானோ! இவனுக்கு உள்ளம் பற்றியெரிந்தது.

மாலை இருள் வீடெங்கும் மிதந்தது. படுக்கையறைக் கதவு அரைகுறையாகச் சாத்தப்பட்டிருந்தது. உள்ளே மிருதுவான வெளிச்சம் தெரிந்தது. அவன் தளபாடங்களில் தட்டுப்பட்டு விடாமல் பதுங்கி நடந்தான். இரைக்காகப் பதுங்கும் புலியின் விழிப்பு அவனது கண்களிலிருந்தது. மனதுக்குள் வன்மம் கனன்று கொண்டிருந்தது.

மண்டப அறை விசாலமானது. அதைத் தாண்டினால் எதிர்ப்படுவது படுக்கையறை. நெருங்கிச் சென்று நின்று கொண்டான். செவிப்புலனைக் கூர்மையாக்கி ஒலிகளை உள்வாங்கினான். கனமான மூச்சுச் சத்தங்கள் அவன் காதுகளைக் கடித்தன. இதயம் பலமாக அடித்துக் கொண்டது. மிகப் பயங்கரமாயின அந்தக் கணங்கள்.

அவனுக்கு அவமானமாக இருந்தது. அவனுக்குக் கோபத்தில் கண்கள் சிவந்தன. பற்கள் நறநறத்தன. நெஞ்சம் எரிந்தது. உடல் முழுக்க உஷ்ணம் பரவிற்று.

மனதைத் தைரியப்படுத்திக் கொண்டான். எதற்கும் துணிந்தவனானான். கைகளில் பலத்தைத் திரட்டினான். கதவினருகே சென்றான். பாதி திறந்திருந்த கதவில் கை வைத்தான். படீரெனக் கதவைத் திறந்து விட்டான். சுவரில் மோதித் திரும்பியது கதவு. அதைத் தள்ளிக் கொண்டு அறைக்குள் நுழைந்தான். உள்ளே பார்த்த போது...

டிரீங்... டிரீங்... டிரீங்...

எழுதிக்கொண்டிருந்த நான் தவம் கலைக்கப்பட்ட முனிவரின் சீற்றத்துடன் அலறிக் கொண்டிருந்த தொலைபேசியில் பார்வையை எறிந்தேன். எழுத்தாளனுக்கு இருக்கும் இயல்பான எரிச்சலும் கோபமும் என் கண்களில் தெறிப்பதை சமையலறை வேலையில் மும்முரமாக இருந்த என் மனைவி கண்டு கொண்டாள். சேலையில் கைகளைத் துடைத்துக் கொண்டே விரைந்து ரிசிவரைத் தூக்கி காதில் பொருத்திக் கதைத்தவள் தயக்கத்துடனும் சங்கடத்துடனும் என்னை நோக்கினாள்.

ஆர்வமாகக் கதையெழுதிக் கொண்டிருக்கும் போது சிந்தனையை அறுப்பது போல் ஏதேனும் தொந்தரவுகள் வந்தால் எனக்கு மிகக் கடுமையான ஆத்திரம் வரும் என்பது அவளுக்குத் தெரியும். 'முக்கியமான போட்டி ஒன்றுக்காக கதை எழுதப் போகிறேன். யாரும் எதுவும் என்னைத் தொந்தரவு செய்யாமல் பார்த்துக் கொள்' என்ற முன்னறிவிப்புடன் தான் பேனையும் தாளுமாக மேசையில் அமர்ந்தேன். மிக நிதானமாக செதுக்கி மூளையைக் கசக்கி வார்த்தைகளைப் பொருத்தி எழுதிக் கொண்டிருந்த கதையின் முக்கிய திருப்பத்தின் போது சிந்தனைகளைத் தறிப்பது போல் ஒலித்த அந்த தொலைபேசியையும் அதைக் கையிலேந்தியவாறு நெளிந்து கொண்டிருக்கும் என் மனைவியையும் முறைத்துப் பார்த்தேன்.

புரிந்துகொண்டு அவள் ஏதோ கதைத்து ரிசிவரைச் சாத்திவிட்டு சமையலறை நோக்கி விரைந்து சென்று மறைந்தாள்.

அருவியெனத் தொடர்ந்து பிரவாகமெடுத்துக் கொட்டிய சிந்தனைகளை ஒருங்கிணைத்து மீண்டும் பேனாவைத் தாளில் பதித்தேன். பேனா முனையில் கதை முட்டிற்று.

...உள்ளே பார்த்த போது அதிர்ந்தான். அவன் கொஞ்சமும் அதை எதிர்பார்க்கவில்லை. கட்டிலில் அவனது மனைவி இருந்தாள். அவளது செல்லப் பிராணி பப்பி. அவளது மடியில் கருண்டு விளையாடிக் கொண்டிருந்தது. முன்னால் தொலைக்காட்சிப் பெட்டி இருந்தது. நிகழ்ச்சியொன்றில் ஆண் அறிவிப்பாளர் ஒருவர் பேசிக் கொண்டிருந்தார்.

அவன் நிதானமாக அவதானித்தான். சொற்ப நேரத்துக்குள் அனைத்தையும் விளங்கிக் கொண்டான். தன்னை நொந்தான். அவள் இவனை வியப்புடன் நோக்கினாள். கண்களால் மிரண்டாள். வினாக் குறியை பார்வையில் வீசினாள்.

அவன் தன்னை சுதாகரித்துக் கொண்டான். சாதாரணமாக அங்குமிங்கும் பார்த்தான். தொலைக்காட்சிப் பெட்டியை நிறுத்தினான். மின்விளக்கை எரியவிட்டான். உடை மாற்றினான். மௌனமாக அறையிலிருந்து வெளிப்பட்டான்.

*(அடுத்த இதழில் முடிவுறும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## சாட்சிகள் இல்லாமல்...



எனக்கான
வாழ்க்கைப் பாதையை
அணு அணுவாய் நடந்து
முடிவிட்ட்தை
நெருங்கி விட்டேன்
ஆனால் என் பின்னால்
எந்தத் தடயமும்
தென்படவே இல்லை.
உன் சந்திப்பு
நிகழாமல் போனதால்
என் வாழ்வின்
சாட்சிகளை இழந்து
குற்றவாளி ஆனேன்.

அஜிகா.

## புரிந்துணர்வு



புரிந்துணர்வில்லாத வாழ்க்கை
சிதைந்துபோகும்
புடம் போடாத தங்கம்
மெருகு பெறாது!

எரிந்து விழும் பேச்சுக்கள்
[illegible]
எதுவானாலும் எதையும்
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
பொய் பேசக் கூடாது

[illegible]

## அகதியாய்...



[illegible]

## கல்லூரிக் காலம்



கடைசலையில் கால்
நனைத்தபடி என் கடந்த
காலங்களின் சுகமான
நினைவுகளை கொஞ்சம்
மீட்டிப் பார்க்கிறேன்
இதமாக பறக்கத் தான்
செய்கிறது இதயம்.
வாழ்க்கையில் புதுக்
கவிதைகளை எழுதி வழித்தது
அந்தக் கல்லூரிக் காலம்.
பள்ளிவாசலிலே நட்புக்குள்
தொலைந்ததும் சோகங்கள்
மறந்ததும் சின்ன சீண்டல்களும்
செல்லக் கோபங்களும் மறக்க
முடியாத சில புதிய பக்கங்கள்.
கவலைகள் இன்றி காற்றோடு
மிதக்க வைத்து இன்றும்
மனவரிகளில் பசுமையாய்
கிடக்கிறது அந்த கல்லூரிக் காலம்...

[illegible]

## அவள்



ஆதியிலே வறுமையில்
என் பரம்பரை சுமந்ததால்
அந்த விதி முறையே
எனக்கும் வாழ்வாச்சு.
போராடிப் போராடி
பட்டப்படிப்பில் இறங்கிவிட்டேன்
பட்டாம் பூச்சியொன்று
பாதியிலே வழிமறிக்க
இளமை குதூகலிப்பால்
அதனையும் ஏற்றுக் கொண்டேன்.
தேவதையின் பாசமும்
தெருக்களில் உல்லாசமும்
கவிதையில் சிகரமும்
கானத்தில் கம்பீரமும்
அவளின் மடிமீது
அள்ளி வீசி வரக் கண்டேன்.
மாதமொரு பட்டுச்சேலை
மசாலாதோசை மாலையிலே
கால் கடுக்கும் என்பதால்
கடைசி விலையில் கார் ஒன்று
வீட்டில் பூங்கனிச் சோலை
வெளிவீதியில் காப்பெற் என்று
நான் போட்ட கனவுக் கணக்கை
நாயகியிடம் ஒப்பித்தேன்
ஆம் ஆம் என்று
அத்தனைக்கும் தலையாட்டினாள்.
எத்தனை வந்தாலும்
உன்போல் வருமா என்றாள்.
இப்போ கனடாவில் இருந்து
அண்ணா சௌக்கியமா? என்கிறாள்.

நெடுந்தீவு யோகேஸ்வரன்
[illegible]

## இப்போதெல்லாம்...



யதார்த்தம் கற்பனை
பார்த்தது பாதித்தது
வலித்தது வருத்தியதென
எனது புறத்தே தெரிந்தவைதான்
இதுவரை எழுதப்பட்டன
இலக்கியங்களென எனது பேனாவால்...

முதன்முதலாய்
என் வாலிபத்தை வதைத்து
உள்ளத்தை உடைத்து
வாழ்க்கையையும் வார்த்தைகளையும்
தள்ளாட வைத்து
ஒவ்வொரு கணத்திலும்
ஆறாத ரணம் எரிக்கும்
இறுதி நாட்களாக்கி
வலி நிரப்பிப் போன

அவள் நினைவுகளால் தான்
இப்போதெல்லாம் என்கவிதைகள்
சுடதாசிகளை நிறைத்துவிடுகின்றன..
பார்த்தவர்கள்
பார்த்தவர்களென பலரும்
ஆறுதல் சொல்கிறார்கள்...
அறுந்து இறந்து போன
என் காதல் இதயத்திற்கு!

இராமசாமி ரமேஷ்
[illegible]

## வீழ்ந்து விடாதே!

உலகத்திற்காக
உன்னை நீயே தாழ்த்தி விடாதே!
உலகின் நன்மைக்காக
நாம் வீழ்ந்து போகலாம் - ஆனால்
உலகிற்கு அஞ்சி நம்மை
நாமே வீழ்த்தி விடக் கூடாது.

[illegible]
புரியம் [illegible]






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ராசி பலன்

**19.09.2012 - 25.09.2012**



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். தள்ளிப் போன திருமணம் நிச்சயமாகும். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். வெளியிலிருந்து நல்ல செய்தி வரும்.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

அரைகுறையாக நின்ற வேலைகளை முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். திடீர் பணவரவு உண்டு. மன இறுக்கம் நீங்கி நிம்மதி பிறக்கும். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். மனைவிக்கு சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வந்து போகும்.



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வீட்டில் கூடுதலாக ஒரு அறை கட்டுவீர்கள். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். பிள்ளைகளால் அலைச்சல், செலவுகள் வந்து போகும். உறவினர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். கன்னிப் பெண்களே! மனதை அலைபாயவிடாமல் ஒருநிலைப் படுத்துங்கள்.



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகள் வீட்டில் ஏற்பாடாகும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். உங்கள் ரசனைக்கேற்ப வீடு, வாகனம் அமையும். உறவினர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். புது நட்பு மலரும். பூர்வீகச் சொத்தை மாற்றியமைக்கும் முயற்சியில் இறங்குவீர்கள். கன்னிப் பெண்களே! தவறான எண்ணங்களுடன் பழகியவர்களை ஒதுக்கித் தள்ளுவீர்கள்.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

திடீர் பணவரவு உண்டு. உங்களைப் பற்றி அவதூறாகப் பேசுவார்கள். கௌரவக் குறைவான சம்பவங்கள் நிகழக்கூடும். கனிவாகவும், கம்பீரமாகவும் பேசி காரியம் சாதிப்பீர்கள். பல், காது மற்றும் முழங்கால் வலி விலகும். உறவினர்களால் ஆதாயம் கிடைப்பதுடன் கௌரவமும் ஒரு படி உயரும். கன்னிப் பெண்களே! காதல் கனியும். கல்யாணம் கூடி வரும்.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள்; அத்தம் 1,2 ம் பாதங்கள்**

சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். யோசித்துச் செயல்படுவீர்கள். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். பழைய சொந்த-பந்தங்கள் தேடி வந்து பேசுவார்கள். கண் வலி, பார்வைக் கோளாறு, வீண் செலவுகள் வந்து போகும். முன்கோபம், பேச்சில் தடுமாற்றம் வந்து நீங்கும்.




**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

ஓரளவு பணவரவு உண்டு. ஆடம்பரச் செலவுகளை குறைத்துக் கொள்வது நல்லது. ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். வயிற்று வலி, செரிமானக் கோளாறு வரக்கூடும். மூத்த சகோதரங்கள் உதவிகரமாக இருப்பார்கள். கன்னிப் பெண்களே! சாதித்துக் காட்ட வேண்டுமென்ற வேகம் இருந்தால் மட்டும் போதாது அதற்கான உழைப்பு வேண்டும்.



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

தந்தைவழி சொத்துகள் வரக்கூடும். வழக்குகள் சாதகமாக முடியும். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அவ்வப்போது தலைச்சுற்றல், டென்ஷன், ஏமோஷன்களை வந்து நீங்கும். கல்யாணப் பேச்சு வார்த்தை சுமூகமாக முடியும். முன்கோபத்தை தவிர்க்கப் பாருங்கள்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

முடியாது என்று நினைத்திருந்த காரியத்தைக் கூட முடித்துக் காட்டும் வல்லமை உண்டாகும். தைரியம் பிறக்கும். சாதித்துவிடலாம் என்ற நம்பிக்கை வரும். தந்தை வழியில் மதிப்புக் கூடும். உயர்கல்வி, உத்தியோகத்தின் பொருட்டு பிள்ளைகள் அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். கன்னிப் பெண்களே! காதல் கசந்து இனிக்கும். புது நட்பு மலரும்.




**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

அழகு, இளமை கூடும். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். எங்கு சென்றாலும் செல்வாக்கு உயரும். நோயிலிருந்து விடுபடுவீர்கள். பெரிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். புகழ், கௌரவம் கூடும். குழந்தைப் பாக்கியம் கிட்டும். மகனுக்கு நல்ல மணமகள் அமையும்.



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்**

கொஞ்சம் நாவடக்கத்துடன் இருப்பது நல்லது. பல ரகசியங்கள் உங்கள் ஆழ்மனதில் இருக்கும். அவற்றையெல்லாம் வெளியிட வேண்டாம். மனைவியுடன் மோதல்கள் இருக்கும். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வரக்கூடும். கன்னிப் பெண்களே! தகுதிக் கேற்ப நல்ல வேலை கிடைக்கும்.



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். உங்களுடைய ஆலோசனையை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். புது கடன் உதவி கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் மோதல்கள் குறையும். உறவினர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் சம்பாதிப்பீர்கள்.

## விரதத்துக்கும் அளவு உள்ளது!



புத்தர் ஒரு மரத்தடியில் அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்தார். தான் பார்த்த உயிரற்ற உடல், முதுமை... இதற்கெல்லாம் என்ன காரணம் என்பது பற்றி அறிவதற்கான கொடிய தவம் அது. உணவுமில்லை, உறக்கமில்லை. உணர்வு நிலை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டிருந்தது.

அப்போது, ஒரு குழுவினர் பாடியபடியே அந்த மரத்தைக் கடந்தனர். அந்த பாட்டுச்சத்தம் அவரது தவத்தைக் கலைத்தது.

வீணையின் நரம்பினை
முறுக்கினால் இசை வரும்!
முறுக்காத நரம்பினால்
என்றுமே பலனில்லை!
அதிகமாய் முறுக்காதே
நரம்புகள் அறுபடும்!
அளவோடு முறுக்கிடு
வாழ்வும் அது போலே!"

என்ற பொருள்படும்படியாக அந்தப் பாடல் அமைந்தது.

இந்தப் பாடல் புத்தரின் சிந்தனையைக் கிளறியது. ஒன்றை அறிய அளவுக்கு மீறிய தவம் தேவையில்லை. ஏனெனில், ஒரேயடியாக பட்டினி கிடந்து மூச்சடக்கி தவம் செய்தால் இந்த உயிர் பிரிந்து விடும். பின், என்ன காரணத்துக்காக தவமிருந்தோமோ, அந்த லட்சியம் நிறைவேறாமல் போய்விடும் என உணர்ந்தவர், தவத்தின் கடுமையைக் குறைத்துக் கொண்டார்.

நம் அன்றாட வாழ்வில் அனுஷ்டிக்கும் விரதங்களுக்கு கூட ஒரு அளவீட்டை வைத்துக் கொள்வது நல்லது. அளவுக்கு மிஞ்சினால் விரதமும் விஷம் தானோ!

## மனப்புயலை அடக்கிவிடு

- தீயில் புகுந்தால் சுடாமலும், தண்ணீரில் குளித்தால் குளிராமலும், இரண்டிலும் ஒரே நிலை தோன்றுவதே சமநிலையாகும். இந்த சமநிலையில் தன்னைத்தானே ஈடுபடுத்தி அமைதியாக வாழ்பவன், ஜீவாத்மா வடிவில் உள்ள பரமாத்மாவாகும்.
- சால கலை ஞானத்தாலும், அனுபவ ஞானத்தாலும் மனநிம்மதி அடையப் பெற்றவனும், எதற்குமே ஈடுகொடுத்து ஐம்புலன்களையும் வென்றவனும், பொன், கல், மண் ஆகிய மூன்றையும் ஒன்றாக மதிப்பவனுமே யோகியருக்கெல்லாம் தலைசிறந்த யோகியாகிறான்.
- எந்தவிதமான பிரதிபலனும் எதிர்பாராமல் அன்பு கொண்டவர்கள், நண்பர்கள், தன்னை எப்போதும் அலட்சியப் படுத்துபவர்கள், நடுநிலையாளர்கள், தன்னையே வெறுப்பவர்கள், சுற்றத்தார், நல்லோர், தீயோர் எல்லாரிடமும் ஒரே நிலையில் நடந்து கொள்பவர்கள்தான் உத்தமமானவர்கள்.
- ஆசையே இல்லாதவன் யோகி. தன் சொத்து, சுகங்களைத் துறந்தவன் யோகி. பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து அதிலே இன்பம் காண்பவன் யோகி. இத்தகைய ஆத்மாவே யோகாத்மா ஆகிறது. இந்த நிலையை அடைய உன் மனப்புயலை அடக்க வேண்டும்.
- வயிறுமுட்ட சாப்பிடுகிறவனுக்கு யோகம் கிட்டாது. அதுபோல, எப்பொழுதும் உண்ணாமல் இருப்பவனுக்கும், கால நேரமின்றித் தூங்குகிறவனுக்கும், விடிய, விடிய விழித்துக் கொண்டிருப்பவனுக்கும் யோகம் கிட்டுவதில்லை.
- சாப்பிடுவதிலும், நடமாடுவதிலும், தூங்குவதிலும், விழித்திருப்பதிலும் அளவாக இருப்பவன் துன்பம் இல்லாமல் இருப்பான்.

பகவத் கீதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச் சம்பவம்

# பழிவாங்கல் கொலை...



இவோன் லெஸ்லி இங்கிலாந்தின் வடமிழக்காகவுள்ள கேம்பிறிட்சையரைப் பிறப்பிடமாகக் கொண்டவன். வர்த்தகவியல் பட்டதாரியான லெஸ்லி பிரபலமான வர்த்தக நிறுவனமொன்றின் விற்பனை முகாமையாளராகக் கை நிறைந்த வருமானத்துடன் பணியாற்றிக் கொண்டிருந்தான்.

அவனுக்கு வயது 26 வருடங்களாக இருக்கையில் 18 வயதேயான கிளாரா எனும் இளம் பெண்ணைச் சந்திக்க நேர்ந்தது. பார்ப்பவரை மீண்டும் ஒருமுறை பார்க்கத் தூண்டும், வளைவும் கவர்ந்திழுக்கும் அழகிய வனப்பு வாய்ந்தவள் கிளாரா. லெஸ்லி ஒன்றும் சாதாரணமானவன் அல்ல. அவனும் கட்டுடம்பான தோற்றத்தைக் கொண்ட ஆண்மகன் தான். கிளாரா தொழில் வாய்ப்புத் தேடி லெஸ்லியின் நிறுவனத்திற்கு வந்த பொழுதில் தான் இவர்களுக்கிடையிலான சந்திப்பு நிகழ்ந்தது.

அவர்களின் முதல் சந்திப்பு அன்றே உருவாகிய நட்பு பின்னர் காதலாகப் பரிணமித்தது. காதல் ஜோடிக்கு ஒரு கணமேனும் பிரிந்திருக்க இயலவில்லை. எனவே, ஒரு வருடக் காதலின் முடிவுக்குள் 1995இல் இருவரும் திருமணம் புரிந்தனர். காலங்கள் உருண்டோடின. நாட்கள் செல்லச் செல்ல அவர்கள் இருவருக்குமிடையில் இடையிடையே சிறு சிறு பூசல்களும், பிணக்குகளும் மற்றும் முரண்பாடுகளும் தோன்றின. அவர்கள் இருவருக்குமிடையே உறவில் விரிசல்கள் ஏற்பட்டன. 1997ஆம் ஆண்டு இறுதியில் கிளாரா தனது தூரத்து உறவினரான பூலியஸ் எனும் வாலிபனுடன் லெஸ்லிக்குத் தெரியாமல் களவாக ஓடியே போய்விட்டாள்.

இதன் நிமித்தம் மனமொடிந்து போன லெஸ்லி கவலையை மறக்க மதுபோதைக்கு அடிமையானான். அவனைக் கட்டுப்படுத்தவோ அன்றித் தட்டிக் கேட்பதற்கு எவருமேயில்லை என்றால் சொல்லவும் வேண்டுமா? அத்துடன் தனது உணர்ச்சிகளுக்கு வடிகாலாக மதுவுடன் மாதரையும் இணைத்துக் கொண்டான்.

கிளாராவை எதுவிதத்திலும் அவனால் மறக்க முடியவில்லை. முதற்காதல் அல்லவா! அவள் ஞாபகம் வரும் போதெல்லாம் அவனால் தாங்கிக் கொள்ள முடிவதேயில்லை. அதைவிட அவனது நண்பர்கள் அவனை "என்ன லெஸ்லி உனது கிளாரா வேறு எவருடனோ ஓடிவிட்டாளாமே?" என அவனைப் பார்த்தும் கேலியாகக் கேள்விக் கணைகள் தொடுக்கும் போது அவனால் பொறுத்துக் கொள்ளவே முடிவதில்லை. அவமானத்தால் குன்றிப் போய்விடுவான். இப்பொழுது அவன் மனதில் கவலையுடன் கிளாராவை எப்படியும் பழிவாங்கியே தீர வேண்டும் என்ற வெஞ்சினமும் அவனுள் தீப்பற்றி எரியத் தொடங்கிற்று. ஆனால் அவனைவிட்டுச் சென்ற பின்னர் கிளாராவின் தகவல் எதுவும் அவனுக்குக் கிட்டவேயில்லை. அவனும் அறிய முயற்சிக்கவில்லை. எதற்கும் முதலில் அந்த ஊரை விட்டு வேறெங்கிலும் சென்று வாழ வேண்டுமென்பதைத் திடமாக முடிவுசெய்தான்.

அவன் பணியாற்றும் நிறுவனத்தின் மற்றுமொரு விற்பனைக் கிளை தற்போதைய இடத்திலிருந்து 500 கிமீ தொலைவில் உள்ள கிறிம்ஸ்பி எனுமிடத்தில் இருந்தது. நிறுவனத்தின் உரிமையாளருடன் கதைத்துப் பேசி லெஸ்லி தனது பணியை கிறிம்ஸ்பியில் உள்ள நிறுவனக் கிளைக்கு இடமாற்றம் பெற்றுக் கொண்டான்.

கிறிம்ஸ்பிக்கு வேலைமாற்றம் பெற்றுவந்த லெஸ்லிக்கு அவனது நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வீட்டுவசதி அங்குள்ள தொடர்மாடிக் குடியிருப்பில் கிடைத்தது. காலையில் வேலைக்குச் சென்றால் மாலையில் கிளப்பிற்கும் சென்றுவிட்டு இரவாகிய பின்னர் தான் வீட்டிற்குத் திரும்புவதை வழக்கமாக்கிக் கொண்டான் லெஸ்லி. புதிய இடம், புதிய வாழ்க்கை ஒருசில நாட்களுக்கு மனதிற்கு ஆறுதலளித்தன.

வழமைக்கு மாறாக அன்று அவன் வேலைக்குச் செல்லாது வீட்டினில் தங்கி ஓய்வெடுக்க விரும்பினான். தொலைபேசி மூலம் அலுவலகத்திற்குத் தகவலை அனுப்பிவிட்டு தனது வீட்டு வாசலில் நின்று வீதிப் பக்கம் பார்வையைச் செலுத்தினான். அப்போது காலை 8.30 மணி இருக்கும்.

லெஸ்லி திடுக்கிட்டான். வீதியின் எதிராகவிருந்த வீட்டுவாசலில் அவனது முன்னாள் காதலியும் களவாக ஓடிச் சென்ற மனைவியுமான கிளாரா நிற்பதைக் கண்ணுற்றதுமே அவ்விதமாகத் திடுக்குற்றான். எவளது நினைவை மறந்துவிட வேண்டுமென முயற்சி செய்தானோ, அத்துடன் எவளால் முன்பிருந்த இடத்தில் இருக்க முடியாமல் ஊரை விட்டு இடமாற்றம் பெற்று இங்கு வந்தானோ அவள் இங்கு தான் வசிக்கிறாள் என்பதைக் கண்டறிந்ததும் அவனுள் வேதனையும், விரக்தியும், வெறுப்பும் கலந்த உணர்வுகள் மேலெழுந்தன. ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு வீட்டினுள் சென்றான்.

கிளாராவும் அவனைக் கண்டுவிட்ட அதிர்ச்சியில் செய்வதறியாது செயலற்றவளாக சிலைபோல ஒருகணம் நின்றவள் படாரென்று வீட்டினுள் புகுந்து கதவை மூடினாள்.

கிளாராவும் கணவனும் தான் வசிக்கும் வீட்டின் எதிரேயே வசிக்கின்றனர் என்பதைத் தெரிந்து கொண்டதும் அவன் மீண்டும் கடும் மன உளைச்சலுக்கு ஆளானான். கிட்டத்தட்டத் தன்னுடன் இரண்டாண்டுகள் அளவில் கூடிக்குலாவிக் குடும்பமாயிருந்தவள் இன்றோ இன்னொருவனுடன் தன்னெதிரே குடும்பம் நடத்துவதைக் காண வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையை எண்ணி எண்ணி மனம் கறுவினான்.

அவன் அடி மனதில் கிளாராவை எப்படியும் பழி வாங்கியேயாக வேண்டும் என்ற வன்ம உணர்வு ஆழ விதையூன்றி வளரத் தொடங்கிற்று. முதலில் அவன் தனது இருப்பிடத்தை மாற்றிவிடவே முயற்சித்தான். ஆனால் அது கைகூடாது போகவே அம்முயற்சியைக் கைவிட்டு விட்டான்.

அன்று வேலைக்குச் செல்லாது வீட்டிலிருந்தபடியே யன்னலினூடாக எதிர்வீட்டினையும் சுற்றாடல் நடமாட்டங்களையும் கூர்ந்து அவதானித்தபடி பகல் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தான். அதற்கிடையில் ஒருசோடி கையுறைகள், பிளாஸ்ரர் ஒரு கூரிய சிறிய பேனாக்கத்தி மற்றும் நைலோன் கயிறு என்பவற்றை எடுத்துத் தயார் நிலையில் வைத்துக் கொண்டான்.

கிளாராவும் இவனைக் கண்டுகொண்ட போதிலும் கண்டுகொள்ளாதவள் போலவே நடந்துகொண்டாள். கிளாராவின் கணவனான பூலியஸ் அடிக்கடி தொழிலின் நிமித்தம் வெளியூர்களுக்குச் செல்வது வழக்கம். கிளாராவும் பூலியஸும் மாலை நேரங்களில் அடிக்கடி பொழுது போக்கிற்காக வெளிஉலாச் செல்வதையும் சினிமாவுக்குச் சென்று வருவதையும் அவர்கள் மகிழ்வாகக் களிப்புற்றிருப்பதையும் காணும் போதெல்லாம் லெஸ்லியின் மனதில் எரிகின்ற விளக்கில் எண்ணெயை ஊற்றுவது போல அவளைப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணம் கொழுந்துவிட்டெரியும்.

மனதிற்குள் கறுவிக்கொண்டும் இரையைப் பிடிக்கப் புலி பதுங்குவது போல அவளைப் பழிவாங்குவதற்கான காலம் கனியும் வரையில் காத்திருப்பதென முடிவுசெய்தான் லெஸ்லி. காலம் யாருக்காகவுமே காத்திருப்பதில்லையே! இவ்விதம் ஒருவாறு இரண்டாண்டுகள் வரையில் கழிந்து விட்டன. புலியின் பாய்ச்சலுக்குத் தகுந்த சந்தர்ப்பம் எதுவும் கிட்டவில்லை.

இரண்டாண்டுகளில் லெஸ்லியிடமிருந்து எதுவித எதிர்ப்புணர்வுகளோ முரண்பாடுகளோ வெளிப்படாமையால் கிளாராவும் லெஸ்லி பற்றிய பயத்தை அறவே விலக்கிவிட்டாள். அத்துடன் அவள் கர்ப்பவதியாகவும் இருந்தாள்.

இந்நிலையில், லெஸ்லியின் பழிவாங்கும் உணர்வு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. இனியும் காலத்தைக் கடத்துவது வீண் என எண்ணினான்.

ஒருசில நாட்களாகக் கிளாரா வீட்டைவிட்டு வெளியே தேவைகளுக்காகத் தனியே செல்வதையும் அவளது கணவன் பூலியஸின் நடமாட்டம் இல்லாததையும் லெஸ்லி கவனித்துக் கொண்டான். இதுவே அவளைப் பழிவாங்குவதற்கு ஏற்ற சந்தர்ப்பம் என்பதைத் தீர்மானித்துக் கொண்டான்.

அத்துடன் கணவன் இல்லாததால் இரவு வேளைகளில் கிளாரா மட்டுமே வீட்டில் தனிமையில் இருப்பாள் என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டான்.

அன்று வேலைக்குச் செல்லாது வீட்டிலிருந்தபடியே யன்னலினூடாக எதிர்வீட்டினையும் சுற்றாடல் நடமாட்டங்களையும் கூர்ந்து அவதானித்தபடி பகல் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தான். அதற்கிடையில் ஒருசோடி கையுறைகள், பிளாஸ்ரர் ஒரு கூரிய சிறிய பேனாக் கத்தி மற்றும் நைலோன் கயிறு என்பவற்றை எடுத்துத் தயார் நிலையில் வைத்துக் கொண்டான்.

மாலை 4 மணியளவில் கிளாரா வீட்டைப் பூட்டிவிட்டு வெளியில் செல்வது தெரிந்தது. எங்கே செல்கிறாள்? திரும்பி வருவாளா? அல்லது வரமாட்டாளா? என்ற சந்தேகங்கள் லெஸ்லியின் மனதில் எழுந்தன.

இருளத் தொடங்கியது. 7 மணியளவில் கிளாரா மட்டும் தனியாளாக வாடகைக் காரொன்றில் வந்திறங்கி வீட்டினுள் செல்வது தெருவிளக்குகளின் வெளிச்சத்தில் தெரிந்தது. லெஸ்லி உஷாரானான். 10 மணியாகியதும் அப்பகுதித் தொடர்மாடிக் குடியிருப்புகளின் மின்விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டு இருளில் மூழ்கின. தெருவெங்கும் மயான அமைதி நிலவியது. நடமாட்டமெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

லெஸ்லி ஏற்கனவே தயார்நிலையில் எடுத்து வைத்திருந்த பொருட்களுடன் அவனது வீட்டை விட்டு புறப்பட்டு கிளாராவின் வீட்டுவாசலை அடைந்தான். முதலில் தனது கரங்களில் கையுறைகளை அணிந்து கொண்டான். வாசலில் இருந்த அழைப்பு மணியினை அழுத்தினான். படுக்கையில் கிடந்த கிளாரா வெளியூர் சென்றிருந்த கணவன் பூலியஸ் தான் வந்துவிட்டானெனக் கருதி மகிழ்வுடனும் தூக்கக் கலக்கத்துடனும் வந்து வாசற்கதவைத் திறந்தாள்.

கதவு திறக்கப்பட்டதுதான் தாமதம் ஒருகணமும் தாமதியாமல் சடாரென்று கதவைத் தள்ளியவாறே உட்புகுந்த லெஸ்லியைக் கண்ட கிளாரா அதிர்ச்சியால் உறைந்து போனாள். உதவிகோரி அலற முயன்ற போதிலும் குரல் வரவேயில்லை. லெஸ்லியும் அவளை வாய்திறக்க விடாது அழுக்கிப் பிடித்து அவளை இழுத்துச் சென்று பலமாகக் கட்டிலின் மீது தள்ளிவிட்டான். முதலில் அவளது வாயைப் பிளாஸ்ரரினால் ஒட்டினான். திமிற முயன்ற போதிலும் அவளது கை கால்களை நைலோன் கயிறால் பிணைத்துக் கட்டினான். அவன் முகத்தைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது. அவன் கண்களில் பழிவாங்கும் வெறியும் குரோதமும் மின்னின. அடுத்து அவளது ஆடைகளை அசுர வெறியுடன் கண்டபடி கிழித்தெறிந்து அவளை நிர்வாணமாக்கினான். தன்னுடன் கொண்டு சென்ற சிறிய கூரிய கத்தியை எடுத்தான். ஈவிரக்கமின்றி அவளது கன்னங்கள், மார்பகம், அடிவயிறு மற்றும் மர்ம உறுப்பு எனப் பல இடங்களிலும் கத்திமுனையால் கீறினான். கத்திக் கீறல்களில் இருந்து குருதி கொப்பளிக்கத் தொடங்கியது. வேதனையால் கிளாரா கிடந்து புழுப்போல நெளிந்து துடிப்பதை ரசித்தவாறு நின்று கொண்டிருந்தான். தடையின்றிக் குருதி வெளியேறியதனால் கிளாரா உயிர்பிரியும் நிலையை அடைந்தாள். கொடியவனான லெஸ்லி இறுதியாக அவளது வயிற்றின் மேல் இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் கத்தியால் ஓங்கிக் குத்தினான். அவளது உயிர் பிரிந்தது.

தமிழில் – ஜெகன்

( 22ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்ய முடியாத விஷயத்தை முதலில் செய்து காட்டுங்கள்

நிறைய விஷயங்கள் உலகில் முடியாது என்று ஒரு முட்டாள்தனமான அபிப்பிராயம் எங்கும் பரவியிருக்கிறது.

ஆனால் நாகரிகம் வளர்ச்சியடைந்துள்ளது. மனித குலம் தினம் முன்னேறிய வண்ணம் இருக்கிறது. வெற்றியாளர்கள் செய்ய முடியாது என்று சந்தேகப் பிராணிகளால் கைவிடப்பட்ட விஷயங்களைச் செய்த வண்ணமிருக்கிறார்கள்.

வெற்றியாளர்கள் ஒரு காரியத்தைச் செய்து முடித்த பின்னர்தான் அது செய்ய முடியாதது என்று பிறரால் கைவிடப்பட்டது என்பதையே தெரிந்து கொள்கிறார்கள்.

ஜெனரல் பாட்டன் பற்றிய ஒரு சிறிய நிகழ்ச்சி.

இரண்டாம் உலகப் போரில் ஜெனரல் பாட்டனின் மூன்றாவது ராணுவத்தின் ஒரு பிரிவினர் 'தியர்' என்கிற எதிரி நகர் நோக்கி முன்னேறிய வண்ணமிருந்தனர்.

அந்த எதிரி நகரைப் பிடிக்க நான்கு பிரிவு ராணுவப் படை தேவை என்று கணக்கிட்ட ராணுவத் தலைமையகம் அதற்கான செலவு



அதிகம் ஆகும் என்று சொல்லி ஜெனரல் பாட்டனை ஒரு பிரிவிலருடன் பின்வாங்க உத்தர விட்டது. இந்தத் தகவல் ஜெனரல் காதுகளில் விழுவதற்கு முன்னரேயே அவர் ஒரு பிரிவு ராணுவத்தினர் உதவியுடன் அந்த நகரைக் கைப்பற்றி விட்டார். தனக்கே உரிய பாணியில் தலைமையகத்திற்குப் பதில் அனுப்பினார்: "ஒரு பிரிவினரின் உதவியுடன் தியர் நகரைப் பிடித்து விட்டேன். அவர்களிடமே திருப்பித் தந்து விடவா?"

பயங்கர வியாதிகள் பல தடுக்கப்படாமல் நிவாரணமும் இல்லாமல் ஒரு காலத்தில் இருந்தன.

இப்பொழுது அந்த வியாதிகளின் பெயர்கள் கூட நமக்கு மறந்து விட்டன. ஏனென்றால் அத்தனை பயங்கர வியாதிகள் - தடுக்கப்பட்டாதவை - குணப்படுத்த முடியாதவை - இப்பொழுது உலகில் எங்கும் இல்லவே இல்லை.

அந்த வியாதிகளைத் தடுக்க முடியாது என்று நினைக்க மறுத்த விஞ்ஞானிகள் சிலர் அவற்றைத் தடுக்க ஊசிகள் கண்டுபிடித்தனர். அவற்றை அந்த ஊசிகள் சர்வ நிச்சயமாய்த் தடுத்தன.

ஆனால் விவரம் தெரியாத, முரண்டு பிடிக்கும் ஜனங்கள் சிலர் ஊசி போட்டுக் கொள்ள மறுத்தனர். எனவே, அந்த வியாதிகள் அவர்கள் உடம்புகளில் பரவின. அப்பொழுது அந்த வியாதிகளைக் குணப்படுத்த முடியாது என்று நம்ப மறுத்த விஞ்ஞானிகள் அவற்றிற்குக் குணம் உண்டாக்கக் கூடிய மருந்துகளைக் கண்டுபிடித்தனர்.

தடுக்க முடியாத, குணப்படுத்த முடியாத அந்த வியாதிகள் இப்பொழுது இருக்கும் இடம் தெரியவில்லை. அவற்றின் பெயர்களைக் கூட நம்மில் பெரும்பாலானோர் மறந்து விட்டோம்.

இப்பொழுது சில வியாதிகளைத் தடுக்க முடியவில்லை. அவற்றை முழுமையாய்க் குணப்படுத்தவும் முடியவில்லை. ஆனால் விஞ்ஞானிகள் அவற்றையும் தடுத்தே தீருவார்கள். குணப்படுத்தியே தீருவார்கள். ஏனென்றால் அவர்கள் அதை செய்து காட்ட முடியாது என்று தயங்கவில்லை.

நான்கு நிமிடங்களுக்குள் ஒரு மைல் தூரம் ஓட முடியாது என்று ரொம்ப நாள் மக்கள் நம்பி வந்தார்கள். இப்பொழுது எல்லா ஓட்டப் பந்தய வீரர்களும் சர்வ சாதாரணமாக நான்கு நிமிடங்களுக்குள்ளாகவே ஒரு மைல் தூரத்தை ஓடித் தீர்க்கிறார்கள் - இது பழைய கதை - இதை நாம் விவரிக்கத் தேவை இல்லை.

இதிலே இரண்டு விஷயங்கள்:

1. சில விஷயங்கள் செய்ய முடியாது என்று மக்கள் தொடர்ந்து நம்புகிறார்கள். ஒரு செய்ய முடியாத விஷயத்தைச் சாதனையாளர் ஒருவர் செய்து காட்டும் போது இந்த 'செய்ய முடியாத செயல் வீரர்கள்' (அவர்கள் பல லட்சங்களில் இருக்கிறார்கள்) அடுத்த செய்ய முடியாத காரியத்தைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

செய்ய முடியாது என்கிற சொற்கள் தாம் தீராத வியாதி. முயற்சி செய்யாதவர்களின் பேச்சு அது. முதல் சங்கடத்திலேயே பின்வாங்கி விடும் சந்தேகப் பிராணிகளின் பேச்சு அது.

2. "செய்ய முடியாது" என்ற வியாதியினால் பாதிக்கப்படாத தைரியசாலிகள் அநேகர் இருக்கிறார்கள். தினமும் இவர்கள் செய்ய முடியாத காரியங்களை ஒவ்வொன்றாகச் செய்து வருகிறார்கள். உடனடியாகச் செல்வமும் புகழும் பெறுகிறார்கள்.

செய்ய முடியாத செயல்களைச் செய்து முடிக்கும் போது உடனடியாக செல்வமும் புகழும் கிடைக்கின்றன. எனவே திறமையான, நம்பிக்கையான சாதனையாளர்களுடன் நீங்கள் போட்டி போட வேண்டி வரும். பெரும் பணம் நீங்கள் எதிர்பார்த்தால் செய்ய முடியாத செயல்களில் ஏதேனும் ஒன்றை முதலாவதாக நீங்கள் செய்து முடிக்க வேண்டும்.

சாதனையாளர்கள் செய்ய முடியாத செயல்களைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். எனவே கடும் போட்டி நிலவுகிறது. நீங்கள் செய்ய முடியாத செயல் ஒன்றைச் செய்யும் போது அதை முதல் நபராகச் செய்து காட்ட வேண்டும்.

நீங்கள் வைத்திருக்கும் பொருள்கள், உபயோகப்படுத்தும் வஸ்துக்கள், உங்கள் தேவைகள் எல்லாமே பிறர் முயற்சியினாலும் சிந்தனையினாலும் உருவானவைதாம்.


உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆயிரக்கணக்கான ஏன் லட்சக்கணக்கான மக்கள் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உங்கள் உணவு, உடைகள், வீடு, மரச் சாமான்கள், மோட்டார் வாகனம், வேலை, வருமானம் இன்னும் பட்டியலில் அடங்காத எண்ணற்ற பொருள்களை உருவாக்கித் தரும் நபர்களில் ஆயிரக்கணக்கானவர்களில், லட்சக்கணக்கானவர்களில் உங்களுக்கு நேரடியாகத் தெரிந்தவர்கள் மிகக் குறைந்தவர்களாகவே இருப்பார்கள்.

இதிலே முக்கியமான விஷயம் மனிதர்கள் உங்களுக்கு முக்கியமானவர்கள் என்பதுதான்.

மற்ற மனிதர்களின் உதவி, ஒத்துழைப்பு, பணியாற்றல் இல்லாமல் நீங்கள் சாதிக்கக் கூடியது வெகு குறைவே.

மூன்று விதமான மனிதர்கள்



இருக்கிறார்கள்.

1. செய்து காட்டுவோம் - எந்தக் காரியத்தையும் இவர்கள் நிறைவேற்றுவார்கள்.

2. செய்ய முடியாது - எந்தக் காரியத்தையும் எதிர்ப்பார்கள். முட்டுக்கட்டை போடுவார்கள்.

3. செய்யத் தெரியாத - எந்தக் காரியத்திலும் தோல்வியை சந்திப்பவர்கள்.

மனிதர்களை நீங்கள் இப்படிப் பிரிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். சிறிது பயிற்சிக்குப் பின் இது சுலபம். இப்பொழுது எந்தப் பிரிவினர் உங்கள் வெற்றிக்கு உதவுவார்கள் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

செய்து காட்டுவோம் - எந்தக் காரியத்தையும் நிறைவேற்றுபவர்கள் - இவர்களைத்தான் நீங்கள் நண்பர்களாக, ஆதரவாளர்களாக, கூட்டு முயற்சியில் துணையாய் இருப்பவர்களாகத் தேர்ந்தெடுத்து, தொடர்பு கொண்டு பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மற்ற இரண்டு பிரிவினரையும் நீங்கள் ஒதுக்கிவிடக் கூடாது. செய்ய முடியாது என்பவர்களின் நல்லெண்ணத்தை நீங்கள் சம்பாதிக்க வேண்டும். அவர்களுடன் விரோதம் கூடாது. செய்யத் தெரியாது என்பவர்களிடம் தாராளமாய் நடந்து கொண்டு அவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு உதவ வேண்டும்.

நீங்கள் பெரிய அளவில் வெற்றி பெற விரும்பினால் செய்து காட்டுவோம் - எந்தக் காரியத்தையும் நிறைவேற்றுபவர்கள் - பிரிவினரின் ஒத்துழைப்பைப் பெறுவது மிக மிக அவசியம்.

உங்கள் திறமைகளை இரட்டிப்பாக்க வேண்டுமா?

ஆங்கிலேய மதகுரு ராபர்ட் ஹால் சொல்வதைச் செவிமடுங்கள். "சீர்தூக்கிப் பார்க்கும் இரக்க குணமுள்ள நண்பன் ஒருவனை நீங்கள் அடைந்தால், உங்கள் திறமைகள் இரட்டிப்பாகும்." மற்றுமொரு புத்திசாலியான ஒத்துழைப்புக்கும் நண்பன் கிடைத்தால் உங்கள் திறமை மும்மடங்காகும். இப்படி நூறு நண்பர்கள் கிடைக்கும் போதோ உங்கள் திறமைகள் பிரமிட் போல வளரும்; செல்வாக்கு உயரும். சக்தி நூறு மடங்காகும்.

திறமைகளை வளர்ப்பது, செல்வாக்கை அதிகரிப்பது இவை நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகள். உங்கள் நண்பர்கள், கூட்டாளிகள், செய்து காட்டுவோம் பிரிவினராக இருத்தல் வேண்டும்.

எந்த வியாபாரத்திலோ, நிர்வாகத்திலோ தலைமைப் பொறுப்பில் இருக்கிறவர்கள் சக்தி வாய்ந்த நண்பர்களைப் பெற்றிருப்பார்கள். நண்பர்களே அவர்களைத் தலைமை பொறுப்பில் ஏற்றியிருப்பார்கள். அங்கேயே நிலையாய் இருப்பதற்கும் உதவுவார்கள்.

நவீன வியாபாரம், நவீன வாழ்க்கை, சிக்கலான மனிதக் கூட்டு முயற்சி ஒவ்வொருவர் வெற்றியிலும் ஒவ்வொருவருக்கும் பங்குண்டு. 'தனிப்பட்ட' நபர் ஒதுங்கி தன் கூட்டுக்குள் உறங்க வேண்டியதுதான்.

வெற்றி பெற்றவர்கள் ஒரு வார்த்தை சொல்லிய வண்ணம் இருப்பார்கள்.

"ஒரு மனிதனுக்கு நண்பர்களே கிடையாது என்று சொன்னால், அவனுக்குத் திறமை கிடையாது. ஆற்றல் கிடையாது. செல்வாக்கு கிடையாது. அதிகாரம் கிடையாது என்று பொருள்."

எங்கேயோ ஒரு தனிப்பட்ட கவிஞன் தன் அறையில் இருந்தே படைப்புத் துறையில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் அவனும் தன் படைப்பு, பிறர் மத்தியில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, பாராட்டுப் பெறும் போது தான் புகழும் பணமும் பெறுகிறான்.

புதிய நண்பர்களை உருவாக்குவது தான் வாழ்க்கைக் கலையே. வாழ்க்கைக் கலை இன்னும் அநேக விஷயங்களால் ஆனது. ஆனால் புதிய நண்பர்களை உருவாக்குவது அதுவும் செய்து காட்டுவோம் என - எந்தக் காரியத்தையும் நிறைவேற்றுபவர்கள் - பிரிவில் உருவாக்குவது நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளில் ஒன்றாகும். இதை நீங்கள் தொடர்ந்து செய்யத் தவறினால் நஷ்டம் உங்களுடையதுதான்.

ஏனென்றால் உங்கள் நண்பர்கள், கூட்டாளிகளை வைத்தே உங்களைப் பிறர் எடை போடுவார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டில், ஜேர்மனியைச் சேர்ந்த அறிஞர் கதே சொன்னார். 'நீ யாருடன் பழகுகிறாய் என்று என்னிடம் சொல்லு... நீ எப்படிப்பட்டவன் என்பதை நான் எடுத்துச் சொல்வேன்.'

செய்து காட்டுவோம் என எந்தக் காரியத்தையும் நிறைவேற்றுபவர்கள் - பிரிவினருடன் நீங்கள் பழகுவதை, கதே நிச்சயம் வரவேற்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பியர் ரின்கள் காட்சியளிக்கும் அழகைப் பாருங்கள்



**நா**ம் கழித்துவிடும் சில பொருள்கள் எத்தனையோ தேவைகளுக்குப் பயன் படுத்தப்படுகின்றன. இங்கே நீங்கள் காண்பது வெற்று பியர் ரின்களால் செய்யப்பட்ட கலைத்துவமான உருவங்களையே!

















உலகில் காணப்படும் சில வித்தியாசமான ஏ.ரி.எம் (ATM) இயந்திரங்களையே இங்கு காண்கிறீர்கள்.







## யானையால் வரையப்பட்ட ஓவியம் 1,000 ஸ்ரேலிங் பவுண்களுக்கு விற்பனை



**யா**னையொன்றினால் வரையப்பட்ட ஓவியமானது 1,000 ஸ்ரேலிங் பவுண்களுக்கு விற்பனையாகியுள்ளது. இந்த ஓவியத்தின் பெறுமதியானது மேலும் அதிகரிக்கலாமென நம்பப்படுகின்றது.

பிரெகு மிருகக் காட்சிசாலையில் கலையார்வத்துடன் காணப்படும் 'சான்டி' என்று அழைக்கப்படும் யானையே இவ்வாறு ஓவியங்களைக் கீறும் பழக்கமுடையதாகக் காணப்படுகின்றது.

ஆசிய இனத்தைச் சேர்ந்த மேற்படி யானைக்கு அதனது பாகனான வெரோனிகா ஸ்ரப்லோவ் இவ்வாறு ஓவியம் வரையும் கலையை கற்றுக்கொடுத்துள்ளார்.

இந்த யானையால் வரையப்பட்ட மேலும் 12 ஓவியங்கள் சேகரிக்கமுடியாமல் போய்விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் யானையின் ஓவியங்கள் ஏலத்திற்கு விடப்பட்டுள்ளதுடன் இதுவரை 4,000 ஸ்ரேலிங் பவுண்கள் ஏலத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெறப்படும் பணமானது இலங்கையில் உள்ள யானைகள் சரணாலயத்திற்கான மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கு பயன்படுத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


வர்ணத் தூரிகைகளை எவ்வாறு பிடிக்க வேண்டும் போன்ற ஓவியம் சார்ந்த பல்வேறு கற்றல்களை வெரோனிகா ஸ்டரப்லோவ் மேற்படி யானைக்கு கற்றுக்கொடுத்துள்ளார்.

முதலில் தனது யானை பாகனின் உதவியுடன் மூன்று அல்லது நான்கு மாதங்கள் ஓவியங்களை வரையத் தொடங்கிய சான்டி பின் தனது மேற்பார்வையாளரின் உதவியின்றி வரையத் தொடங்கியது.

வர்ணம் தீட்டுதல் என்பது பகுதியான செறிவூட்டல் நிகழ்வாகும். இந்த செயற்பாடு எமது விலங்குகளை மகிழ்வுடனும் ஆரோக்கியத்துடனும் வைத்துக் கொள்ள உதவுகின்றது என பிரெகு மிருகக் காட்சிசாலையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## கடலுக்கடியில் காட்சியளிக்கும் உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகத்தின் சில காட்சிகள்!







## விமானத்தின் எரிபொருள் தாங்கியை தண்ணீர் சூடாக்கும் இயந்திரமாக மாற்றிய விவசாயி

**சீ**னாவைச் சேர்ந்த திறமைமிக்க விவசாயி ஒருவர், பழைய போர் விமான மொன்றின் எரிபொருள் தாங்கியை தண்ணீர் சூடாக்கும் இயந்திரமாக மாற்றியுள்ளார்.



சீனாவின், சான்டோங் மாகாணத்தின் யான்டாய் நகரைச் சேர்ந்த பெங் வெங்க் எனும் விவசாயியின் குடும்பத்தினர் ஆறு பேரும் வெந்நீர் குளியலுக்கு இந்த இயந்திரத்தை பயன்படுத்துகின்றனர்.


மீள்சுழற்சி நிலையமொன்றிலிருந்து மேற்படி எரிபொருள் தாங்கியை அவர் பெற்றுக்கொண்டார். வெள்ளியிலான இந்த எரிபொருள் தாங்கியை சிறிய மாற்றங்களைச் செய்வதன் மூலம் தண்ணீர் சூடாக்கியாக வடிவமைக்கலாம் என்ற யோசனையானது அவருக்கு பின்பே வந்துள்ளது.

"இராணுவத்தில் நான் கடமையாற்றிய காலம் முதல் நான் இராணுவ பொருட்கள் மற்றும் விடயங்களில் மீது கொள்ளை பிரியனாகவே உள்ளேன். மீள்சுழற்சி நிலையத்தில் மக்கள் குறிப்பிடத்தக்க பொருட்களை விட்டுச் செல்வதால் எப்போதும் அங்கு மக்கள் காணப்படுவதை நான் அவதானித்துள்ளேன்' என வெங் தெரிவித்துள்ளார்.

"நான் இந்த விமானத்தின் பாகத்தை கண்டபோது அதனை நல்ல விடயங்கள் எதற்கேனும் பயன்படுத்த வேண்டுமென நினைத்தேன். நான் எப்போதும் நல்ல பொருட்களை உருவாக்குவேன். நாங்கள் ஒருபோதும் வெந்நீரை பயன்படுத்தியதில்லை. இப்போது எனது குடும்பத்தினருக்கு இந்த வெந்நீரை விநியோகிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த தண்ணீர் சூடாக்கி இயந்திரமானது எனது வீட்டை மேலும் மெருகூட்டிக் காட்டுவதாக உள்ளது என நான் எண்ணுகிறேன்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்தத் தீபாவளி– விஜய் Vs கார்த்தி!!

பெரிய முயற்சி இல்லாமலேயே பெரிய ஆளாய் ஆகிவிடும் ராசி கார்த்தியுடையது. பொதுவாக தீபாவளி போன்ற பெரிய விசேஷ நாட்களில் பெரிய நடிகர்களின் படங்கள் மோதும் அல்லது சோலோவாக விளையாடும். ஆனால் இந்தத் தீபாவளிக்கு விஜய்யின் துப்பாக்கி (தலைப்பு உறுதியில்லை!!) யோடு மோதுவது கார்த்தியின் அலெக்ஸ் பாண்டியன். விஜய் - அஜீத், விஜய் - சூர்யா என்பது போய், இப்போது விஜய் - கார்த்தி என்றாகிவிட்டதில் கார்த்தியின் ரசிகர்களுக்கு குஷியோ குஷி. இந்தத் தீபாவளிக்கு உறுதியாக வெளியாகும் படங்கள் இந்த இரண்டும் தான்.

## சிம்புவுடன் அனிருத்



சிம்பு 'மன்மதன் 2' படத்தினை இயக்க திட்டமிட்டு இருக்கிறார். முதல் படத்தில் தனுஷுடன் இணைந்த அனிருத், இம்முறை சிம்புவுடன் இணைந்து இருக்கிறார். 'மன்மதன் 2' படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைப்பதாக பேசப்பட்டது. தற்போது அதற்கு பதில் அனிருத் பெயர் இடம்பெற்று இருக்கிறது.



## காஞ்சனா–2 வில் லட்சுமிராய் இருக்கிறாரா...?

காஞ்சனா இரண்டாம் பாகத்திலும் லட்சுமிராயே நடிக்கக்கூடும் என்று தகவல்கள் வெளியாகி வருகிறது. அதேபோல் லட்சுமிராயும் ஏற்கனவே தன்னை மீண்டும் நாயகியாக்குவதாக லாரன்ஸ் முன்பே வாக்கு கொடுத்தது போலவும் கூறி வருகிறார். ஆனால் இதுபற்றி லாரன்ஸை கேட்டால், எந்த பதிலும் சொல்லாமல் மவுனம் சாதிக்கிறார்.

## ஏழைகளுக்காக உழைக்கும் சூர்யா.

ஏழை மாணவர்களின் கல்விக்காக'அகரம்' என்ற தொண்டு நிறுவனத்தை எனது மனைவி மற்றும் விஜய் உட்பட சில நடிகர்களின் உதவியுடன் தொடங்கி, உதவி செய்து வருகிறேன். நான் படங்களில் சம்பாதிப்பது எனது குடும்பத்திற்கு என்றால், விளம்பரங்களில் சம்பாதிப்பது முழுவதையும் ஆதரவற்ற குழந்தைகளுக்கும் ஆசிரமங்களுக்கும் தான் கொடுக்கிறேன் என்று கூறியுள்ளார் சூர்யா.



## காவ்யா மாதவனின் இன்னொரு முகம்...!



காவ்யா மாதவன் மலையாள சினிமாவின் மிகச் சிறந்த நடிகைகளில் ஒருவர். அதிக உழைப்பு, அதீத ஈடுபாடு என்று சினிமாவில் முதல் இடத்தை பிடித்தார். இப்போது அவரின் இன்னொரு முகத்தைப் பார்த்து கேரளாவே கிரங்கிக் கிடக்கிறது. காவ்யா சிறந்த பாடகி, பாடலாசிரியர், கவிஞர் என்பது அந்த முகம். அவர் 'காவ்யாவின் தாளங்கள்' என்ற இசை அல்பத்தை வெளியிட்டு அனைவரையும் ஆச்சர்யப்பட வைத்திருக்கிறார்.

## கோவை சரளாவுடன் நடித்தது நான் செய்த பாக்கியம்



ஒரு வருடத்திற்கு பிறகு இப்போது நடிகை ஜனனி ஐயர் நடித்த 'பாகன்' படம் வெளியாகி உள்ளது. இதில் பொள்ளாச்சியில் ஒரு பணக்கார வீட்டுப் பெண்ணாக நடித்து இருந்தார். ஸ்ரீகாந்த் ஜோடியாக நடிந்திருந்த இவரது நடிப்பு அனைவரையும் கவர்ந்துள்ளது. இப்படத்தில் ஸ்ரீகாந்தின் அம்மாவாக நடித்த கோவை சரளாவுடன் நடித்ததை தன்னால் மறக்கவே முடியாது என்கிறார்.

## சவாலுக்கு



'நான்', '
நடித்தி
முதலி
படத்தில்
வாய்ப்
பூனை'ய
செயல்
நடித்திரு
பெயர் வா
பெறுவன
கேரக்ட
அத்தகை
மாற்

## நய
## ரே



வே
இல்
கி
தெ
பர
சி
சி
ெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...கு ரெடி: விபா

...ான்', 'மதில்மேல் பூனை' படங்களில் நடித்திருக்கும் விபா, கூறியதாவது: முதலில் 'ஆட்டா' என்ற கன்னட படத்தில் நடித்தேன். அடுத்து 'நான்' வாய்ப்பு கிடைத்தது. 'மதில்மேல் பூனை'யில் காட்டுக்குள் தைரியமாக செயல்படும் முரட்டு பெண்ணாக நடித்திருக்கிறேன். கிளாமராக நடித்து பெயர் வாங்குவதை விட, நடித்துப் புகழ் பெறுவதை விரும்புகிறேன். சவாலான கேரக்டர்களை எதிர்பார்க்கிறேன். அத்தகைய கேரக்டர்களுக்காக என்னை மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

## ...யன்தாராவுக்கு நேரடி சிபார்சு

வேறு எந்த நடிகைகளுக்கும் இல்லாத வரவேற்பு, நயன்தாராவுக்கு கிடைத்துள்ளது. தற்போது, தமிழ், தெலுங்கு, மலையாளம் என, பரவலாக நடித்து வரும் அவருக்கு, சில கதாநாயகர்கள், மறைமுகமாக சிபாரிசு செய்து வருகின்றனர். தெலுங்கு நடிகர் நாகார்ஜுனா நேரடியாகவே, தன் புதிய படமொன்றில் நடிக்க, நயன்தாராவுக்கு சிபாரிசு செய்துள்ளார். இதனால், சினிமாவில் தன் மவுசு இன்னும் குறையாமல் இருப்பதை நினைத்து, மட்டற்ற மகிழ்ச்சியில் இருக்கிறார் நயன்தாரா. ஆனால், உச்சத்தில் இருக்கும் மற்ற நடிகைகளோ, நயன் மீது, கடுப்பில் உள்ளனர்.



# விமர்சனம்




இதுநாள் வரை காதல் நாயகனாக வலம் வந்த ரோஜாக்கூட்டம் ஸ்ரீகாந்த் முதன்முதலாக காமெடி நாயகனாக களம் இறங்கி கலக்கி இருக்கும் படம் தான் 'பாகன்'.

கதைப்படி ஒரு ஓட்டை சைக்கிள் அதன் பாகனைப்பற்றி அதாவது, அந்த சைக்கிளின் முதலாளி பற்றியும், அவனது கைராசி பற்றியும், காதல் பற்றியும் கூறும் கொமெடி ப்ளாஷ்பேக் தான் 'பாகன்' படம் மொத்தமும்! பொள்ளாச்சி பக்கம் ஏழை சோடா வியாபாரியின் மகன் சுப்பிரமணி எனும் ஸ்ரீகாந்த்துக்கு எப்படியாவது பெரிய பணக்காரனாக ஆக வேண்டும் என்பது ஆசை. அதற்காக நண்பர்கள் பரோட்டா சூரி, குண்டு பாண்டி உள்ளிட்டவர்களுடன் சேர்ந்து கொண்டு என்னென்னவோ தொழில்களைத் தொடங்கியும், தொட்டதில் எல்லாம் பட்டது கடன் மட்டுமே... எனும் ரீதியில் படுநஷ்டமும், கஷ்டமும் அடைகிறார். ஒரு வழியாக இதற்கு ஒரே தீர்வு வசதியான வீட்டுப் பெண்ணை காதலித்து கரம் பிடிப்பது தான்... என்று ஐடியா கண்டுபிடிக்கும் ஸ்ரீ, அதன்படியே பொள்ளாச்சியிலே பெரும் கோடீஸ்வரர் மாணிக்கம் கவுண்டரின் ஒரே மகள் மகாலட்சுமி எனும் ஜனனி ஐயருக்கு ரூட் போடுகிறார்.

சின்ன வயது முதலே ஸ்ரீ மீது காதல் கொண்டு கனவில் மிதந்து வரும் ஜனனியும், ஸ்ரீயின் லவ்வுக்கு டபுள் ஓ.கே. சொல்லி, ஒரு இராத்திரி உடுத்திய சுடிதாரும், படிக்க எடுத்துப்போன புத்தகமும் கையுமாக ஸ்ரீயின் வீட்டு வாயிலில் நிற்கிறார். பதறிப்போகும் ஸ்ரீ-யோ "நான் உன்னை காதலிக்கவில்லை... உன் பணத்தைத் தான் காதலித்தேன்... இப்படி வெறுங்கையோடு வந்து நின்னா எப்படி?" எனக்கேட்டு ஜனனியை துரத்தி அடிக்கிறார். அப்புறம்? அப்புறமென்ன..? ஸ்ரீ - ஜனனி மீண்டும் சேர்ந்தார்களா...? இல்லையா...? எனும் மீதிக்கதையுடன் ஸ்ரீயின் மிதிவண்டியின் உருக்கமான கதையையும் கலந்துகட்டி கலர்புல்லாகவும், கொமெடியாகவும் கதை சொல்லி 'பாகனை' வெற்றி எனும் யானை மீது ஏற்றி இருக்கிறார் இயக்குநர் அஸ்லம்!

இயக்குநர் சொன்னதை தன் பாணியில் கொமெடியாகச் செய்து, ஸ்ரீக்கு கொமெடி வருமா...? எனும் நம் சந்தேகத்தை, தகர்த்தெறிந்து தனக்கு காதலுடன் கொமெடியும் வரும் என்பதை நிரூபித்திருக்கிறார். ஹீரோ ஸ்ரீகாந்த்!

ஸ்ரீ மாதிரியே நாயகி ஜனனியும் நல்ல நடிப்பில் நச் என்று முத்திரை பதித்து இருக்கிறார். பரோட்டா சூரி, குண்டு பாண்டி, முத்துக்காளை உள்ளிட்டவர்கள் இந்தப்படத்தில் தான் மெய்யாலுமே கொமெடி பண்ணி சிரிக்க வைக்கின்றனர் பலே! ஸ்ரீயின் அம்மாவாக கோவை சரளா, ஜனனியின் அப்பாவாக இயக்குநர் கம் நடிகர் ஏ.வெங்கடேஷ் உள்ளிட்டவர்களும் தங்கள் பங்கை சரியாகச் செய்து பாகனைத் தூக்கி நிறுத்தியிருக்கின்றனர்.

ஜேம்ஸ் வசந்தனின் இனிய இசையும், புதுமுக ஒளிப்பதிவாளரின் அழகிய ஒளிப்பதிவும், இயக்குநர் அஸ்லமின் இயக்கத்திற்கு பக்கத் துணையாக இருந்து பாகனை, யோகன் ஆக்கியுள்ளன என்றால் மிகையல்ல!

## அனுஷ்காவின் ரொமென்ஸ்



அனுஷ்கா என்றாலே, 'அருந்ததி' என்ற, அதிரடி படம் தான் ஞாபகத்திற்கு வரும். ஆனால், இனி, ஆர்யாவுடன் ரொமான்டிக்காக நடித்துள்ள, இரண்டாம் உலகம் படம் தான், ஞாபகத்திற்கு வரும் என்கின்றனர், படக் குழுவினர். அந்த அளவுக்கு படத்தில், காதல் காட்சிகளில், மிக உருக்கமான நடிப்பை வெளிப் படுத்தியுள்ளார் அனுஷ்கா. அதோடு, இதுவரை எந்த கதாநாயகர்களுடனும் இல்லாத அளவிற்கு, ஆர்யாவுடன் நெருக்கமாக நடித்துள்ளார். அவர்களது நெருக்கமான நடிப்பு, படம் வெளியாகும் போது பேசப்படும் என்கிறது படக்குழு.

## முதல்படம் அஜித்படம்?



லயோலா கல்லூரியில விஷ்காம் படித்து அமெரிக்காவில் சினிமா இயக்கம் கற்ற பார்த்திபன் மகள் கீர்த்தனா இப்போது விஷ்ணுவர்த்தன், அஜீத்தை வைத்து இயக்கும் பெயரிடப்படாத படத்தில் துணை இயக்குனராக பணியாற்றி வருகிறார். இந்தப் படம் முடிந்ததும் கீர்த்தனா படம் இயக்குவார் என்று தெரிகிறது. அஜீத் இதுவரை நடித்தது எல்லாமே கமர்ஷியல் படங்கள்தான். ஒரு படம் மனசுக்கு பிடித்த மாதிரி ஆர்ட் படத்தில் நடிக்க வேண்டும் என்பது அவரது ஆசை. அதனால் கீர்த்தனாவின் முதல் படத்தில் அஜீத் நடிக்கலாம் என்று கூறப்படுகிறது. கீர்த்தனாவும் அஜீத்திடம் கதை சொல்லி 15 நாள் கால்ஷீட் வாங்கி விட்டதாகவும் கூறப்படுகிறது.

## சந்திரமுகி 2-ம் பாகத்தில் அஜீத்?



தற்போது சந்திரமுகியின் 2-ம் பாகத்தை தயாரிக்க திட்டமிட்டு உள்ளனர். இதில் ரஜினி நடிப்பாரா? என்பது உறுதியாகத் தெரியவில்லை. அவர் நடிக்கா விட்டால் அஜீத் நடிப்பார் எனக் கூறப்படுகிறது.

## மொடர்ன் பாவனா



மலையாளத்தில், 'மெட்ரோ' என்ற பெயரில் வெளியான படம், 'காவல் தேசம்' என்ற பெயரில், தமிழ் பேச வருகிறது. இன்ஸ்பெக்டர் வேடத்தில், சரத்குமார் நடித்துள்ள இந்தப் படத்தில் நாயகியாக, மொடர்ன் பெண் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார் பாவனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அப்பாவின் சொல்!



கி.பி 1798ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் தேதியன்று நடந்த சம்பவம்.

பிரெஞ்சு சக்கரவர்த்தியான நெப்போலியனின் உத்தரவுப்படி எல்.ஓரியண்ட் என்னும் கப்பலொன்று, மத்திய தரைக் கடலில் ஊடுருவியது. அந்தக் கப்பலின் கப்டனாக விளங்கியவர் காசாபி யான்கா. அவர் அன்றைய தினம் தன்னுடைய பதின்மூன்றே வயது நிரம்பிய மகன் கியாகோமாவையும் கப்பலில் அழைத்து வந்திருந்தார்.

அவர் கப்பல் பணிகளில் ஈடுபட்டிருந்த போது தன் மகனை அழைத்துப் பாதுகாப்பான ஓரிடத்தில் அமர்த்திவிட்டு, "மகனே, எந்தச் சூழ்நிலை கப்பலில் ஏற்பட்டாலும், நீ இந்த இடத்தை விட்டு நகரக் கூடாது. நானே வந்து உன்னைக் கூட்டிச் செல்லும் வரை இங்கேயே இரு... எங்கேயும் போய்விடக் கூடாது!" என்று கூறிவிட்டுத் தன் பணிகளில் மும்முரமானார்.

பிரெஞ்சுக் கடற்படைக் கப்பல்களில் ஒன்றான எல்.ஓரியண்ட் மத்திய தரைக்கடல் வழியே ஊடுருவித் தங்களைத் தாக்க வருவதை ஆங்கிலேயக் கப்பற்படை அட்மிரல் நெல்ஸன் அறிந்தார். எனவே, அவர் தங்கள் பிரிட்டிஷ் படைக்கு சொந்தமான கப்பல்களால் எல்.ஓரியண்ட்டைச் சுற்றி வளைத்துத் தாக்கத் துவங்கினார்.

ஆனால், எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்த நெப்போலியச் சக்கரவர்த்தியின் கப்பல் அந்த எதிர்ப்புகளை முறியடித்தவாறு முன்னேறிக் கொண்டே இருந்தது. ஆங்கிலேயப் படைகள் ஆத்திரமடைந்து எல்.ஓரியண்ட் கப்பலை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிகளினால் சுட்டனர்.

இதனால் எல்.ஓரியண்ட் கப்பல் தீப்பிடித்துக் கொண்டது. கப்பலின் கேப்டனாக இருந்த காசாபி யான்கா படுகாயமடைந்தார். தீ கொழுந்து விட்டு எரிந்தவாறே, மள மளவென்று கப்பலின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவியது.

இதனைப் படுகாயத்துடன் பார்த்த காசாபியான்கா இனியும் கப்பலைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது என்று தெரிந்து கொண்டார். ஆகவே, அவர் உரத்த குரலில், கப்பலை அழித்து விடுங்கள்!' என்று தன் படைகளுக்கு ஆணையிட்டார்.

அந்த வேளையில் தன்னுடைய பதின்மூன்று வயது மகனான கியாகோமாவைத் தான் கப்பலில் கூட்டி வந்திருக்கிறோம் என்ற விஷயத்தை அவர் மறந்துவிட்டார்.

தன்னுடைய மகன் தன் வார்த்தையை மீறாதவன் என்பதும், கட்டுப்பாடுடையவன் என்பதும் அவருக்குத் தெரிந்திருந்தும் அவனை மறந்து போனார். கடுமையான காயங்கள், அவர் உயிரைக் குடித்து விட்டன. கப்பலில் பிணமானார் அவர்.

தீ வேகமாகப் பரவி வந்ததைச் சிறுவன் பார்த்தான். ஆனால், தன்னுடைய தந்தை எந்தச் சூழ்நிலையிலும் இருந்த இடத்தை விட்டு நகரக்கூடாது என்றல்லவா உத்தரவிட்டிருக்கிறார் என்ற எண்ணம் அவனுள் பிறந்தது.

பயத்துடன் தீயைப் பார்த்தவாறே, அப்பா, அப்பா! எங்கே இருக்கிறீர்கள்?' என்று அலறினான். ஒரு சில விநாடிகளில் தீயானது அவன் இருந்த பகுதிக்குப் பரவியது. வெடி மருந்துக் கிடங்கு அருகேதான் இருந்தது. அந்த இடத்திலும் தீப்பற்றியது.


இதன் காரணமாக, அந்தக் கப்பல் மிகப் பிரம்மாண்டமான சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. அதிலிருந்த சிறுவன் வெடித்துச் சிதறி மத்தியத்தரைக்கடலில் மூழ்கினான்.

'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்று கடந்த சில நூற்றாண்டுகளுக்குள்ளே நிரூபித்துக் காட்டிய கியோகோமாவின் மனத்துணிவும், வீரமும், உறுதியும் இன்று வரை பிரெஞ்சு தேசத்தில் போற்றப்படுகிறது.


இந்தத் தீரத்தைக் கேள்விப்பட்ட ஆங்கிலக் கவிஞரான பெலிஸியா ஹொமான்ஸ் சிறுவனான கியாகோமாவைப் புகழ்ந்து, நீண்ட கவிதை ஒன்றை எழுதி அஞ்சலி செய்தார்.

பிரெஞ்சி... யாகோமாவும், அவன் புகழ் பாடிய ஆங்கிலக் க... லிஸியா ஹொமான்ஸின் கவிதையும் இன்றுவ... க்குரியதாக விளங்குகின்றன.

## 10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பல் பரமசிவம்



# மாபிள் நிலம்



சாய்மனைக் கட்டில்ல சாய்ஞ்சு படுத்திருந்தன். சாய்மனைக் கட்டில்ல சாய்ஞ்சு படுக்காமல் என்ன நிமிர்ந்தே படுத்திருக்கிறது என்டு நீங்கள் நினைக்கிறது, என்னால் புரிஞ்சு கொள்ள முடியுது. தாராவைப்போல வெகுவேகமாக நடந்து வந்தா தாழம்பூச் சித்தி.

"எடிபிள்ளை...! பவளம்!! தம்பி நிக்கிறானே?..." தாழம்பூவின்ரை பெறாமகள் என்ரை மனுசி பவளத்தைத் தான் கேட்டா. தாழம்பூச் சித்தி கிணற்றுக் கட்டில பிள்ளையைக் கிடத்திப் போட்டு வந்த அவசரம் அவவின் வேகத்தில் பிரதிபலித்தது. "ஆர்? சித்தியே?... இஞ்சை எட்டி, பாலை கழுவிக் கொண்டு நிக்கிறன்... வாறன்... எனக்கு எப்பதான் ஓய்வோ?" என்றவாறு போட்டதைப் போட்டபடி விட்டிட்டு வந்தா... என்ரை அவ.

"தம்பி வேலைக்குப் போயிற்றானே?... வீட்டில கொஞ்ச வேலை கிடக்குது. மகன் இப்ப ஸ்கைப்பில கதைக்கேக்கை சொன்னான். வீட்டுக் கேற்றடியில இருந்து வீட்டு வாசல் வரை நிலத்துக்கு மாபிள் பதிக்கச் சொல்லி... அதுதான் தம்பியைக் கொண்டுவிச்சு மாபிள் மற்றது சீமெந்து வாங்குவிக்க மாபிள் பதிப்பம் என்டு..?" சடுகுது மடியைப் பிடி என்றவாறு அவசரப்படுத்தினாள் சித்தி.

"என் திடீரென்று...? நாப்பது அம்பது அடி நீளம் வரும்...? அவ்வளவுக்கும் மாபிள் பதிக்கப் போறியளோ சித்தி?..." என்டு சாய்மனைக் கட்டில்ல படுத்திருந்த நான் கேட்டு வைச்சன். உண்மையில என்ரை மனுசிக்குத்தான் தாழம்பூ சிறிய தாயார். அவ 'சித்தி சித்தி' என்று கூப்பிட அதைக் கேட்டு நானும் சித்தி சித்தி என்டு சொல்லிப் பழகிப் போயிட்டுது.

"அது மருமோனே... சித்தப்பாவின்ரை குணம் தெரியும்தானே?" என்று தொடங்கினார் சித்தி.

முந்தியெண்டால் மனுசன் குடிச்சிட்டு வந்து நேர போய் 'பெட்றூமில' கட்டில்ல பொத்தெண்டு விழுந்திடும். பிறகு கொஞ்ச நாளாய் குடிச்சிட்டு வந்து விறாந்தையில பொத்தெண்டு விழுந்திடும். பிறகு நானும் மகள் மஞ்சுவுமாய் இழுத்துக் கொண்டு போய் 'பெட்றூமில' கட்டில்ல தூக்கிப் போட்டிடுவம்.

இப்ப என்னடா எண்டால் கொஞ்ச நாளாய் பொழுதுபட்ட பிறகு குடிச்சிட்டு வந்து முத்தத்தில பொத்தெண்டு படுத்திடுது மனுசன். நானும் மஞ்சுவும் கொற கொற வெண்டு இழுத்துக் கொண்டுவந்து விறாந்தையில அல்லது 'பெட்றூமில' போடுறது... இப்ப மஞ்சுவும் வெளிநாடு போயிட்டாள். அந்த மனுசனை என்னால தனிய இழுத்துப் பறிக்க ஏலுமே?"

இப்ப என்னடா எண்டா... குடிச்சிட்டு வந்து 'கேற்'றைத் திறந்து 'சபாரி' மோட்டார் சைக்கிளை உள்ளுக்கு விடுகிறதுதான் தாமதம்... கேற்றடியிலேயே பொத்தெண்டு மனுசன் விழுந்து படுத்திடுது. நான் ஒருத்தி தனிய என்ன செய்யேலும்?... புழுதிபிக்கை கேற்றடியில அந்தாள் படுத்திருக்க றோட்டால போறவாற சனம் என்ன நினைக்கும்?... பிள்ளையளுக்கு மதிப்பே...? அதுதான் அவங்க ளோடை கதைச்சன்... அவங்கள் அப்பாவைப் புழுதிக்கை படுக்க விடாதைங்கோ... படலையில இருந்து வீட்டுவாசல் வரை மாபிள் பதிக்கச் சொல்லுற ஐடியாவை அவங்கள்தான் தந்தவங்கள்..." என்று மூச்சு விடாமல் கொட்டித் தீர்த்தாள் சித்தி.

என்ரை வாய் சும்மா கிடக்கிறேல்லை என்டு உங்களுக்குத் தெரியும்தானே?

"அப்ப சித்தி குஞ்சன்ரை சாராயத் தவறணையிலயிருந்து வீட்டுவாசல் வரை மாபிள் பதிச்சு விடுங்கோவன்... உங்களுக்கும் ஒரு கௌரவமாக இருக்கும்... என்ன மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு கிலோ மீற்றர் மூன்றரைக் கிலோ மீற்றர் தானே வரும்... உதென்ன பெரிய காசே?..." என்றேன்.

"அதுக்கு மருமோனே பொடியள் ஒத்து வராதுகள். சம்மதிக்காதுகள்... அதுதான் இப்ப 'காபற் றோட்' போடுற வேலையள் நடக்குது தானே?" என்றாள் சித்தி. அதிலையும் ரூபம் இருக்குது... அதுதான் சித்தியின் ரைமிங்... எதைக் கதைச்சாலும் ரூபத்தைத் தான் கதைப்பா.

இனி என்ன சிதம்பரச் சித்தப்பா எந்த நேரம் கடும் வெறியில வீட்டுக்கு வந்தாலும் மாபிள் தரையில் படுக்கலாம். மிஞ்சி மிஞ்சிப் போனால் ஆக ஏலாமல் போனால் 'காப்பற் றோட்' கொடுத்து வைச்ச மனுசன்.

'எனக்கு விசர் வந்ததெண்டால்?...'

சிதம்பரச் சித்தப்பா லேசுப்பட்ட ஆள் இல்லை கண்டியளோ... வலு தைரியசாலி... பொத்து பொத்தெண்டு எத்தனை அடி விழுந்தாலும் சாத்துச் சாத்தினாலும் மனுசன் தைரியமாய் நின்டு பிடிக்கும்.

உப்பிடித்தான் ஒருநாள் ஏதோ பிரச்சினைப் பட்டிச்சினம். அந்தநேரம் பார்த்து நானும் போயிட்டன். சிதம்பரச் சித்தப்பா தாழம்பூச் சித்தியைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். அவ பொட்டிப் பாம்பாய் அடங்கிப் போனா... ஏதோ வாக்கு வாதப்பட்டுக் கொண்டு நிக்கேக்கை நானும் போயிட்டன்.

"எனக்கு விசர் வந்தால் என்ன நடக்கும் தெரியுமே?..." என்று ஒரே ஒரு கேள்விதான். சித்தி, "சரியப்பா...! இப்ப என்ன நடந்திட்டுது... பேசாமல் இருங்கோ..." என்று இரங்கி வந்திட்டா. அப்பிடி ஒரு மந்திர வார்த்தை அது. அந்த வார்த்தைக்குத்தான் எத்தனை சக்தி. ஒன்றுக்கும் அடிபணியாத சித்தி அப்பிடியே பணிந்து போயிட்டா. உண்மையில ஒரு மனுசனுக்கு விசர் வந்தால் என்ன என்னவெல்லாம் நடக்கும்? என எனக்குள் நான் எண்ணிக் கொண்டேன்.

உப்பிடித்தான் எங்கடை வீட்டில எனக்கும் என்ரை மனுசிக்கும் ஒரு பிடுங்குப்பாடு வந்திட்டுது. இதுதான் தருணமென்று சிதம்பரச் சித்தப்பா விட்ட அஸ்திரத்தை அடுக்குத் தயாராய் வைச்சிருந்தன். எல்லை மீறிப் போகவே அந்தச் சொல்லம்பை தொடுத்துவிட்டன்.

"எனக்கு இப்ப விசர் வந்துதெண்டால் என்ன நடக்கும் தெரியுமே?" என்றேன் ஆக்ரோஷமாக.

உடனை மனுசி "விசர் வந்துதெண்டயோ...? விசர் வந்ததெண்டால் என்டு சொல்லாமல் விசர் மாறினால் என்ன நடக்கும் தெரியுமே? என்று கேளுங்கோ. அதுதான் பொருத்தமாக இருக்கும்" என்று இன்னொரு முரியடிப்புச் சமரை நடத்திவிட்டு அந்த இடத்தை விட்டு அமைதியாகப் போயிட்டா. அமைதியாகப் போனது அவதான், அவதிப்பட்டது நான்தான்.

**சேர்டிபிக்கற்...!**

ஒருநாள் சிதம்பரச் சித்தப்பாவை வழியில் கொக்குவில்ல இருக்கிற நல்லூர் பிரதேசசபை உபஅலுவலகத்துக்குக் கிட்டச் சந்திச்சன். என்னைக் கண்டதில அவருக்குச் சந்தோசம். அவரைக் கண்டதில எனக்கொரு சந்தோசம். சந்தோசத்துக்குக் காரணம் அந்த உபஅலுவலகத்துக்குப் பக்கத்திலேயே கள்ளுக் 'கோப்பரேசன்' இருந்ததுதான்.

அதுக்கை போய் கொஞ்சம் எடுத்து ஒரு பதநில இருக்கேக்கை சித்தப்பாவைக் கேட்டன். "அண்ணைக்கு உங்களுக்கு விசர் வந்தால் என்ன நடக்கும் தெரியுமே? என்று என்ன தைரியத்தில தாழம்பூச் சித்தியைக் கேட்டனிங்கள்? என்று கேட்டன்.

அவர் கள்ளு வாயைத் துடைச்சுப் போட்டு" அது சகோதரம்...! அட சகோதரம் இல்லை... மருமோன்! உன்னைத் தூரத்தில கண்டுட்டன். மனுசியும் உன்னைக் கண்டிட்டுது. மனுசியில ஒரு நல்ல பழக்கம் என்னெண்டால் மற்ற ஆக்களுக்கு முன்னால எனக்கு ஒரு மதிப்புக் கொடுத்துத்தான் எப்பவும் கதைக்கும்... அதுதான் உன்னைக் கண்ட உடனை "எனக்கு விசர் வந்துதெண்டால் என்ன நடக்கும் எண்டு எனக்கே தெரியாது" எண்டு நான் வீர வசனம் பேசினனான்" எண்டார். சிதம்பரச் சித்தப்பா என்னைக் கண்டிட்டுத் தான் தன்ரை சினத்தை சித்தி அடக்கி வாசிச்சிருக்கிறா போல கிடக்கு. குடும்ப வாழ்க்கை எண்டால் எவ்வளவு 'ரெக்னிக்' இருக்கெண்டு இப்பதான் தெரியுது. ஒரு 'குவாலிக்கேசனும்' இல்லாமல் கிடைக்கிற ஒரே ஒரு 'சேர்டிபிக்கற்' எண்டிட்டு அவசரப்பட்டு எடுத்திட்டன் போல கிடக்கிறது. எத்தினை சூட்சுமங்கள் இருக்குது. அதொண்டும் பாராமல் இந்த 'சேர்டிபிக்கற்றை' எடுத்ததுதான் பிழையாய் போயிற்று. நான் இந்த 'மரீஜ் சேர்டிபிக்கட்' கலியாண 'சேர்டிபிக்கற்'றைத்தான் சொல்லுறன். அந்தச் 'சேர்டிபிக்கற்' எடுக்கிறதுக்கும் பல்வேறு தகுதி திறமைகளை வளர்த்துக் கொண்டுதான் எடுக்கவேண்டும் பாருங்கோ.

# குழப்பவாதிகள்

முல்லா நஸ்ருதீன் மன்னருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். அது அரசசபையில் இருந்த பலருக்குப் பிடிக்கவில்லை.

ஒருமுறை முல்லா ஒரு நண்பரின் திருமணத்திற்கு சென்ற போது பேச்சுவாக்கில் "நாட்டில் உள்ள அறிஞர்கள் எல்லாம் குழப்பவாதிகள். எதையுமே உறுதியாக, தீர்மானமாகக் கூற இயலாதவர்கள்" என்று சொன்னார்.

அதை அறிந்த முல்லாவின் எதிரிகள் மன்னரிடம் போய் "மன்னா நீங்க அறிஞர்களை வைத்திருப்பதற்குப் பதிலாக குழப்பவாதிகளை வைத்திருப்பதாகவும், சரியான முடிவு எடுக்கத் தெரியாமல் இருக்கும் அறிஞர்கள் பேச்சுக் கேட்பதாகவும் முல்லா சொல்லிக் கொண்டு திரிகிறார்" என்று அரசரிடம் கூறித் தூண்டி விட்டார்கள்.

உண்மை நிலையை அறிய விரும்பிய அரசர், முல்லாவை சபைக்கு வரவழைத்தார்.


அத்துடன், தத்துவ மேதைகள், மாக்க ஞானிகள், சட்ட நிபுணர்கள், அறிவுள்ள அமைச்சர்கள் அனைவரையுமே கூட்டினார். பிறகு முல்லாவை நோக்கி, "இவர்கள் எல்லாம் குழப்பவாதிகள் என்று கூறினீர்களாமே? ஏன் அப்படிக் கூறினீர்கள்? இவர்கள் குழப்பவாதிகள் என்று உங்களால் நிரூபிக்க முடியுமா?" என்று கேட்டார்.

இது என்னடா வம்பாய்ப் போச்சு, சும்மா வாய்ப்பேச்சுக்கு சொன்னதை வைத்து என்னை மாட்டி விடப் பாக்கிறீங்களா, அப்போ நீங்க குழப்பவாதிகள் தான், அதை நிரூபித்தால் போயிற்று என்று நினைத்து "அரசே என்னால் நிரூபிக்க முடியும்" என்று கூறிய முல்லா, அவைப்பெரியோரிடமும் ஆளுக்கொரு தாளைக் கொடுத்தார்.

பின்னர் அவர்களிடம், "அறிஞர் பெருமக்களே... நான் ஒரே ஒரு கேள்விதான் கேட்கப் போகிறேன். அதற்குரிய பதிலை, இந்தத் தாளில் நீங்கள் எழுதிக் கொடுக்கவேண்டும்" என்றார்.

பின்னர், அவர்களிடம் ஒரு தாளைக் கொடுத்து அதில், "ரொட்டி என்றால் என்ன?" என்று கேட்கப்பட்டுள்ளது.

அனைவரும் பதிலைத் தாளில் எழுதி அரசரிடம் கொடுத்தார்கள். அரசர் படிக்க ஆரம்பித்தார்.



ஒருவர் - ரொட்டி என்பது "சத்துள்ள பண்டம்" என்று எழுதியிருந்தார்.

இரண்டாமவர் - ரொட்டி என்பது "ஒரு உணவு" என்று குறிப்பிட்டிருந்தார்.

மூன்றாமவர் - "இறைவன் கொடுத்த கொடையே ரொட்டி..."

நான்காமவர் - ரொட்டி என்பது "வேகவைத்த மாவுப் பொருள்"

ஐந்தமவர் - ரொட்டி என்பது "மாவும் நீரும் கலந்த கலப்பு"

ஆறாமவர் - அவரவர் "விருப்பத்துக்கு ஏற்ப சுவையும் வடிவும் பெறுவது ரொட்டி"

ஏழாமவர் - ரொட்டி என்பதற்கு "சரியான பொருள் யாருக்குமே தெரியாது......" என்று குறிப்பிட்டு எழுதியிருந்ததை அரசர் படித்தார்.

எல்லா பதில்களையும் அரசர் படித்து முடிக்கும் வரை பொறுமையுடன் காத்திருந்த முல்லா, "அரசே! ரொட்டி என்பது என்ன? என்ற எனது சாதாரண கேள்விக்கு, இவர்கள் அனைவரும் பலவிதமான பதில்களைக் கொடுத்துள்ளார்கள். யாருடைய பதிலும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகவில்லை பார்த்தீர்களா?

இதனால்தான் நம் நாட்டில் உள்ள அறிஞர்கள் குழப்பவாதிகள் என்றேன்", என்றார்.

அரசர் முல்லாவின் அறிவாற்றலை வியந்து அவர்மீது இருந்த குற்றச்சாட்டினைத் தள்ளுபடி செய்தார். அரசசபையில் கூடியிருந்த அனைவரும் முல்லாவின் திறமையைப் பாராட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தாயின் பேச்சு குழந்தையின் அறிவுத்திறனை வளர்க்கும்



தாயின் பேச்சு குழந்தையின் அறிவுத் திறனை வளர்க்கும் என ஆய்வில் தெரிய வந்துள்ளது. பொதுவாக குழந்தைகள் விளையாடி மகிழ அழகிய பொம்மைகள், விளையாட்டு சாதனங்கள் மற்றும் வீடியோ கேம்கள் போன்ற வற்றை பெற்றோர் வாங்கிக் கொடுக்கின்றனர். அவை அவர்களின் அறிவாற்றலை வளர்க்கும் என நம்புகின்றனர்.

ஆனால், இவற்றைவிட குழந்தைகளிடம் தாய் தொடர்ந்து பேச்சுக் கொடுத்தாலே போதும், குழந்தையின் மூளை வளர்ச்சி அடைந்து அறிவுத்திறனும் வளரும் என புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

லண்டனில் உள்ள வடமேற்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதுபற்றி ஒரு ஆய்வை மேற் கொண்டனர். அவர்கள் பிறந்த 3 மாதமே ஆன 50 குழந்தைகளிடம் இந்த ஆய்வை நடத்தினார்கள்.

அந்தக் குழந்தைகளிடம் அவர்களின் தாய்மார்களை அடிக்கடி பேச்சு கொடுக்கும்படி தெரிவித்தனர். மேலும், மீன், மாடு போன்றவற்றின் படங்களைக் காட்டி அவற்றின், பெயர்களை கற்றுக் கொடுக்கும்படியும் வலியுறுத்தப்பட்டது.

அவர்கள் கொடுத்த பயிற்சியின்படி குழந்தைகள் படங்களைப் பார்த்து அவற்றின் பெயர்களை உச்சரிக்கத் தொடங்கினர். மேலும் பல படங்களின் மூலம் அவற்றின் பெயர்களைத் தெரிவித்தன.

இந்த ஆய்வின் மூலம் குழந்தைகளிடம் தாய்மார்கள் பேச்சுக் கொடுத்தாலே போதும், குழந்தைகளின் அறிவுத்திறன் வளரும் என விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# முகத்திற்கு பொலிவு தரும் கன்னங்கள்

முகத்திற்கு பொலிவு தருபவை கன்னங்கள். உடல் ஒல்லியாக இருந்தாலும் கன்னங்கள் கொஞ்சம் புஷ்டியாக இருந்தாலே அழகை அதிகரித்துக் காட்டும். அதேசமயம் என்னதான் உடல் தசைப்பிடிப்பாக இருந்தாலும் ஒட்டிய கன்னங்கள் முகத் தோற்றத்தையே கெடுத்து விடும். எனவே, ஒட்டிய கன்னங்களை பெருகேற்ற ஆரோக்கிய உணவு முறை அவசியம் என்கின்றனர் அழகியல் வல்லுநர்கள். எனவே அன்றாட உணவில் புரதம், மாவுச் சத்து, கொழுப்புச் சத்து, நிறைந்த உணவுகளை நிறையச் சேர்க்க வேண்டும் என்பது அவர்களின் அறிவுரையாகும்.



தினமும் அதிகாலையில் எழுவது ஆரோக்கியத்தோடு கன்னங்கள் புஷ்டிக்கும் அவசியமாகிறது. காலையில் எழுந்து சிறிதளவு வெண்ணெயுடன் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து கலவை செய்து முகத்திற்கு பேசியல் போட கன்னம் பளபளப்பாக மாறுவதோடு குண்டாகும். மிதமான சுடுநீரில் சிறிதளவு உப்பு கலந்து அதை வாயில் ஊற்றிவைத்திருந்து பின் கொப்பளிக்க வேண்டும். இதனால் கன்னத்தின் அழகு கூடும்.

சில அப்பிள் துண்டுகள், சில கரட் துண்டுகள், அரை கப் எலுமிச்சை ஜூஸ் சேர்த்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் பருக வேண்டும். இதனால் கன்னம் மிருதுவாகவும், பளபளப்பாகவும் மாறும்.

ஒலிவ் ஒயில் கன்னத்தில் தேய்த்து வர பளபளப்பு கூடும். கற்றாழையால் செய்யப்பட்ட கிரீம் முகத்திற்கு ஆரோக்கியம் தருவதோடு பளபளப்பையும் தரும்.

ஒரு கப் பாலில் ஒரு தேக்கரண்டி தேன், கொஞ்சம் சீஸ், ஒரு மேசைக் கரண்டி ஓட்ஸ் கலந்து குடிக்க வேண்டும். அதோடு தினமும் தோடம்பழ ஜூஸ் குடித்து வந்தால் அழகான கன்னம் கிடைக்கும்.

முகத்திற்கு மஞ்சள் அதிகம் போடுவதை சற்றுக் குறைத்துக் கொள்வது கன்னத்தின் அழகை வறட்சியாக்குவதைத் தடுக்கும்.

ஒரு தேக்கரண்டி தேன், ஒரு தேக்கரண்டி பப்பாளி சேர்த்து கழியாக்கி முகத்தில் பூசவும். பத்து நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவ முகம் பொலிவு பெறும்.

சத்தான உணவு, உறக்கம்

பால், முட்டை, மீன், இறைச்சி, வெண்ணெய், நெய், வாழைப்பழம், வேர்க்கடலை, சுண்டல் ஆகியவற்றை அடிக்கடி உணவோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். பருப்பு கீரை வகைகள் ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தினமும் எட்டு மணி நேரம் கண்டிப்பாக உறங்க வேண்டும். கவலை ஏற்பட்டாலே முகத்தின் பொலிவு குன்றி கன்னங்கள் ஒட்டிவிடும். ஆகையால் கவலைப்படுவதைத் தவிருங்கள்.


# தேங்காய்ப்பால் புலாவ்

தேவையான பொருட்கள்-

அரிசி - 1 குவளை (250 கிராம்)
தேங்காய் துருவல் - 1 கோப்பை
பெரிய வெங்காயம் - 1
கறுவாப் பட்டை - 2 (1 இஞ்ச் அளவு)
ஏலக்காய் - 2
பிரியாணி இலை - 1
இஞ்சி பூண்டு விழுது - 1 தேக்கரண்டி
தயிர் - 3 தேக்கரண்டி
புதினா - 10 இலைகள்
கறிவேப்பிலை - 1 தேக்கரண்டி (நறுக்கியது)
கொத்தமல்லி - 1 தேக்கரண்டி (நறுக்கியது)
நெய் - 3 தேக்கரண்டி
எண்ணெய் - 2 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு

செய்முறை

1. அரிசியைக் கழுவி அரை மணி நேரம் ஊற வைக்கவும்.
2. தேங்காய்த் துருவலை மிக்ஸியில் மைய அரைத்து இருமுறை பால் (3 குவளை அளவுக்கு) எடுத்துக் கொள்ளவும். (1 குவளை அரிசிக்கு 3 குவளை தேங்காய்ப்பால்)
3. குக்கரை அடுப்பில் வைத்து எண்ணெய் நெய் ஊற்றி காய்ந்தவுடன் பட்டை, ஏலக்காய், பிரியாணி இலையைப் போட்டுத் தாளிக்கவும்.
4. வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி அதனுடன் சேர்த்து வதக்கவும்.
5. அடுத்து இஞ்சி பூண்டு விழுது சேர்த்து வாசம் போகும் வரை வதக்கவும்.
6. அதனுடன் புதினா, நறுக்கிய கறிவேப்பிலை, கொத்தமல்லி சேர்த்து வதக்கவும்.
7. அனைத்தும் நன்கு வதங்கியதும் தயிரைச் சேர்த்து, ஒரு பிரட்டு பிரட்டியதும் உடனே தேங்காய்ப் பாலை சேர்க்கவும்.
8. இதனுடன் தேவையான அளவு உப்பு சேர்த்து கொதிக்க விடவும்.
9. கொதி வந்ததும், ஊற வைத்து வடிகட்டிய அரிசியை சேர்த்து குக்கரை மூடி 5 விசில் வரும் வரை வேக விடவும்.
10. குக்கரில் ஆவி அடங்கியதும் சாதம் குலையாதவாறு லேசாகக் கிளறிப் பரிமாறவும்.



குறிப்பு

1. புதினா, கறிவேப்பிலை, கொத்தமல்லி ஆகியவற்றை தேங்காய்ப்பால் சேர்த்த பிறகு சேர்த்தாலும் வாசனையாகவே இருக்கும்.
2. தேங்காய்ப் பால் எடுக்கும் போது சிறிது சுடு தண்ணீர் சேர்த்து அரைத்தால் பால் நன்றாக வரும்.
3. புழுங்கல் அரிசி, பச்சை அரிசி, பாசுமதி அரிசி எதில் வேண்டுமானாலும் செய்யலாம். உபயோகிக்கும் அரிசிக்கு ஏற்றவாறு தண்ணீரை (தேங்காய்ப்பால்) சேர்ப்பது அவசியம்.
4. அரிசி அதிகம் குழையாமல் பார்த்துக் கொள்ளவும். உபயோகிக்கும் அரிசிக்கு ஏற்றவாறு குக்கரில் விசில் விடவும்.
5. இந்த சோறுடன் உருளைக் கிழங்கு குருமா சேர்த்துப் பரிமாற நன்றாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் நலம் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்துங்கள்!



**வினா:** நான் கொலஸ்ரோல் நோயாளி. வயது 52. புதிதாகத்தான் எனக்கு கொலஸ்ரோல் வியாதி உண்டென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. என்னென்ன உணவுகளைத் தவிர்க்க வேண்டுமென்பது பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கூறுகிறார்கள். மேலும், 2 மாதம் மாத்திரை உட்கொண்ட பின் கொலஸ்ரோல் மட்டம் 282 இலிருந்து 190ஆக குறைந்துவிட்டது. தொடர்ந்தும் மாத்திரை உட்கொள்ள வேண்டுமா?

**விடை:** உங்களது இரண்டாவது கேள்விக்கு முதலில் பதிலளித்துவிட்டு முதலாவதிற்கு வருவோம். மாத்திரையை தொடர்ந்து கிரமமாக உள்ளெடுத்து வந்ததால் தான் கொலஸ்ரோல் மட்டம் 190க்கு இறங்கியுள்ளது. அதாவது மாத்திரையை கைவிட்டால் கொலஸ்ரோல் மட்டம் மீண்டும் ஏறும் என்பதுதான் இதிலிருந்து பெறக்கூடிய செய்தி. எனவே, தொடர்ந்து மருந்து உள்ளெடுக்கப்பட வேண்டும். 3-6 மாதகால இடைவெளியில் கொலஸ்ரோல் மற்றும் ஏனைய கொழுப்பு வகைகளை பரிசோதிக்கும் இரத்தப் பரிசோதனைகளை செய்து கொள்ளவும் வேண்டும்.


எந்தெந்த உணவுகளை கொலஸ்ரோல் நோயாளிகள் தவிர்க்க வேண்டும் என்பது பற்றி ஒரு பட்டியலை கீழே தந்துள்ளேன். இதில் மரக்கறி உண்பவர்களுக்கும் கொலஸ்ரோல் அதிகரிக்க மாஜரின், பட்டர், பொரித்த உணவு, ரோல்ஸ், கட்லட், பற்றிஸ், பேஸ்ட்ரி என்பன காரணமாகலாம் என்பதை கவனிக்கவும். உதாரணமாக மரக்கறி ரோல்ஸ், மரக்கறி பற்றிஸ் என்பன மாமிசம் அற்றவை என்பதால் ஆபத்தற்றவை என்ற தவறான எண்ணம் பலரிடம் உள்ளது. மேலும் சைவ உணவு உண்பவர்களில் பால், தயிர், நெய் முதலானவை கொலஸ்ரோல் அதிகரிப்பை ஏற்படுத்தும். இறைச்சி, முட்டை என்பவற்றை விட பால் சம்பந்தப்பட்ட உணவுகளே (ஐஸ்கிறீம், தயிர், நெய்) கொலஸ்ரோல் நோயாளிகளுக்கு ஆபத்தாக இருக்கக்கூடும். நாம் உண்ணும் உணவில் உள்ள கொலஸ்ரோலை விட நிரம்பிய கொழுப்பமிலம் என்ற கொழுப்பே ஆபத்தானது. இது உடலினுள் கொலஸ்ரோல் உற்பத்தியை அதிகரிப்பதால் இந்த நிரம்பிய கொழுப்பமிலத்தை மிகமிகக் குறைவாகக் கொண்ட உணவுகளே சிறந்தவை.

1. மாஜரீன், பட்டர் தவிர்க்கவும். கொழுப்பு குறைந்த யோகட், சீஸ் பாவிக்கலாம்.
2. தேங்காய்ப்பால், தேங்காய் எண்ணெயை குறைக்கவும்.
3. பன்றி, ஆடு, மாடு இறைச்சி வகை குறைக்கவும். கோழி இறைச்சி ஓரளவு அனுமதிக்கப்படலாம். ஆனால், நீண்ட ஆழமான பொரித்தலை (deep fry) தவிர்க்குக.
4. மீன் வகை எவ்வளவும் சாப்பிடலாம். ஆனால் deep fry தவிர்க்கப்பட வேண்டும்.
5. முட்டை கிழமைக்கு இரண்டு உண்ணலாம். வெள்ளைக்கரு மட்டுமாயின் எவ்வளவும் சாப்பிடலாம்.
6. மீன், இறைச்சி பொரிக்க தேங்காய் எண்ணெயை பாவிக்குக. கடலை முதலியவை தாழிக்க மரக்கறி எண்ணெய் பாவிக்குக.
7. கணவாய், இறால், நண்டு 10-14 நாட்களுக்கு ஒரு தடவை பாவிக்கலாம்.
8. பால், தயிர், நெய், ஐஸ்கிறீம் ஆகியவற்றை வெகுவாக குறைத்து உண்க. கொழுப்பு அற்ற பால்மா பாவிக்கலாம் அல்லது சோயா பால் பயன்படுத்தலாம்.
9. ரோல்ஸ், பற்றிஸ், கட்லட் அறவே தவிர்க்க முடிந்தால் நல்லது. இதற்குப் பதிலாக கௌபி, கடலை, பயறு ஆகியவற்றை காலை மற்றும் இரவு உணவுக்கு பாவிக்கவும். கௌபி, கடலை தாழிக்க மரக்கறி எண்ணெய்க்குப் பதில் Low fat cheese பாவித்தால் ருசியாக அமையும்.

டொக்டர். எஸ்.சுரேந்திரஜித்

வாசகர்களே!
உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு
டொக்டர் எஸ்.சுரேந்திரஜித் பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உடல் நலம்
சுடர் ஒளி வாரமலர்,
இல.361, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

# வசம்பு - மருத்துவப் பயன்கள்!



வசம்பு வெப்பத்தை உண்டாக்கி பசியைத் தூண்டி வயிற்றிலே இருக்கிற வாயுவை அகற்றக் கூடிய தன்மை உடையது. இது வாந்தியை உண்டாக்குவதோடு நுண்புழுக்களை அழிக்கும் தன்மை உடையது.

நாட்பட்ட குறிவாத நோய்களுக்கு வசம்பை காசிக் கட்டியுடன் சேர்த்து நீர் விட்டு அரைத்து பற்றிட்டு வரக் குணமாகும்.

வாய் குமட்டலையும், வாந்தியையும் உண்டாக்க வசம்பை நன்கு பொடி செய்து ஒரு கிராம் அளவு உட்கொள்ள வேண்டும்.

வசம்பை வறுத்துப் பொடித்துக் கால் கிராம் தேனில் கொடுத்து வர சளி, வாயு ஆகியவற்றை அகற்றிப் பசியை மிகுக்கும்.

வசம்பைச் சுட்டுச் சாம்பலாக்கி தேனில் குழைத்து நாவில் தடவ வாந்தி, ஓங்காளம் தீரும்.

வசம்பைக் கருக்கிப் பொடித்து 100 மில்லி கிராம் அளவாகத் தாய் பாலில் கலக்கி சிறு குழந்தைகளுக்குக் கொடுக்க வயிற்றுப் பொருமல், வயிற்றுப் போக்கு, வயிற்றுவலி ஆகியவை தீரும்.

வசம்புத் துண்டை வாயிலிட்டுச் சுவைக்க, உமிழ்நீர் அதிகம் சுரக்கும். தொண்டைக் கம்மல் இருமலை அகற்றும்.

குழந்தைகளுக்கு உண்டாகும் சுரம், இருமல், வயிற்றுவலி இவை குணமாக வசம்புடன் அதிமதுரம் சேர்த்து கசாயமிட்டு காலை, மாலை இரண்டு வேளையும் கொடுக்கக் குணமாகும்.

வசம்பைத் தூள் செய்து தேனுடன் கலந்து திக்குவாய் உடையவர்கள் தினந்தோறும் காலையில் நாவில் தடவி வர பேச்சு திருந்தும்.

பசியைத் தூண்டவும், அஜீரணத்தைப் போக்கி வயிற்றில் சேர்ந்த வாயுவை நீக்கவும் வசம்பு ஒரு பங்கும் பத்து பங்கு வெந்நீரும் சேர்த்து ஊற வைத்து வடிகட்டி பதினைந்து மி.லீ. முதல் முப்பது மி.லீ. வீதம் அருந்தி வர வேண்டும். குழந்தைகளுக்கு உண்டான கழிச்சலுக்கும், முறைக் காய்ச்சலுக்கும் இதனைக் கொடுக்கலாம்.

வயிற்றில் சேர்ந்த வாயுவை அகற்ற வசம்பை அடுப்பில் வைத்து சுட்டுக் கரியாக்கி, அதனை தேங்காய் எண்ணெயுடன் கலந்து அடி வயிற்றில் பூசவேண்டும்.

சகலவித விஷக்கடிகளுக்கும் இதன் வேரை வாயிலிட்டு மென்று வர விஷம் முறியும்.

வசம்பு, பெருங்காயம், திரிகடுகு, கடுக்காய்த்தோல், அதிவிடயம், கருப்பு உப்பு சம அளவு இடித்துப் பொடித்து ஒரு தேக்கரண்டி காலை, மாலை கொடுத்துவர வயிற்றுவலி, மூர்ச்சை, காய்சலுக்குப் பின் உண்டாகும் பலக்குறைவு, பைத்தியம், காக்காய்வலிப்பு ஆகியவை தீரும்.

# சளி, காய்ச்சலுக்கு ஸ்பிறே மருந்து!

சளி மற்றும் காய்ச்சலைக் குணப்படுத்துவதற்கு புதிய வகை ஸ்பிறே மருந்து தற்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

சளி, காய்ச்சல் போன்ற நோய்கள் வைரஸ் கிருமியால் ஏற்படுகின்றன. இவைகள் காற்றின் மூலம் மனிதர்களின் உடலுக்குள் பரவுகின்றன.

நோய்களைக் குணப்படுத்த ஊசி மற்றும் மருந்து, மாத்திரைகள் தான் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது இவற்றைக் குணப்படுத்த ஸ்பிறே மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வொஷிங்டனில் உள்ள பல்கலைக்கழக மருத்துவ மனையில் பணிபுரியும் நிபுணர்கள் அதற்கான ஸ்பிறே மருந்தைத் தயாரித்துள்ளனர்.

எஸ்பர் தலைமையிலான குழுவினர் ஆய்வு நடத்தி கிளிசரின் மற்றும் மஞ்சளை சேர்த்து மருந்து தயாரித்தனர். அவற்றை மூக்கில் ஸ்பிறே மூலம் உறிஞ்சினால் போதும். சளி மற்றும் காய்ச்சல் குண மாகியது.

இவை மனித உடலுக்குச் சென்று சளி மற்றும் காய்ச்சலை உருவாக்கும் வைரஸ் கிருமிகளை அழிக்கிறது. அதன் மூலம் நோய் குணமாகிறது. இந்த மருந்து விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

39

**நா.யோகேந்திரநாதன்**

காசியின் மண்டை உடைந்து இரத்தம் ஒழுகியதில் காசிப்பிள்ளை முதலாளிக்கும் பரம சந்தோசம். ஆனால் வடிவேலு பிடிபட்டு அடி வாங்குவான் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை. எனினும் அதைக் கூட தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியும் என நம்பினார். அவரின் அந்த நோக்கத்தைச் செயல்படுத்த 'நரிமுத்தர்' என அழைக்கப்படும் முத்தையரே சரியான ஆள் என அவர் முடிவு செய்த காரணத்தால் தன் காரைக் கொண்டு போய் முத்தரின் வீட்டுப் படலையடியில் நிறுத்திவிட்டு அதிலிருந்து இறங்காமலே 'ஹோர்ன்' அடித்தார்.

வீட்டுத் திண்ணையிலிருந்து ஒரு சுருட்டைப் புகைவிட்டு அனுபவித்துக் கொண்டிருந்த நரிமுத்தர் சத்தம் கேட்டு எழுந்து வெளியே வந்தார்.

காசிப்பிள்ளை காரை விட்டு இறங்காமலே விஷயத்திற்கு வந்தார்.

'நேற்று லெக்சன் கூட்டத்திற்கு நீ போனனியே?"

"ஓ... போனனான்!" என்றார் முத்தர். அவரின் கேள்வியின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமலே!

"அவன் பொன்னுக்குட்டியன் வடிவேலனைப் போட்டு அடி அடியெண்டு அடிச்சானாம். நீங்கள் என்ன வாய் பாத்துக் கொண்டு நிண்டனிங்களோ? உங்களுக்கு மானரோசம் இல்லையே?"

முத்தரின் நெஞ்சில் அந்தக் கேள்வி 'சுரீர்' என்று ஏறியது. எனினும் அவர் தன் வழுக்கைத் தலையைத் தடவியவாறே "இவன் அவன்ரை பெட்டைக்கு கல்லாலை எறிஞ்ச காயம்" என்றார்.

"ஏதோ தெரிஞ்சோ தெரியாமலோ செய்து போட்டான். அதுக்கு அந்தக் கீழ்சாதி ஆலடிவெட்டையானிலை கை வைக்கலாமே"

என்றார் காசி சற்று உரத்த குரலில்.

முத்தருக்கும் இப்போ அந்த வார்த்தைகளால் புதிய ஞானம் பிறந்துவிட்டது போல் தோன்றியது. அவரும் "ம்..ம்.. உப்பிடியே விட்டால் மணியாறன்மூலையார் நாளைக்கு என்னிலையும் உங்களிலையும் கை வைக்கத் துணிஞ்சிடுவங்கள்" என்றார்.

"ம்.. இப்ப விளங்குதே.. உப்பிடியே விட்டால் பருத்தி பௌத்திரம் ஆன கதையாய்த் தான் முடியும்" என்றார் காசி.

"சீ... சீ... விடேலாது. ஒரு முடிவு காணத்தான் வேணும்!" என்றார் முத்தர் பல்லை நெருமியவாறே!

காசிப்பிள்ளை முதலாளி தன் சட்டைப் பையிலிருந்து எடுத்து இரண்டு ஐம்பது ரூபா தாள்களை நீட்டியவாறு, "இந்தா பிடி" என்றார்.

முத்தர் அசட்டுச் சிரிப்புடன் "இது எதுக்கு?" என்றவாறே கையை நீட்டி வாங்கிக் கொண்டார்.

"அங்கினை பாத்து உன்ரை ஆக்களுக்கு கள்ளைச் சாராயத்தை வேண்டிக்குடு" என்று விட்டுக் காரை எடுத்தார். காரும் ஏதோ பெரிய சாதனையை முடித்து விட்டுப் புறப்படுவது போல் ஒரு பெரிய உறுமலுடன் புறப்பட்டது.

முத்தர் உடனடியாகவே வடிவேலனைச் சந்திக்கப் புறப்பட்டார். ஆலமரத்தில் சாய்ந்து கொண்டு வடிவேல் நிலத்தில் இருக்க, அங்கு எப்போதோ பொழியப்பட்டு நீண்டகாலமாகவே பாவிக்கப்படாத ஒரு நீண்ட கல்லில் சிவஞானமும் கனகரத்தினமும் அமர்ந்திருந்தனர்.

அங்கு வந்த நரிமுத்தர் "என்னடா வடிவேலு சோர்ந்து போயிருக்கிறாய்?" என்று விட்டு "ம்... கண்ட நின்ட சாதியள் எல்லாம் அடி வேண்டுற அளவுக்கு காலம் கெட்டுப் போச்சுது" என்றார். அவர் எதற்கு அத்திவாரம் போடுகிறார் என்பதை கனகரத்தினம் உடனடியாகவே புரிந்து கொண்டான். அவன் எதுவும் பேசவில்லை.

முத்தர் மெல்ல வடிவேலுவின் அருகில் அமர்ந்தவாறே அவனின் தோளில் தடவினார். "என்னடா நல்ல நோவே?"

"பொன்னுக்குட்டியின்ரை கையாலை வேண்டினால் எப்படி இருக்குமெண்டு தெரியும் தானே?" என்றான் சிவஞானம் கிண்டலாக.

முத்தர் சீறினார். "உங்களைப் போலை முதுகிலை எலும்பு முளையாத இளந்தாரியள் இருந்தால் பொன்னுக்குட்டியன் என்ன அவன்ரை பெட்டை கூட எங்களைக் காலாலை அடிச்சுப் போட்டுத் தான் போவள்!"

நரியரின் நரி விளையாட்டு ஆரம்பமாகி விட்டதைச் சிவஞானமும் கனகரத்தினமும் புரிந்து கொண்டனர்.

கனகரத்தினம் சிரித்துக் கொண்டே சொன்னான். "சீ.. அப்படி அவள் செய்யாள். செய்தால் அவளின் புருஷனைச் செய்த மாதிரி வெறுங்கையோடை வெளிக்குப் போற நேரம் ஒழிச்சிருந்து சுட்டுப் போடுவியள் எண்டு அவளுக்குத் தெரியும்!"

அவனின் நக்கலை முத்தர் புரிந்து கொண்டார். என்றாலும் "அவன் பொன்னம்பலம் ரோசக்காறன்... சுட்டான் உங்களைப் போலயே?" என்றார் அவர்.

"அதுதான் பதினொரு நாளைக்கொருக்கால் பொன்னம்பலம் கூட்டத்தை மாடு பிணைச்ச மாதிரி சங்கிலியிலை பூட்டி சாய்ச்சு வாறவங்கள் நீ காணேல்லையே?" என்றார் சிவஞானம்.

"அதிலையென்னடா வெட்கம்? அவன் வீரன்" எனக் கொதித்தார் அவர்.


"ஓ.. ஓ.. ஒளிச்சு நிண்டு சுட்ட வீரன்" என்று சிவஞானம் கூற இருவரும் பலமாகச் சிரித்தனர். வடிவேலுவுக்கும் சிரிப்பு வந்தபோதும் அவன் அதைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

இதில் கதைப்பதில் பயனில்லை என்று முத்தரின் நரி மூளை சொல்லவே அவர் எழுந்தவாறே "இவங்களோடை என்ன கதை. நீ வாடா..." என வடிவேலுவை அழைத்தார் அவர்.

"எங்கை?" எனக் கேட்டான் வடிவேலு.

"வாவன்ரா உப்பிடி ஆச்சிமுத்து வீட்டுப்பக்கம் போட்டு வருவம்" என்றார் முத்தர்.

வடிவேலு தயங்கியவாறே மெல்ல எழுந்தான். அடி வாங்கிய நோவுக்கு சாராயம் குடித்தால்



நல்லது போலவே அவனுக்கும் பட்டது.

சிவஞானம் ஒரு மெல்லிய சிரிப்புடன் "சாராயத்தை வேண்டிக் குடி.. அதோடை நாற்று கயித்தை விழுங்கி விடாதை. பிறகு பொன்னம்பலம் ஆக்களோடை இருந்தாவது ஆளாய் நடக்க வேண்டி வந்திடும்" என்றான்.

"பொத்தடா வாயை!" என்று விட்டு வடிவேலுவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு விடுவிடென்று நடந்தார் முத்தர்.

தேர்தல் வேலையாக சிவஞானமும் கனகரத்தினமும் பருத்தித்துறைக்குச் சென்று விட்டு மாலை ஏழு மணியளவில் திரும்பி வந்தபோது ஆலடிச் சந்தியில் எட்டுப் பத்துப் பேர் கொட்டன் பொல்லுகளுடன் நிற்பதைக் கண்டுவிட்டு இருவரும் திகைத்து விட்டனர்.

கனகரத்தினத்தைக் கண்டதும் வேகமாக அருகில் வந்த தங்கராசா "உங்களை வழியிலை ஒருதரும் காணேல்லையே?" எனப் பரபரப்புடன் கேட்டான். அவனின் கையில் ஒரு வாள் மின்னியது. சிவஞானத்துக்கோ கனகரத்தினத்துக்கோ எதுவுமே புரியவில்லை. சிவஞானம் வியப்புடன் கேட்டான் "ஏன் என்ன விஷயம்?"

"உனக்கு ஒண்டுமே தெரியாதே. பொன்னுக்குட்டியன் இண்டைக்கு பருத்துறையிலையிருந்து ஆக்களைக் கொண்டு வந்து வடிவேலனை சந்தியிலை வைச்சு வெட்டப் போறானாம். ஆலடி வெட்டையார் ஆரும் குறுக்கை வந்தால் அவையையும் வெட்டுறதாம்" என்றார் தங்கராசா.

கனகரத்தினத்தால் அதை நம்ப முடியவில்லை. சரவணை கார்த்திகேயன் மாஸ்டரின் கதையுடன் சமாதானமடைந்து விட்டதாக அவன் நினைத்திருந்தான். எனினும் சிங்களர் கொல்லப்பட்டது, கமலி காயப்பட்டது போன்ற தொடர் சம்பவங்கள் சிலவேளை பரவணையை இப்படியான ஒரு நிலைக்குத் தூண்டியிருக்கலாம் எனவும் கருத வைத்தது.

எனினும் அவன் "இப்ப வடிவேலு எங்கை?" எனக் கேட்டான். "அவனைக் கொண்டு போய் காசிப்பிள்ளை முதலாளி வீட்டிலை ஒழிச்சு வைச்சிருக்கிறம். இஞ்சை மணியாறன்மூலையார் ஆர் வந்தாலும் அடிச்சு முறிக்க ஆயத்தமாய் சந்திக்கு சந்தி நிக்கிறம்" என்றார் தங்கராசா.

சிவஞானம் "இப்பிடி விஷயமெண்டு விதானை யாரட்டைச் சொல்லேல்லீங்களோ?"

"காசிப்பிள்ளை முதலாளி சொல்லியிருப்பார்!"

கனகரத்தினம் கேட்டான் "விதானையார் வந்தவரே?"

"இல்லை!"

கனகரத்தினம் அழுத்தமாகச் சொன்னான். "அப்பிடியெண்டால் விதானையாரட்டைச் சொல் லேல்லை!"

தங்கராசா இழுத்தான். "இல்லை. சொல்லுற தெண்டுதான் சொன்னவர்!"

சிவஞானத்திற்கும் கனகரத்தினத்திற்கும் காலையில் ஆலடியில் முத்தர் நரி விளையாட்டு தொடங்க முயன்றதும் வடிவேலுவைச் சாராயம் குடிக்க இழுத்துக் கொண்டு போனதும் நினைவுக்கு வந்தன.

இப்போ கனகரத்தினம் உறுதியான குரலில் கேட்டான். "இந்தக் கதையை ஆர் துவக்கினது?"

"எல்லாரும் கதைக்கிறாங்கள்!"

"ஒருதன் துவக்க அதிலையிருந்து பரவி எல்லாரும் கதைப்பாங்கள். நான் கேட்கிறது துவக்கினது ஆர்?"

தங்கராசாவும் மற்றவர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சிவஞானம் "மச்சான்... உது நரிமுத்தரின்ரை விளையாட்டு. இதுக்கை ஏதோ ஒரு பெரிய திருகுதாளம் இருக்குது" என்றான் கனகரத்தினத்தைப் பார்த்து.

"ம்.. இது தனிய நரிமுத்தரின்ரை வேலையில்லை. பின்னுக்கு ஒரு பெரிய கை இருக்குது. இண்டைக்கு எங்களுக்கும் மணியாறன்மூலைக்கும் கலகம் ஏற்படுத்துற மாதிரி ஏதோ ஒரு பெரிய சதி நடக்குது. அதை உடனை முறியடிக்க வேணும்" என்றான் கனகரத்தினம் சற்று பரபரப்புடன்.

சிவஞானம் காலையில் ஆலடியில் நரிமுத்தர் தங்களிடமும் வடிவேலுவிடமும் கதைத்த விஷயங்களையும் வடிவேலுவை சாராயம் வாங்கிக் கொடுக்கக் கூட்டிக் கொண்டு போனதையும் மற்றவர்களுக்குச் சொல்லி விட்டு "மணியாறன்மூலையார் அப்படி எதுவும் செய்யிறதெண்டால் விதானையாருக்குத் தெரியாமல் விடாது. அவர் அப்பிடி ஏதும் நடக்க விடார். நீங்கள் அவசரப்படாதேங்கோ. நான் விதானையார் வீட்டை போட்டு வாறன்" என்றான்.

"அவங்கள் வந்தால் என்ன செய்யிறது?" என்று ஒருவிதமான தயக்கத்துடன் கேட்டான் தங்கராசா.

"நான் உங்களோடை நிக்கிறன். அவங்கள் வராங்கள். வந்தால் நிலைமையைப் பாத்துச் செய்வம்" என்றான் கனகரத்தினம். சிவஞானம் சைக்கிளை எடுத்துக் கொண்டு விதானையார் வீடு நோக்கிப் புறப்பட்டான்.

சிவஞானம் அந்த இடத்தை விட்டுப் போன சில நிமிடங்களிலேயே ஒரு பெண் குரல் "ஐயோ ஓடி வாருங்கோ... ஓடி வாருங்கோ காப்பாத்துங்கோ" என சற்றுத் தொலைவில் கேட்க ஆரம்பித்தது.

தங்கராசா "வடிவேல் வீட்டுப்பக்கமல்லே... கேட்குது" என்றான்.

"ஓமோம் வாங்கோ. போய்ப் பாப்பம்?" என்று விட்டு கனகரத்தினம் முன்னால் ஓட ஆரம்பித்தான். மற்றவர்களும் அவனைப் பின் தொடர்ந்து ஓடினர்.

அவர்கள் வடிவேலுவின் வீட்டை அடைந்த போது அவனின் தாய் முற்றத்தில் நின்று அலறிக் கொண்டிருந்தாள்.

கனகரத்தினம் "என்னணை? என்ன நடந்தது?" என்று கேட்டான். அவள் "ஐயோ... ஆரோ முத்தத்திலை நடமாடின சத்தம் கேட்டு வெளியிலை வந்து பார்த்தன். இருட்டுக்கை இரண்டு மூண்டு பேர் நிண்டாங்கள்... என்னைக் கண்டிட்டு கொண்டு வந்த கொள்ளிக் கட்டையை எறிஞ்சு போட்டு ஓடினவங்கள்" எனப் பயத்துடனும் களைப்புடனும் சொல்லி முடித்தாள். முற்றத்தில் ஒரு கொள்ளிக்கட்டை புகைந்து கொண்டு கிடந்தது. வந்தவர்களில் ஒருவன் கோபத்தில் கத்தினான்.

"மணியாறன்மூலையார் வடிவேலன்ரை வீடு கொழுத்த வந்திருக்கிறாங்கள். மனிசி கண்டவுடனை விட்டிட்டு ஓடியிட்டாங்கள்."

இன்னொருவன் "இனிப் பொறுக்கேலாது..., இப்பவே போய் மணியாறன்மூலையுக்கை புகுந்து வெட்டுவம்" என்றான்.

கனகரத்தினம் சற்றுத் தடுமாறி "அவசரப்படாதேங்கோ! பாத்துச் செய்வம்" எனத் தடுக்க முயன்றான்.

"உன்ரை சொல்லைக் கேட்டால் நாங்கள் அழிய வேண்டியது தான்!" என்று ஒருவன் கூற அனைவரும் புறப்படத் தயாரானார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் குற்றங்கள்!

**கடந்த மூன்று மாதங்களில் வடக்குப் பகுதியில் சுமார் 500 வாள் வெட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருப்பதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தது வடக்கு பிரதேசங்களில் பொதுமக்களின் பாதுகாப்புச் சட்ட அமுலாக்கலும் சாணேற முழம் சறுக்கும் கதையாக அப்பட்டமாக வெளிக்காட்டியிருக்கிறது. பொதுமக்களின் ஒத்துழைப்பும் உடனுக்குடன் இது தொடர்பான தகவல்களும் கிடைக்கும் பட்சத்தில் குற்றச் செயல்களை ஓரளவுக்கேனும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருக்கிறார்.**

நாடு வரலாறு காணாத வகையில் அபிவிருத்தி கண்டுவருவதாக ஆட்சியாளர்கள் தெரிவித்து வரும் நிலையில் நாட்டில் குற்றச் செயல்களின் எண்ணிக்கையும் வரலாறு காணாத வகையில் அபிவிருத்தி கண்டு வருகின்றது. குறிப்பாக நாட்டின் சட்ட அமுலாக்கம் சீர்குலைந்து காணப்படுவது போன்ற தோற்றப்பாடு இதன் மூலம் உருவாகி வருகின்றது. கொலைகள், கொள்ளைகள், கோஷ்டி மோதல்கள், வாள்வெட்டுச் சம்பவங்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் என்பன நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக நாட்டின் பிரதான எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைத்து அரசை விமர்சித்து வருகின்றன. அதிகரிக்கும் குற்றச் செயல்கள் அரசுக்கு சவாலாக மாறி வருகின்றன. தமிழர் பிரதேசங்களில் போர் முடிந்த பின் தலைதூக்கியிருந்த கிறிஸ் பூத விவகாரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், மறுபக்கத்தில் வாள்வெட்டுச் சம்பவங்கள் கோஷ்டி மோதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக, வெளிவரும் செய்திகள் ஆதாரப்படுத்துகின்றன.

அந்தவகையில், கடந்த மூன்று மாதங்களில் வடக்குப் பகுதியில் சுமார் 500 வாள்வெட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருப்பதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தது குறிப்பாக வடக்கு பிரதேசங்களில் பொதுமக்களின் பாதுகாப்புச் சட்ட அமுலாக்கலும் சாணேற முழம் சறுக்கும் கதையாக இருப்பதை அப்பட்டமாக வெளிக்காட்டியிருக்கிறது. பொதுமக்களின் ஒத்துழைப்பும் உடனுக்குடன் இது தொடர்பான தகவல்களும் கிடைக்கும் பட்சத்தில் இவ்வாறான சம்பவங்களை ஓரளவுக்கேனும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இத்தகைய வாள்வெட்டுச் சம்பவங்களுக்கான காரணம் தனிப்பட்ட பகை என பொலிஸ் தரப்பு கூறுகின்றது. தனிப்பட்ட பகை உணர்வு கொலை செய்யும் அளவிற்கு மனிதர்களை மாற்றி வருகின்றது என்ற உளவியல் உண்மை வெளிப்படையாகின்றது.

அந்தவகையில் அண்மையில் திருநெல்வேலி சிவன் கோயிலுக்கு அருகில் இடம்பெற்ற குருதியை உறைய வைக்கும் வாள்வெட்டுச் சம்பவம் மக்களை அதிர்ச்சிக்குள்ளும் அச்சம் நிறைந்த சூழலுக்குள்ளும் தள்ளியுள்ளது. அன்று பிற்பகல் 4.30 மணியளவில் ஆலய வீதிக்கருகில் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில் அப்பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இளைஞர் குழுவொன்று குறித்த நபர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் பின்னர் திரைப்படங்களில் வந்திறங்கும் வில்லன்களை போல் குறித்த நபர்களை துரத்தி துரத்தி வாளால் சரமாரியாக வெட்டியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இக்கொடூர சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான பத்மசீலன் ஜெகன்சனின் பிரபா (வயது 28) என்பவர் கோரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். தலையில் வாள்களால் வெட்டி, தலை பிளக்கப்பட்ட நிலையில் அப்பகுதியில் கடும் இரத்தப்போக்குடன் சடலம் கிடந்ததாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்சம்பவத்தில் கொலை செய்யப்பட்ட குறித்த நபருடன் சேர்ந்து உரையாடிக் கொண்டிருந்த அதே இடத்தைச் சேர்ந்த இருவர் மோசமான வாள்வெட்டுக் காயங்களுடன் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக பொலிசாரை தொடர்பு கொண்டு கேட்ட போது இச்சம்பவத்தில் உயிர் தப்பியிருப்பவர்களின் வாக்குமூலத்தின் மூலம் இவ்வாள்வெட்டை நிகழ்த்திய கொலையாளிகளை கைது செய்ய முடியும் எனத் தெரிவித்திருந்தனர்.

ஆனால் இச்சம்பவம் தொடர்பில் சில நாட்களின் பின் கருத்துத் தெரிவித்த யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீசிறிதுகனேசன் இச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், குறித்த கைதுகள் தொடர்பிலும் இடம்பெற்று வரும் விசாரணைகள் தொடர்பிலும் இப்போது எதுவுமே கூறமுடியாது எனவும், அவ்வாறு கூறினால் அது குற்றவாளிகள் தப்பிக்கவே வழிவகுக்கும் எனவும் தெரிவித்திருந்தார். இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் 7 பேர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்களும் வெளியாகியிருந்தன.

இக்கொலை ஏன் நிகழ்த்தப்பட்டது, மோட்டார் சைக்கிளில் வந்த கொலையாளிகள் யார்? என்பது இன்னும் வெளிவராத சங்கதிகளாக இருக்கின்றன. சன சந்தடியுடைய வீதிக்கருகாமையில் பிற்பகல் நேரம் துணிகரமாக கூரிய ஆயுதங்களுடன் துரத்தி துரத்தி வாள்களால் வெட்டிவிட்டு தப்பிச்செல்லக்கூடிய துணிவு யாருக்கு வந்திருக்கிறது என்பது பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகும். அத்துடன் குடாநாட்டில் வாள்வெட்டுச் சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும்வரை இதுகுறித்துபொலிஸார் தீவிர நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் அதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவையெனவும் யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா குறிப்பிட்டு 48 மணிநேரத்திற்குள் திருநெல்வேலி வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றிருப்பது பொதுமக்களை அச்சத்திற்குள் தள்ளியுள்ளது. அத்தோடு இச்சம்பவம் பொலிஸாருக்கு விடுக்கப்பட்டிருக்கும் சவாலாகவே நோக்க வேண்டியிருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இச்சம்பவம் இடம்பெறுவதற்கு சில வாரங்களுக்கு முன் இதுபோன்ற ஒரு சம்பவம் கொக்குவில் பகுதியில் இடம்பெற்றிருக்கிறது. அதாவது கடந்த முதலாம் திகதி கொக்குவில் பகுதியில் இரு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிலும் விபத்து சேவை விடுதியிலும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த குழு அப்பகுதியில் நின்ற குழுவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் இதனை அடுத்து சம்பந்தப்பட்ட குழு மறைத்து வைத்திருந்த வாள்களை எடுத்து சரமாரியாக வெட்டிவிட்டு தலைமறைவானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனாலும் இச்சம்பவம் ஏன் இடம்பெற்றது, வாள்வெட்டுக்கான காரணம் என்பன பொதுமக்கள் மத்தியில் இன்றும் பதில் காணப்படாத கேள்விகளாகத் தொடர்கின்றன.

யாழ்ப்பாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவிலும் உள்ளடக்கப்படும் 14 இற்கும் மேற்பட்ட பொலிஸ் நிலையங்களில் மூன்று மாதத்தில் 500 வாள்வெட்டு சம்பவங்கள் பதிவாகியிருப்பதாக கணக்கெடுத்து வைத்திருக்கும் பொலிசார் அவற்றை கட்டுப்படுத்துவதில் தோல்வியையே கண்டு வருகின்றனர் என்ற உண்மையை தொடரும் வாள்வெட்டுகள் நிரூபித்து வருகின்றன. இதுவரை பலர் கைதுசெய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனவும் தலைமறைவாகியிருப்பவர்களைத் தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கும் பொலிஸார் இச்சம்பவங்களை வேரோடு களைந்து தலைதூக்கியிருக்கும் சமூக விரோத குழுக்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையை பொதுமக்கள் தொடர்ந்து விடுத்து வருகின்றனர்.

அதேவேளை, வாள்வெட்டுகளுக்கு நிகராக கொள்ளைச் சம்பவங்களும் தினம் தினம் அதிகரித்து வருவதாக தொடர் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. கடந்த ஒருசில மாதங்களில் 11 கொள்ளைச் சம்பவங்கள் யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களில் பதிவாகியிருப்பதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா யாழில் வைத்து ஊடகங்களிடம் தெரிவித்திருக்கிறார். அச்சுவேலி தோப்புப் பகுதி, அச்சுவேலி மடத்தடி, கோண்டாவில் உள்ளடங்கலான பகுதிகளிலேயே இச்சம்பவங்கள் பதிவாகியிருப்பதாகவும் இச்சம்பவங்களைக் கட்டுப்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவற்றிற்கு நிகராக சிறுமிகள் மீதான பாலியல் துஸ்பிரயோக சம்பவங்களும் அதிகரித்து வருவதாக செய்திகள் தினம் தினம் வருகின்றன. இந்த சிறுமிகள் மீதான பாலியல் துஸ்பிரயோகங்கள், பாலியல் வல்லுறவுகள் பெரும்பாலும் அப்பிள்ளைகளின் நெருங்கிய உறவினர்களாலேயே நிகழ்த்தப்பட்டு வருவதான தகவல்கள் வெளியாகி வருகின்றன. அந்தவகையில் கிளிநொச்சிப் பகுதியில் கடந்த சில நாட்களுக்குள் இரண்டு பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதற்கு 13 வயது பிள்ளையொன்றும் 8 வயதுப் பிள்ளையொன்றும் இலக்காகியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேராவின் தரவின்படி கடந்த சில மாதங்களுக்கு முன் யாழ்.மாவட்டத்தில் 06 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியிருப்பதாகவும் இவை சிறுமிகளின் நெருங்கிய உறவினர்களாலேயே நிகழ்த்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை வடமராட்சியிலுள்ள பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலும் இது தொடர்பான முறைப்பாடுகள் சில பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் பெற்றோர் தமது பிள்ளைகள் மீது அக்கறையுடனும் அவதானத்துடனும் செயற்படுமாறும் அது தொடர்பான தகவல்களை தமக்கு உடனுக்குடன் அறியத்தரப்படும் பட்சத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அப்பகுதியைச் சேர்ந்த குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, சிறுமிகளை வார்த்தைகள் கூறி அவர்களை தமது இச்சைக்கு இரையாக்கிக் கொள்ளும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. 'பேஸ்புக்' போன்ற தகவல் தொடர்பாடல் இணையங்கள், சமூக வலைத்தளங்கள் இதற்கு வழியமைத்தும் வருகின்றன. பேஸ்புக் மூலம் பரிமாறிக் கொள்ளப்படும் தொலைபேசி இலக்கங்கள் சமூகச் சீரழிவுக்கு துணைபோகின்றது எனவும் அதிர்ச்சித் தகவல் வெளியாகின்றது. இந்நிலையில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன் பழகுபவர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறும் பிள்ளைகளின் நடமாட்டங்கள் குறித்தும் அவர்களின் செயற்பாடுகள் குறித்தும் விழிப்பாக இருக்குமாறும் பொலிஸ் தரப்பு பெற்றோர்களுக்கு ஆலோசனை கூறுகின்றது. குறிப்பாக பெண்பிள்ளைகளை பிற்பகல் நேரங்களில் தனியாக அனுப்புவதையும் பிள்ளைகள் பாதிக்கப்படுவதற்கான சூழ்நிலை ஏற்படுவதைத் தவிர்க்கவுமான நடவடிக்கைகளினை உடனடியாக மேற்கொள்ளுமாறும் பொலிஸார் அறிவுறுத்துகின்றனர்.

இதேவேளை, மறுபுறத்தில் இளைஞர் குழுக்களுக்கு இடையிலான முறுகல்கள், மோதல்கள் அதிகரித்து வருகின்றன. அதன் மூலமாக காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் இளைஞர்களின் எண்ணிக்கையும் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக வைத்தியசாலைகளின் புள்ளிவிபரங்கள் பகிர்கின்றன. மதுப்பிரியர்களின் எண்ணிக்கையும் சமூக விரோதக் குழுக்களின் எண்ணிக்கையும் தற்போது அதிகரித்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

எனவே, இத்தகைய சமூக விரோதக் குழுக்களை வேரறுக்கவும் தமிழர் பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தவும், கலாச்சார சீரழிவுகள் கோஷ்டி மோதல்கள் என்பவற்றை கட்டுப்படுத்தவும் பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் இது குறித்து பொலிஸாருக்கு பொதுமக்கள் உடனுக்குடன் தகவல்களை வழங்கி நாட்டின் சட்டம் அமைதி நிலைநாட்டப்படுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எல்லாவற்றையும் பொலிஸார் கண்காணிக்க முடியாது. பெற்றோர் தங்கள் பிள்ளைகள் குறித்தும் பொதுமக்கள் கண்முன்னே நடைபெறும் குற்றச்செயல்கள் குறித்தும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

ஹரன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் தேவை, கௌரவமான வாழ்வு.

மலையகம்




■ மலையகத்திலிருந்து நீதிவர்மன்

மக்களின் தேவை. கௌரவமான வாழ்வு. ஒற்றுமை என்ற சொல்லை வைத்து கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களில் சேவலை கூவ வைத்தார்கள். அது தானே கூவவில்லை. ஒருகோடி ரூபாவை கொத்தித் தின்றது. அப்பணம் நாவலப்பிட்டி தேயிலை தோட்டங்கள், மத்துகம இறப்பர் தோட்டங்கள் சேகரித்து கொடுத்த சந்தா பணங்களிலிருந்து செலவிடப்பட்டது. இ.தொ.கா. சுமார் நாற்பது இலட்சம் வரையில் வாரி இறைத்தது. மலையக மக்கள் முன்னணி பத்து இலட்சம் ரூபாவை செலவழித்தது. தமது வேட்பாளர் தோல்வி அடைவர் என தெரிந்து செய்யப்பட்ட செலவு அது. மேலக மக்கள் முன்னணி கேகாலை, இரத்தினபுரி வேட்பாளர்களிடம் இருபது இலட்சம் வரை செலவழிக்க வற்புறுத்தி வந்தது. பெரிய சங்கத்தை வீழ்த்த அந்த யுக்தி பலனளிக்குமென அவர்களின் சாணக்கியம் பேசப்பட்டிருக்கலாம். மலையக கட்சி ஒன்று இருபத்தைந்தாயிரம் வரை வாக்குப் பெற்றுள்ளது. அது ஜே.வி.பி. கட்சியைத் தோற்கடித்துள்ளது. அதற்கு மலையக தமிழர் என்ற தனிச் சாயத்தை பாடசாலைகள், ஆலயங்கள், வர்த்தக நிலையங்கள் எனபவற்றில் பூசி விட்டது. ஆளும் கட்சி மாகாண சபை அமைக்கும் போது சேவல் உறுப்பினர்கள் அதன் அருகில் அமர்ந்து கொள்வார்கள். அதேநேரம் சுமார் ஏழாயிரம் வாக்குகள் ஆளும் கட்சிக்கும், பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகள் ஐ.தே.கட்சிக்கும் சென்றுள்ளன. கடந்தகால காட்டிக் கொடுப்பு அரசியலின் வடுக்களே அவை. இன்றுகூட கேகாலை, இரத்தினபுரியில் இரு உறுப்பினர்கள் கிடைக்க திரு.மனோகணேசன் அவர்களே காரணமாக இருந்தார். கிழக்கில் வீடு. மலையகத்தில் சேவல் என்ற சொல் வீச்சு சப்ரகமுவவை திசை மாற்றியது. ஆனால், அவருக்கு சபையில் குரலில்லை. இதனை 'சுடரொளி' முன்கூட்டியே மலையக பகுதியில் எழுதியும் இருந்தது. ஆனால் எதிர்கட்சியான ஐ.தே.கட்சிக்கு இனிவரும் மாகாணசபை தேர்தல்களில் மேலக மக்கள் முன்னணியின் செல்வாக்கு குறித்து ஒரு நம்பிக்கை, ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்பு கிடைத்துள்ளது. அதன்மூலம் ஊவா, மத்திய மாகாண சபைத் தேர்தலில் யானைச் சின்னத்தில் மேலக மக்கள் முன்னணி போட்டியிடவும் கூடும். அரசியலில் நிரந்தர நண்பனுமில்லை என்பது மலையக தமிழர் கூட்டணி வெகு விரைவில் தமது நடவடிக்கை மூலம் வெளிச்சத்துக்கு கொண்டுவரும். களுத்துறை, கண்டி மாவட்டங்களைச் சேர்ந்த இறப்பர், தேயிலைத் தொழிலாளர்கள் அனுப்பிய சந்தாப் பணம் ஒருகோடி ரூபா ஒரு மாத காலத்தில் எப்படி கரியாகியுள்ளது எனப் பல்கலைக்கழக மாணவர்கள் தேடிப் பார்த்தபோது சிங்கங்களுடன் கட்சி தலைவர்கள் சிரிக்கும் பேனர்கள், கட்டவுட்டுகள் தலைவருக்கு மேடை ஒன்றுக்கு இருபது மாலைகள் பத்தாயிரம் பட்டாசுகள், ஆட்சேர்ப்பு வண்டிகள், கட்சி தொண்டருக்கு ஊக்க பானம், பிரசார வாகன செலவு என ஆடி மாதத்தில் மட்டும் ஒரு கோடி ரூபா சப்பிரகமுவ வீதியில் வீசப்பட்ட மாலைகளாக, எரிக்கப்பட்ட பட்டாசுகளாக, கழுதை தின்னும் போஸ்டர்களாக காணப்படுகின்றன. இப்பணம் ஒரு பாடசாலைக்கோ, ஆலயத்துக்கோ செலவழிக்கப்பட்டிருக்குமானால் எத்தனை சிறப்பாக இருக்கும். இதனை மத்திய மாகாண புத்திஜீவிகள் ஏன் உணர்ந்து கொள்ளவில்லை. இனி சப்பிரகமுவ இளைஞர், யுவதிகள் எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா? ஒரு உறுப்பினர் கிடைத்தாலே பெரிதாக சாதிக்கமுடியும் என சூளுரைத்த தலைவர்கள் தகைமையுள்ள இளைஞர், யுவதிகள் அரச திணைக்களங்களில் சேவையாற்ற வழிசெய்வார்களா? அல்லது சுயதொழில் செய்யவும் என உபதேசம் செய்வார்களா? கிழக்கு மாகாணத்தில் தேர்தலுக்கு முன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச நியமனங்கள் வழங்கப்பட்டன. அவை நமது தலைவர்களுக்கும் தெரியாத விடயமல்ல. அன்றைய மாகாண சபை உறுப்பினர் இளைஞர், யுவதிகளை உதறித் தள்ளிவிட்டு தனது பதவி வெறியில் சென்ற போது நான் மக்கள் அவரையும் அவர் சார்ந்த கட்சியையும் தூக்கியெறிந்தார்கள். அதனை ஒருமுறை அனைவரும் நினைப்பது நல்லது. இன்று பொங்கல் தின்று களிப்பதல்ல வேலை! மக்களை கௌரவத்துக்குரிய வாழ்வுக்கு அழைத்துச் செல்லுவதே தேவையாகும்.

## உண்மைச் சம்பவம் தொடர்ச்சி...

தன்னுடன் கொண்டு சென்ற பொருட்கள் அனைத்தையும் ஒன்றும் விட்டுவைக்காது எடுத்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிக் கதவைச் சாத்தி மூடிவிட்டுத் தன் வீட்டிற்குத் திரும்பினான். அவன் தனது வீட்டின் கதவைத் திறக்கையில் நேரம் இரவு 11.30. லெஸ்லி கதவைத் திறக்கும் ஒலி கேட்டு அடுத்த வீட்டில் வசிப்பவரான டேவிட் எனும் முதியவர் எட்டிப் பார்த்து அவனிடம் "நீங்கள் இந்த நேரம் வரை எங்கே சென்றுவிட்டு வருகிறீர்கள்" எனக் கேட்ட கேள்விக்குப் பதிலேதும் கூறாது உள்ளே சென்று கதவை மூடிக் கொண்டான் லெஸ்லி. ஆனால் லெஸ்லி கைகளில் கையுறைகளை அணிந்திருந்ததை கவனித்துக் கொண்டார் டேவிட். அவன் ஏதோ மதுபோதையில் இருக்கிறான் போலும் என எண்ணிக் கொண்டு தனது வீட்டுக் கதவை மூடிக் கொண்டு படுக்கைக்குச் சென்றுவிட்டார்.

அடுத்து மூன்று நாட்களாகின. லெஸ்லி வழமைபோல வேலைக்கு போய்வந்து கொண்டிருந்தான். கிளாராவின் அயல் வீட்டினர் கர்ப்பிணிப் பெண்ணான அவளைக் கடந்த மூன்று தினங்களாக வெளியில் நடமாடியதைக் காணவேயில்லையெனவும், அவளது கணவனும் ஊரில் இல்லாத வேளையில் என்னவாகியதோ? எனக் கூடிக் கதைத்தனர். அத்துடன் அவள் வீட்டுப்பக்கமாகவிருந்து துர்நாற்றம் எழுவதையும் முகர்ந்தறிந்து கொண்டனர். சந்தேகமுற்ற அயலவர் பொலிஸாருக்குத் தகவலை அறிவித்தனர். பொலிசார் வந்து கதவையுடைத்துப் புகுந்த வேளையில் கிளாராவின் சிதைக்கப்பட்ட சடலம் உருக்குலைந்த நிலையில் துர்நாற்றம் வீசியபடி நிர்வாணக் கோலத்தில் கிடப்பதைக் கண்டனர். கணவன் பூஜியக்கு அயலவர் மூலம் தகவல் அனுப்பப்பட்டு அவனும் வந்து சேர்ந்தான். பொலிஸாருக்குக் கைவிரலடையாளம் போன்ற எதுவித தடயங்களும் கிடைக்கவில்லை. ஆனால் பிரேதப் பரிசோதனை மூலம், கொலை மூன்று நாட்களின் முன் இரவு 10ற்கும் 12 மணிக்கும் இடையில் தான் நடந்தேறியுள்ளது என்பதை அறிய முடிந்தது.

பூஜியக்கு லெஸ்லிதான் கிளாராவின் முதற்கணவர் என்பது தெரியும். ஆனால் அவன் கடந்த இரண்டு வருடங்களாக அவ்வீட்டில் குடியேறியது முதல் தொட்டு இன்றுவரையிலும் அவனால் கிளாராவுக்கோ அன்றி பூஜியசுக்கோ எந்தவொரு கெடுதலும் நேரிடவில்லை. அதன் காரணமாக பூஜியஸ் லெஸ்லியைச் சந்தேகிக்கவில்லை.

ஆனால் லெஸ்லியின் அடுத்த வீட்டுக்காரரான டேவிட்டுக்கு கொலை நடந்திருக்கலாமெனக் கருதப்படும் தினத்தன்று இரவு 11.30 மணியளவில் வீட்டினுள் லெஸ்லி புகுந்ததையும் அவ்வேளையில் அவன் கைகளில் கையுறைகள் அணிந்திருந்தமையும் அத்துடன் தான் கேட்ட கேள்விக்குப் பதிலேதும் கூறாது அவன் உள்ளே சென்றமையும் நினைவில் வந்து சந்தேகத்தைக் கிளப்பின. அது குறித்து அவர் விசாரணையை மேற்கொண்ட பொலிசாரிடம் தெரிவித்தார்.

பொலிசார் இதையறிந்ததும் லெஸ்லியிடம் அடுக்கடுத்துத் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் 'கிப்னோட்டிசம்' முறையில் அவனை ஆழ உறங்க வைத்து அவன் மூலமாகவே உண்மைகளைக் கறந்து விட்டனர். இறுதியில் லெஸ்லி உண்மைகளை ஒப்புக் கொண்டான்.

வழக்கின் இறுதியில் கிளாராவையும் அவளது எட்டு மாத வளர்ச்சியடைந்த சிசுவையும் திட்டமிட்டுக் கொலை செய்தமை நிரூபிக்கப்பட்டமையால் நீதிமன்றத்தால் அவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

## காவல் தெய்வம் கத்தி சாமி !

அரச மரம் நாட்டிய
ஆராயி அம்மாயி
அசந்தாள்
அங்கொரு
புத்தர சிலை முளைத்த
காரணமறிந்து !

மஞ்சள் சேலைகள்
காய்ந்த கொடிகளில்
கீழே
நொண்டி அப்புச்சி
கோவில்.
ஒரு நாள்
கெடாவெட்டுப் பூசை !
கத்தியில் ஏறியது
காவல் தெய்வம்
முத்துப்பண்டா
அரோகொரா சொன்னான் !.

■ பூனாகலை நித்தியஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் விட முடிந்ததே தவிர படம் எடுக்க முடியவில்லை!

**பாலுமகேந்திரா என்றால் ஒரு மிகப்பெரிய இயக்கமாக இந்திய சினிமாவில் குறிப்பாக தென்னிந்திய சினிமாவில் சாதனையாளராக இருக்கக் கூடிய நீங்கள் உங்கள் குழந்தைப் பருவம், பள்ளிப் பருவம் போன்றவற்றை இந்த நேரத்தில் எவ்வாறு உணருகிறீர்கள்?**

என்னுடைய ஆரம்பகால பள்ளிப்படிப்பு பூராவும் மட்டக்களப்பு சென்மைக்கல்ஸில் இருந்தது. அங்கு பாதர் லோறியஸ் என்று ஒரு அமெரிக்கர் இருந்தார். அவருக்கு சினிமாப் பைத்தியம். அவருடைய இந்த சினிமா பைத்தியம் தான் எனக்கும் கொஞ்சம் ஒட்டியிருக்கவேணும் என்று நினைக்கிறன். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் படம் காட்டுவார். பல உலக சினிமாக்களை சின்ன வயசில பார்த்த அந்த சந்தோசம். அதுக்கப்புறம் ஒரு தடவை 4ம் கிளாசோ, 5ம் கிளாசோ சரியா ஞாபகமில்லை. சுற்றுலா கூட்டிப் போயிருந்தாங்க. கண்டி என்ற இடத்தில் நாங்க தங்கியிருந்தோம். ஆங்கில சூட்டிங் நடக்கிறதாகத் தெரியவந்தது. பாதர் லோறியஸ்க்கு சினிமாப் பைத்தியம் என்றதால் அவர் அந்த சூட்டிங் பாக்க ஆசைப்பட்டார். அவர் போனதினால நாங்க எல்லாரையுமே கூட்டிப் போனார். அங்க போனா எல்லாருமே வெள்ளைக்காரங்க. ஒன்றிரண்டு பேர் நம்மாளுங்க. குறிப்பா ஒருத்தர் அந்தக் குழுவுக்கு தலைவர் போல இயங்கிக்கிட்டு இருந்தார். எல்லோரும் அவர்கிட்ட வந்து என்னமோ பேசிக்கிட்டு போய்கிட்டு இருந்தார்கள். எல்லோரையும் விரட்டிக் கொண்டிருந்தார். அவர் ஏதோ சைகை காட்டியிருக்க வேண்டும், திடீரென அமைதி நிலவியது. எங்களுக்கும் அமைதியா இருக்கும்படி சைகை காட்டப்பட்டது. அன்று வெயில் இருக்கக் கூடிய ஒரு சாதாரண நாள், லேசா மழைமூட்டம் இருந்தது "ரெயின்" என்று அவர் கத்தினார். கத்தினதுமே மழை பெய்ய ஆரம்பித்தது, நான் பிரமித்துப் போனேன். ரெயின் இந்த மனுசன் கத்தினதுமே மழை பெய்யுது என்றால், அவர் கடவுளா இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. அன்றைக்கு நான் நினைச்சுக்கிட்டேன். ஒருநாள் நானும் "ரெயின்" என்று கத்துவேன். அன்னிக்கு மழை பெய்யும் என்று. என்னுடைய இளமைக் காலத்திலே சினிமாவினுடைய ஆரம்பம் இதுதான் என்று சொல்லலாம்.

அதுக்கப்புறம் எனக்கு 14 வயசாக இருக்கிறபோ எங்கப்பா போட்டோ எடுக்கிற கமரா வாங்கிக் கொடுத்தார். இன்னிக்கு வரைக்கும் எனக்கு ஏன் கமரா கொடுத்தா என்று அவருக்கும் தெரியாது, எனக்கும் தெரியாது. அது ஒரு விபத்தா நடந்த விசயம். அந்த விபத்துதான் என்னுடைய சினிமாவிற்கு இன்னுமொரு ஆரம்பப்புள்ளி. போட்டோ கிராபியோட ஆரம்பப்புள்ளி என்றும் சொல்லலாம். நான், காசியானந்தன், மௌனகுரு போன்ற எல்லோருமே பக்கத்து பக்கத்து வீடுதான். வாவி ஓரத்தில் அமைந்த அழகான கிராமம் அமிர்தகழி. அந்த மாமாங்க குளமும், அங்க நீச்சல் அடித்து விளையாடுவதும், அந்த கமுக மரங்களும், தெருக்களும் ரொம்ப சந்தோசமான ஒரு காலமாக இருந்தது. அமிர்தகழி மாமாங்க குளத்தில் எங்க கூட்டத்தில ஒரு நண்பன் நீந்தத் தெரியாமல் குளத்தில இறங்கி, தாமரைக்கொடி சிக்கி இறந்து போனது மிகப்பெரிய சோகமாக இருந்தது. என்னோட இளமைப் பருவம், பாலியம் முடிந்தது அன்றைய தினம் என்றே சொல்லலாம்.

**எவ்வளவு தான் சினிமாவில் ஆர்வமாகவும் விருப்பமாகவும் இருந்தாலும் தம்முடைய பிள்ளை சினிமாவுக்குள் போகிறான் என்றால் எந்த பெற்றோருக்குமே பிடிக்காது. உங்களுடைய பெற்றோர் அதை எவ்வாறு ஏற்றுக் கொண்டனர்?**

என்னுடைய தாய்க்கும் சொந்தக்காரருக்கும் சுத்தமா இஷ்டமில்லை. நான் சினிமா படிக்கிறதுக்கு பிலிம் இன்ஸ்டிடியூட்ல சேரப்போறேன் என்று சொன்னதுமே அவங்களுக்கு ஒன்னுமே புரியல. என்னுடைய அப்பா மட்டும் நல்ல சப்போர்ட்டா இருந்தார். "இதுதான் உனக்கு வாழ்க்கை என்று நீ முடிவு பண்ணினா தாராளமா போ, கடைசி வரைக்கும் நான் சப்போர்ட் பண்ணுவன் என்று சொன்னாரு. அப்படி ஒரு தகப்பன் அமையறது அபூர்வம். அவர் எனக்கு ஆசான் மட்டுமல்ல என்னுடைய பிராண சிநேகிதன், எல்லாமாக இருந்தார்.

**உங்களுடைய பாலியகால வாழ்க்கை, நட்பு வட்டம் பற்றிக் கூறியிருக்கிறீர்கள் அப்படியானால் 'அழியாத கோலங்கள்' உங்களுடைய கதைதானா?**

அது கதையல்ல உண்மையான விசயம். என்னுடைய பாலிய பிராயத்தின் ஒரு பதிவுதான் அது. அழியாத கோலங்களில் குளத்தில் சிக்கி ஒரு பையன் இறந்து போவான். அந்த சிறுவன் தான் நான் இப்பொழுது உங்களுக்கு சொன்ன நண்பனுடைய இறப்பு, இழப்பு.

**உங்களுடைய முதல் சினிமா அங்கீகாரம் எப்படி இருந்தது?**

சினிமா மேல எனக்குண்டான வெறி கொண்ட காதலினால பூனே பிலிம் இன்ஸ்டிடியூட்ல 1966ம் ஆண்டு டைரக்சன் துறைக்காக விண்ணப்பித்தும், ஒளிப்பதிவுத் துறைதான் எனக்கு கொடுத்தாங்க. ஒளிப்பதிவுத் துறையில் 3 வருஷம் படிச்சு முதல் தரத்தில் கோல்டு மெடலோட பாஸ் பண்ணினேன். அங்க 3வது வருஷத்தில பயில்ற மாணவர்கள் 20 நிமிஷ குறும்படம் பண்ண வேண்டிய கட்டாயம் இருந்தது. செம்மீன் படத்தினுடைய இயக்குநர் ராம் கூரியட் பூனே வந்திருந்த போது நான் ஒளிப்பதிவு செய்த கறுப்பு வெள்ளைப் படத்தை பார்த்துவிட்டு அவருடைய அடுத்த படமான 'நெல்லு' என்ற மலையாளப் படத்திற்கு நான் ஒளிப்பதிவு செய்ய வேண்டுமென்று கூப்பிட்டார். இந்த முதல் படத்திலேயே 'இந்தியாவின் சிறந்த ஒளிப்பதிவாளர்' என்ற விருது கிடைத்தமையால், எனக்கு தொடர்வதில் எந்த கஷ்டமும் இருக்கவில்லை.

**ஈழப்போர் சம்பந்தமான உண்மையான முழுமையான பதிவுகள் இதுவரை செய்யப்பட வில்லை, எங்களுடைய அபிலாஷைகள் கனவுகள் இழப்புக்களை ஒரு இலங்கையராக இருந்தும் ஏன் நீங்கள் பதிவு செய்யவில்லை? இதற்கும் அரசியல்தான் காரணம் என்கிறீர்களா?**

நிச்சயமா இல்லை. இலங்கை பற்றிய பதிவுகளை இலங்கையிலேயே செய்யணும், நான் இங்க இருந்திட்டு இலங்கையில நடக்கிற அராஜகங்கள், அட்டூழியங்கள் பற்றி படமெடுக்கிறது நடக்காத ஒன்று. ஆனால், என்னுடைய நாட்டில் நடந்த அத்தனை அட்டூழியங்களுக்கும், கண்ணீருக்கும், சாவுக்கும் என்னால் கண்ணீர் விட முடிஞ்சதே தவிர என்னோட படங்களில் பதிவு செய்ய முடியல்ல. அதை நான் பதிவு செய்யப் போனேன்னா அது ஆக்ரோசமான பதிவாகத்தானிருக்கும் இங்க அனுமதிக்கப்பட்டிருக்காது. அதால நான் போகல, இங்க ஒரு சில படங்களில் ஈழப்பிரச்சினையை சாதத்திற்கு ஊறுகாயாய் தொடுவது போல் தொட எனக்கு விருப்பமில்லை. ஈழப்பிரச்சினை சில படங்களில் கையாளப்பட்டிருக்கு. நான் பெயர் சொல்ல விரும்பல்ல. ஈழத்திலிருந்து ஒருத்தி வந்திருப்பா அல்லது ஒருத்தர் வந்திருப்பார். இது ஈழப் பிரச்சினையல்ல. இந்த மாதிரி மலினப்படுத்த விரும்பல. நான் ஈழப்பிரச்சினையை தொட்டிருந்தால் அதில் என்னுடைய மனசிலிருந்து பொங்கி ஆக்ரோசமாக வெளியே வழிஞ்சிருக்கும். எனக்கிருந்த கோபம் ரொம்ப உக்கிரமா வெளிப்பட்டிருக்கும். அது இங்க உகந்ததாக இருந்திருக்காது. எவ்வேயுமே உகந்ததா இருந்திருக்காது.

**நீங்கள் இலக்கியவாதி தமிழ் பற்றாளர் என்ற ரீதியில் சினிமாவில் இலக்கியமும் இலக்கியத்தில் சினிமாவும் எப்படித் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது?**


என்னுடைய சினிமாவைப் பற்றி மட்டும் தான் நான் பேச முடியும். என்னுடைய சினிமாவின் அஸ்திவாரம், ஆதாரசுருதி, அடிப்படை, ஆணிவேர் எல்லாமே என்னுடைய இலக்கியப் பற்று என்றுதான் சொல்லணும். இலக்கியம் இங்கு மிகமிக முக்கியமான இடத்தில் இருக்கு. கதை பங்களிப்பு, இலக்கியத்திற்கு சினிமா மூலம் நான் செய்த நமஸ்காரம்.

**'கதை நேரத்தில்' இத்தனைக் கதைகளைப் பண்ணியிருக்கிறீர்கள். ஒரு நாவலை சினிமாவாக்க உங்களுக்குத் தோன்றவில்லையா அல்லது அதில் ஏதும் சிக்கல்கள் இருந்ததா?**

இதுவரைக்கும் தோன்றவில்லை. ஆனா இனிப்பண்ண மாட்டேன் என்றில்லை. இதுக்கு பல காரணங்கள் இருக்கு. தோன்றும் போது அதைத் தொடுவதற்கு புரடியூசர் இருக்கமாட்டார். ஒரு சினிமாவுக்காக நாவலை முழுதாக படிக்காத காரணமாகவும் இருக்கலாம். மேலும் சினிமாவுக்காக தேர்வு செய்யப்பட்ட நாவல்கள் படுமோசமாகச் சிதைக்கப்பட்டதும் ஒரு காரணம். இனிவரப் போறப் படங்களுக்காக 5, 6 குறுநாவல்கள் தெரிவு செய்திருக்கின்றேன். உதாரணமாக சி.சு.செல்லப்பாவின் 'வாடிவாசல்', தி.நாகராஜனின் 'குறத்திமுடுக்கு' அசோகமித்திரனுடைய 'தண்ணீர்' போன்றவை.

**இலங்கையின் சினிமா பற்றி?**

இலங்கைத் தமிழ் படங்களோட சில சிங்களப் படங்களை ஒப்பிடுறபோ நான் பார்த்த சில சிங்கள படங்கள் மேலானவையே என்பேன். அப்புறம் இலங்கைக்கான ஒரு தமிழ்ப் படம் உருவாகாமல் போனதற்கு இலங்கைத் தமிழர்கள் தான் காரணம் என்ற கசப்பான உண்மையும் இருக்கு. சிங்களப் படங்கள் எடுத்துக்கிட்டிருந்த முக்கியமான முதலாளிகள் பெரும்பாலும் தமிழர்கள் தானே! சிலோன் ஸ்டுடியோ பேலஸ் தம்பி போன்ற பல முதலாளிகள் சிங்களப் படத்திற்கு எடுத்த கவனம் தமிழ்ப் படத்திற்கு எடுக்கவில்லை. நம்முடைய மக்கள், நமக்கான சினிமா என்று அவங்க நினைக்கல்ல. நான் இலங்கையில் இருந்திருந்தா நிச்சயமாக இலங்கைக்கான தமிழ் படங்களை எடுத்திருப்பேன். நிச்சயமா நம்முடைய மண்ணுக்கான மக்களுக்கான படமாத்தான் எடுத்திருப்பேன். "என்னை நானே மன்னிக்க முடியாத குற்றவாளி, இங்க படிச்சிட்டு அங்க போய் ஊரில ஒரு படமெடுக்காம எதுக்கு இருந்தேன்? என என்னை நானே மன்னிக்க முடியவில்லை "ஐ பீல் வெறி சொறி."





சுடரொளி வாசகர்களுக்கு இயக்குநர் பாலுமகேந்திரா அளித்த பேட்டியின் சில பகுதிகள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராகுல் காந்தியை வம்புக்கு இழுக்கும்

# நரேந்திரமோடியும் முலாயம் சிங்கும்





**இவ்வருட உத்தர பிரதேசத் தேர்தலில் காங்கிரசின் பிரசாரத்தை ராகுல் முன்னெடுத்துச் சென்றும் தோல்வியே கிட்டியதால் இனிவரும் தேர்தல்களில் ராகுல் காந்தியை முன்னிலைப்படுத்தக்கூடாது என்பதில் காங்கிரஸார் உறுதியாக உள்ளனர். ராகுல் காந்தியும் அதே முடிவுடனேயே உள்ளார். ராகுல் நிலைமையே இப்படி என்றால் பிரியங்கா காந்தி நிலைமையைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. இப்போதைக்கு அரசியலே கிடையாது என்பது அவரது முடிவாம்.**

எதிர்வரும் 2014 நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் காங்கிரசின் பிரதமர் வேட்பாளர் மன்மோகன் சிங் அல்ல என்பது நூறு வீதம் நிச்சயமாகிவிட்டது. அவ்வாறாயின் அது ராகுல் காந்தி தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், காங்கிரஸ் கட்சி பல ஊழல் குற்றச்சாட்டுகளிலும் திக்குமுக்காடித் திணறி வரும் இந்த வேளையில் காங்கிரசின் பிரதமர் வேட்பாளராக களமிறங்கி தோல்விக்கான பழியைச் சுமக்க ராகுல் காந்தியும் தாயார் சோனியா காந்தியும் தயாரில்லை. காங்கிரஸ் கட்சிக்கு எப்போதெல்லாம் தோல்வி பயம் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் ராகுக்காக பிரதமர் வேட்பாளர் யாரென்பதை வெளிப்படையாகக் கூறாமலே தேர்தலை சந்திப்பது காங்கிரசின் வழக்கமாகும். 2004ல் இவ்வாறு தான் வாஜ்பாய் அரசு வெற்றிநடை போட்டுக்கொண்டு தேர்தலில் இறங்கியபோது காங்கிரஸ் அந்தத் தேர்தலில் வென்று ஆட்சியமைக்கும் என்று சோனியா காந்தி கனவில் கூட கருதியிருக்கமாட்டார். பிரதமர் வேட்பாளராக சோனியாவை அறிவித்தால் 'இத்தாலியர்' என்ற பூதம் கிளம்பிவிடும் என்ற கவலை வேறு அச்சமயத்தில் காங்கிரசிடம் குடிகொண்டிருந்தது. இதற்கெல்லாம் ஒரேவழியாக பிரதமர் வேட்பாளர் யாரென்று அறிவிக்காமலே காங்கிரஸ் அந்தத் தேர்தலை சந்தித்து பெருவெற்றி பெற்றது. ஆனாலும், ஜனநாயகத்தில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிக்கு அந்த தேர்தலில் ஆட்சிக்குரிய ஆணையை வழங்கியபோது கட்சியின் தலைவி சோனியாவைத் தவிர வேறு எவரை பிரதமராக கருதியிருப்பர்? சந்தர்ப்ப சூழ்நிலையில் மன்மோகன் பிரதமரானது வேறுகதை. அதையடுத்து வந்த 2009 தேர்தலில் காங்கிரஸ் மன்மோகனே தொடர்ந்தும் பிரதமர் என துணிந்து அறிவித்ததால் அமோக வெற்றி கிட்டியது. இனிமேல் மன்மோகனுக்கும் வயதாகிவிட்டது. பிரதமர் வேட்பாளராக யாரை அறிவிப்பது என்ற சிக்கல் இப்போது மீண்டும் காங்கிரசைப் பிடிக்கத் தொடங்கிவிட்டது. பழமையான யுக்தியை கையாண்டு யார் பிரதமர் வேட்பாளர் என அறிவிக்காமலே இருந்து விடலாமென காங்கிரசில் ஒரு தரப்பினர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால், இதே பழைய உபாயம் இன்றைய மாறிவிட்ட சூழலில் கைகொடுக்குமா என்பது கேள்வியே.

இதுதவிர இவ்வருட உத்தர பிரதேசத் தேர்தலில் காங்கிரசின் பிரசாரத்தை ராகுல் முன்னெடுத்துச் சென்றும் தோல்வியே கிட்டியதால் இனிவரும் தேர்தல்களில் ராகுல் காந்தியை முன்னிலைப்படுத்தக்கூடாது என்பதில் காங்கிரசார் உறுதியாக உள்ளனர்.



ராகுல் காந்தியும் அதே முடிவுடனேயே உள்ளார். ராகுல் நிலைமையே இப்படி என்றால் பிரியங்கா காந்தி நிலைமையைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. இப்போதைக்கு அரசியலே கிடையாது என்பது அவரது முடிவாம்.

ஆனால், நரேந்திரமோடி அரசியல் வியூக விற்பன்னர் (Political Strategist) என அறியப்பட்டவர். இதுதான் சந்தர்ப்பமென அவர் ராகுல் காந்தியை போட்டிக்கு அழைத்துள்ளார். மறைமுகமாக ராகுல்-மோடி போட்டிதான் 2014 தேர்தலில் இருக்கும் என்பதான கதையையும் கிளப்பி விட்டுள்ளார். பிஜேபியின் பரம விசுவாசிகளுக்கு நரேந்திர மோடியை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்பதில் அளவுக்கடங்காத ஆசை உண்டு. அதேபோல் காங்கிரசில் கட்சியின் அடிமட்டத் தொண்டர்களுக்கும் அடிமட்டத் தலைவர்களுக்கும் கூட ராகுலை பிரதமர் வேட்பாளராக பார்க்க கொள்ளை ஆசையோ ஆசை. ஆனால், இந்த இரு கட்சிகளிலும் உள்ள 'ஆர்வக் கோளாறு' மிஞ்சிய கட்சித் தொண்டர்களின் ஆசைக்கு ஏற்றவாறு களநிலவரங்கள் இல்லை என்பதுதான் முக்கிய விடயமாகும். காங்கிரசின் தற்போதைய மத்திய ஆளும் அரசு தள்ளாடும் நிலையில் தோல்வி நிச்சயமென்பதால் பழி ராகுல் மீது விழும். அவ்வாறே பிஜேபிக்குள் அவரை விட அரசியல் அனுபவத்திலும் வயதிலும் மூத்த சுஷ்மா ஸ்வராஜ், அருண் ஜேட்லி, ஜஸ்வந்த் சிங் முதலிய தலைவர்கள் இந்து, முஸ்லிம் என பல தரப்பாலும் ஏற்கப்பட்ட தலைவர்களாக இருப்பதால் இவர்களை ஓரம்கட்டி மோடியை பிரதமர் வேட்பாளராக்கினால் தோல்வி காணும் நிலையே பிஜேபிக்கு ஏற்படும். ஏற்கனவே, பிஜேபி கூட்டணிக்குள் இரண்டாவது பெரிய கட்சியான ஐக்கிய ஜனதா தள் மோடியை பிரதமராக ஏற்க முடியாதென்று கூறிவிட்டது.

மற்றொரு பிஜேபி தோழமைக் கட்சியும், சர்ச்சைகளுக்கே உரித்தான கட்சியுமான சிவசேனாவோ மோடி பிரதமராக இணங்கமாட்டோம் என வெளிப்படையாகக் கூறாமல் சுஷ்மா ஸ்வராஜ் தான் பிஜேபி கூட்டணியில் பொருத்தமான பிரதமர் வேட்பாளர் என்று கூறிவிட்டது. ஐக்கிய ஜனதா தள் கட்சித் தலைவரும் பீஹார் முதல்வருமான நித்திஷ்குமார் கடந்த பல வருடங்களாக நேருக்கு நேர் மோதி மோடியுடன் அறிக்கைப் போர் விடுத்துவரும் ஒருவராவார். அவர் மோடியை எதிர்ப்பது ஒன்றும் புதிதல்ல. ஆனால், மோடியின் அண்டை மாநிலமான மஹாராஷ்டிராவிலுள்ள பிஜேபி கூட்டணி கட்சியான சிவசேனா இவ்வாறு மோடியை எதிர்த்து கருத்து தெரிவிக்கும் என்பதை மோடி கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்.

பிஜேபியின் கூட்டணிக் கட்சிகளில் இரு பிரதான கட்சிகள் இவ்வாறு மோடியை வெளிப்படையாக நிராகரித்து விட்ட நிலையில் எஞ்சியுள்ளது பஞ்சாபிலுள்ள அகாலிதளம் கட்சியாகும். பெரும்பான்மை இனத்தவரால் சிறுபான்மை இனம் பாதிக்கப்பட்டதற்கு சிறந்த சான்று சீக்கிய இனமாகும். எனவே இந்த அகாலிதளம் கட்சியுமே மோடியை நிராகரிக்க நினைக்கக் கூடும். புதிதாக பிஜேபி கூட்டணிக்குள் சேரக்கூடிய கட்சிகள் நான்கே நான்கு தான். தமிழகத்தின் அதிமுக, ஒரிசாவின் பிஜேடி, ஆந்திராவில் நாயுடுவின் தெலுங்கு தேசம் மற்றும், மேற்கு வங்க முதல்வர் மம்தாவின் கட்சி ஆகியனவே அவை. இதில் அதிமுக தலைவி மோடி மீது 'காதல்' கொண்டிருந்தாலும் பிஜேபியுடன் சேராது தனித்து வெற்றியைச் சாதித்துக் காட்டவே விரும்புகிறார். ஏனைய மூன்று கட்சிகளும் குஜராத்தில் மோடி அப்பாவி முஸ்லிம்களை கொன்றதால் தான் பிஜேபி கூட்டணியை விட்டே விலகிச் சென்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, மோடி பிஜேபி கூட்டணியின் பிரதமர் வேட்பாளராவதற்கு நூறாயிரம் தடைகள் உள்ளன எனலாம். ஆனால், இந்தத் தடைகள் அனைத்தையும் ஒரேயடியாக சுக்குநூறாக்கும் ஒரே ஒரு ஆயுதம் மோடியிடம் உண்டு. அதுதான் இந்த ஆண்டு நவம்பரில் குஜராத் மாநில சட்டசபைக்கு நடக்கவுள்ள தேர்தல். என்னதான் அப்பாவி முஸ்லிம்களை வேட்டையாடிய கொலைகாரன் என்ற பெயர் குஜராத்திற்கு வெளியே மோடியின் நற்பெயரைக் கெடுத்தாலும் அவரது குஜராத் மாநிலத்துக்குள்ளே மோடிக்கு மிகச் சிறந்த செல்வாக்குண்டு என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அவர் கட்டைப் பிரம்மச்சாரி என்பதால் உறவினர்களுக்கு சொத்துச் சேர்க்கும் அவசியமும் கிடையாது. எனவே, ஊழல் குற்றச்சாட்டு என்ற பேச்சே இல்லை. எனினும் அவரது அமைச்சர்கள் அரங்கேற்றிவரும் ஊழல்களால் சற்றே சிக்கலுள்ளது. 2002ல் அவரது அரசு முஸ்லிம்களுக்கெதிராக மேற்கொண்ட வன்முறைகளுக்காக அவரது இரு அமைச்சர்கள் கடும் தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலுள்ளனர். ஆனாலும் இவை எல்லாம் மோடியை சற்றும் பாதித்ததாக தெரியவில்லை. தொடர்ந்து 2 முறை சட்டசபைத் தேர்தலை வென்றுள்ள மோடி இந்த முறையும் அமோக வெற்றி பெறுவாரென்றே தெரிகிறது. அதன் மூலம் தேசிய அளவில் பிஜேபியின் பிரதமர் வேட்பாளராவதே அவரது திட்டமாகும்.

**அரிஜித்**


**நகத்துவம்**

நரைமுடியை கறுப்பாக்க, 3வாரத்தில் வளரச்செய்ய, உயரத்தை அதிகரிக்க, நிறை குறைக்க, வெண் குஷ்டம், தழும்பு, முகப்பரு நீக்க, முகம் வெண்மையாக, மதுபானம், புகைத்தலை கைவிட ஆங்கில மருந்து (காசி மூலமும்).

தொடர்பு - 0716176957 -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலுக்கு எதிர்ப்பு இல்லாவிட்டால்...!



## பித்தன் பதில்கள்

**ஆ.யசோதரா, கொழும்பு-10**
கே: காதலுக்கு எதிர்ப்பு இல்லாவிட்டால் எப்படி இருக்கும்?
ப: 'சப்'பென்று போய்விடும். எதிர்ப்பு இருந்தால் தான் காதலர்கள் மத்தியில் இறுக்கமும் எப்படியும் வென்றாக வேண்டும் என்ற மன ஓர்மமும் நிலைபெறும்.



**வி.வீரசிங்கம், பருத்தித்துறை**
கே: கடமை நேரத்தில் அலுவலகத்தில் அரைத் தூக்கம் தூங்குபவர்கள் குறித்து நீர் என்ன நினைக்கிறீர்?
ப: பாவம்; தூக்கத்தைக் கூட பூரணமாக அனுபவிக்க இயலாத அப்பாவிகள் என்றுதான் வைத்துக் கொள்ளுமேன்.

**பொ.பெரியதம்பி, மட்டக்களப்பு**
கே: இந்தக் காலத்தில் இளம் வயதிலே தொழிலேதும் இல்லாமலே காதலிக்க ஆரம்பித்து விடும் இளைஞர்களுக்கு உமது அறிவுரை என்ன பித்தரே
ப: காதலிக்கும் பெண்ணைக் கைப்பிடித்த பின்னர் அவளைக் கண்கலங்காமல் வைத்து காப்பாற்றக் கூடிய அளவுக்கு வருமானம் தரத்தக்க தொழிலொன்றை முதலில் தேடிக் கொள்ள வேண்டியது அவர்களது கடமை.



**பூபாலசிங்கம் வாசுகி, வவுனியா**
கே: மனிதன் வாழ்க்கையில் துன்பம் வரும் போது மட்டுமே கடவுளை வேண்டுதல் செய்வது வழக்கமாக உள்ளது. இன்பம் கிட்டும் போது ஏன் அவன் கடவுளை மறந்து விடுகிறான்?
ப: தனது முயற்சியாலேயே அத்தகைய இன்பம் கிட்டியதாக அவனுக்குத் தலைக்கனம் வந்து விடுகிறது. இன்பமோ துன்பமோ இறைவனின் சித்தப்படியே ஆகிறது என்பது அவன் மனதில் உறைப்பதில்லை.

**சு.ரீரா, உடுவில்**
கே: ஒரு பெண்ணுக்கு முற்கோபம் வருவதால் நன்மை கிட்டுகிறதா? தீமை ஏற்படுகிறதா?
ப: அது அந்தந்தச் சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்தது. தனது கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதால் சில சந்தர்ப்பங்களில் அது குறிப்பிட்ட அப் பெண்ணுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி விடுவதுமுண்டு.



**கா.வேலாயுதம், மன்னார்**
கே: புராண காலத்தில் தனது மெய்யடியார்களுக்கு கடவுள் நேரில் காட்சி கொடுத்ததாக இதிகாசங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளதே. இப்போதெல்லாம் அப்படியொன்றையும் நாம் கேள்விப்படுவதில்லையே?
ப: அப்படித்தான் யாராவது தனது கனவில் கடவுள் காட்சி தந்ததாகக் கூறினாலும் அப்படிக் கூறுபவரை ஒரு மாதிரி நோக்கும் காலம் இது. உண்மையான மெய்யடியார்கள் யாராவது இந்த உலகத்தில் இருக்கிறார்களா என்று ஒருவேளை கடவுள் தேடி அலைகிறார் போலும்.

**உ.தெய்வநாயகி, நுரைச்சோலை**
கே: ஒரு ஆணினது கோபத்துக்கும் ஒரு பெண்ணினது கோபத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடு என்ன பித்தரே.
ப: ஆணினது கோபம் காட்டாறு போன்றது. பெண்ணினது கோபம் அலைகடலை ஒத்தது. காட்டாறு கடலில் கலந்தால் உக்கிரம் தணிந்து போகும்.

**து.செல்வநாயகம், கிளிநொச்சி**
கே: ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்கிறார்கள். ஏழை சிரிப்பது எப்போது?
ப: நிஜ வாழ்க்கையில் ஏழைக்குச் சிரிப்பு, மகிழ்ச்சி வருவதென்பது அபூர்வம். பகற்கனவு காணும் போது மட்டுமே அவனால் சிரிக்க முடிகிறது.


**ம.அருள்நங்கை, கொழும்பு - 06**
கே: பணத்தின் தன்மை எத்தகையது பித்தரே
ப: பொதுவில் கவலை தருவது அது. பணம் வைத்திருப்பவன் பயத்துடன் வாழ்கிறான். பணம் இல்லாதவன் சிரமம் காரணமாக கவலையுடன் வாழ நேரிடுகிறது.



**உ.உபேந்திரன், சாவகச்சேரி**
கே: கண்ணடித்தல் என்றால் என்ன பித்தரே
ப: அது தடிமல், காய்ச்சல் போன்ற ஒரு வியாதி. இள வயதுக்காரர்களுக்கு ஏற்படுவது. பருவக் கோளாறால் வருவது. காலப்போக்கில் தானாகவே குணமடையும். இதற்கு மருந்தே கிடையாது.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 539



அனுப்புபவர் பெயர் .......................................
விலாசம் .......................................
.......................................
கையொப்பம் .......................................

### மேலிருந்து கீழ்
01. கடவுளுக்கு நிவேதித்த பொருள்
02. செவி
03. கணவன்-மனைவி
04. கடல்
05. இது இனிக்கும்
07. பதுசு செய்யுள் கொண்டது
09. இரும்பில் பிடிப்பது
12. சுப
14. இருதயத்திலிருந்து இரத்தத்தைக் காவிச் செல்வது
15. ஆபரணக் கொடி
16. சாப்பம
17. கைகளில் பத்து கால்களில் பத்து
18. கூட்டு என்பதைக் குறிக்கும்
19. மன்றம்

### இடமிருந்து வலம்
01. ஜெயஜோதியான காட்சி
04. இறக்க
06. ஏத்துதல்
07. தெரிவி என்பதன் பேச்சு வழக்குச் சொல்
08. சாந்த குணமுடையவன்
10. ஆவணம்
11. தரவேண்டியது
13. சோல்
14. பால் கூறா உயர்திணைத் தன்மை, பன்மைச் சொல்
15. சேர்ந்து இயங்குபவன்
18. தங்கு தடையின்றி
19. மாலை
20. குட்டி போட்ட ஆடு. அல்லது கன்று போட்ட பசு கறப்பது

## சொற்சிலம்பம் போட்டி இல. 539

சொற்சிலம்பம் 539 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 03 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒக்ரோபர் 10 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பல சரியான விடைகளை எழுதியோர் இருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 536 விடைகள்

**மேலிருந்து கீழ்**
01.அக்கிரமம், 02.ஞாபகம், 03.துலம், 04.வாவி, 05.சதகம், 07.கவும், 09.ரசனை, 11.தபதி, 13.குடும்பம், 15.பல, 16.அரும், 17.புகை, 18.கன்று, 19.தர, 21.வசி.

**இடமிருந்து வலம்**
01.அஞ்ஞாதவாசம், 06.பவித, 08.கிரகம், 10.கதவு, 12.ரசம், 13.கும்பம், 14மனை, 15.பழ, 16.அலம்பு, 19.தரு, 20.பகைவன், 22.ஆரம்பம், 23.சிறு.

## போட்டி இல. 536 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** ம.மதுரன், குமுளமுனை, முள்ளியவளை.

**2ஆம் பரிசு** மு.மி.நூறா ஸஃனியா, இல.547/A/2 ஸம் ஸம் வீதி, மருதமுனை - 03.

**3ஆம் பரிசு** திருமதி பிரதீபா கிருஷ்ணராஜகுரு, சம்பந்தர் பழைய கண்டி, காரைநகர், யாழ்ப்பாணம்.

## பாராட்டுப் பெறுவோர்

(1) ப.நாகேஸ்வரி,
"நிதா கோகுலம்"
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
(2) சின்னையா செல்வராஜ்,
இல.91/1 மெயின் வீதி,
கொழும்பு - 11.
(3) திருமதி கோசலாதேவி சிவபாலசிங்கம்,
இல-40/2, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(4) திருமதி.வய்.ஜெயசோதி,
இல 93 2/5 பீட்டர்சன் வீதி,
கொழும்பு-06.
(5) ஜ.அர்ச்சனா,
உதயபுர வீதி,
பெரியகல்லாறு-03, கல்லாறு.
(6) அ.ஜ.பாக்கியராஜா,
இல.88/1 பசல்ஸ் ஒழுங்கை,
கொழும்பு - 06.
(7) கே.என்.சுபாஷினி,
இல.14 புளியடி குறுக்கு வீதி,
ஏறாவூர் - 06.
(8) திருமதி.ச.சொர்ணமலர்,
இல.17/பி மன்னார் வீதி,
வவுனியா.
(9) செல்வி.செ.தர்மினி,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
(10) சி.கலைச்சனா,
வற்றாப்பளை, முள்ளியவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு

## நட்பு' கால்பந்து: பிரேசில் அபார வெற்றி



சர்வதேச நட்பு கால்பந்துப் போட்டியில் பிரேசில் அணி, சீனாவை 8-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

பிரேசில், சீன அணிகள் மோதிய நட்பு கால்பந்து போட்டி, பிரேசிலில் நடந்தது. தொடக்கத்தில் இருந்தே பிரேசில் அணி ஆதிக்கம் செலுத்தியது. 22 வது நிமிடத்தில் பிரேசிலின் ராமிரெஸ் முதல் கோல் அடித்தார். பின், 25, 54வது நிமிடங்களில் இரு கோல் அடித்த நெய்மர், 60வது நிமிடம் ஹாட்ரிக்' கோல் அடித்தார்.

தவிர, பிரேசிலின் லுகாஸ், ஹல்க் (49, 52வது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர். இதற்கு பதில் கொடுக்க முயன்ற சீனாவுக்கு, ஜிபான்யே லியு, சேம் சைடு' கோல் (70வது) கோல் அடித்து மேலும் அதிர்ச்சி தந்தார். முடிவில் 8-0 என, பிரேசில் அணி அபார வெற்றி பெற்றது.

## யு.எஸ்., ஓபன்: ஆன்டி முர்ரே சம்பியன்



யு.எஸ்., ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் இங்கிலாந்து வீரர் அன்டி முர்ரே சம்பியன் பட்டம் வென்று சாதித்தார். பைனலில் முர்ரே, உலகின் நம்பர்-1 வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை வீழ்த்தினார்.

நியுயார்க்கில், யு.எஸ்., ஓபன் டென்னிஸ் தொடர் நடந்தது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு பைனலில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, செர்பியாவின் நோவக் ஜோகோவிச் மோதினர். முதலிரண்டு செட்டை முர்ரே 7-6, 7-5 என போராடிக் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட ஜோகோவிச் அடுத்த இரண்டு செட்டை 6-2, 6-3 என மிகச் சுலமாக தன்வசப்படுத்தினார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் ஐந்தாவது செட்டில் சுதாரித்துக் கொண்ட முர்ரே 6-2 எனக் கைப்பற்றினார். இறுதியில் முர்ரே 7-6, 7-5, 2-6, 3-6, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, முதன்முறையாக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று சாதித்தார்.

## பேஸ்புக்கில்' சச்சின்

இந்திய கிரிக்கெட் மாஸ்டர் பேட்ஸ்மேன்' சச்சின், சமூக வலைத்தளமான பேஸ்புக்கில்' இணைந்தார்.



2010ல் டுவிட்டர்' சமூக வலைத் தளத்தில் சச்சின் இணைந்தார். இதையடுத்து, பல ரசிகர்கள் டுவிட்டரில்' இணைந்தனர். தற்போது 26,80,952 ரசிகர்கள் டுவிட்டர்' இணையதளத்தில் இவரை பின்பற்றுகின்றனர். மற்றொரு சமூக வலை தளமான பேஸ்புக்கிலும்' இந்திய நட்சத்திர வீரர் சச்சின் இணைந்தார்.

இதையடுத்து, சில மணி நேரத்தில் 4 லட்சம் பேர் இவரை பின் பற்ற தொடகினார். இதில் போட்டோக்கள், வீடியோக்களை ரசிகர்களிடம் பகிர்ந்துள்ளார். இந்திய வீரர் யுவராஜ் சிங் குறித்தும் ஜூனியர் உலகக் கோப்பைத் தொடரில் கோப்பை வென்ற இந்திய கப்டன் உன்முக்த் சந்த்திற்கும், பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

"எனது பேஸ்புக்' சமூக வலைதளத்திற்கு எல்லா ரசிகர்களையும் வரவேற்கிறேன். சிறுவயது முதல், உலக கோப்பை வெல்லும் இந்திய அணியில் இடம் பெற வேண்டும் என்ற கனவு நிறைவேற தொடர்ந்து 22 ஆண்டுகளாக ஓடினேன். ரசிகர்களின் ஆதரவு இல்லை என்றால், இது சாத்தியம் இல்லை. எனக்காக வேண்டிக் கொண்ட ரசிகர்களுக்கு நன்றி தெரிவிக்கும் சிறந்த வழியாக இதைக் கருதுகிறேன்" என்று சச்சின் கூறினார்.

2011ல் நடந்த உலகக் கோப்பை தொடரில், தொடர் நாயகன் விருது வென்று அசத்தினார் இந்திய வீரர் யுவராஜ் சிங் 'கேன்சர்' பாதிப்பில் இருந்து மீண்ட இவர், மீண்டும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு திரும்பியது மகிழ்ச்சி என்கிறார் சச்சின்.

## 4வது முறையாக செரீனா சம்பியன்



அமெரிக்க ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், நட்சத்திர வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 4வது முறையாக சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார். இறுதிப் போட்டியில் வீராங்கனை விக்டோரியா அசரென்காவுடன் (பெலாரஸ்) மோதிய செரீனா 6,2 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டில் அதிரடியாக விளையாடி செரீனாவின் சர்வீஸ்களை முறியடித்த அசரென்கா 6,2 என வென்று பதிலடி கொடுத்தார்.

இதையடுத்து, சம்பியன் யார் என்பதை தீர்மானிப்பதற்கான கடைசி செட் ஆட்டம் அனல் பறந்தது. இரு வீராங்கனைகளும் தங்கள் சர்வீசில் புள்ளிகளைக் குவித்ததால் ஆட்டம் இழுபறியாக நீடித்தது. கடும் போராட்டமாக அமைந்த இப்போட்டியில் செரீனா 6,2, 2,6, 7 ,5 என்ற செட் கணக்கில் வென்று 4வது முறையாக யுஎஸ் ஓபன் பட்டத்தைக் கைப்பற்றி அசத்தினார். முன்னதாக அவர் 1999, 2002, 2008ல் அமெரிக்க ஓபன் பட்டம் வென்றிருந்தார். ஒற்றையர் பிரிவில் இது அவர் பெறும் 15வது கிர்ராண்ட் ஸ்லாம் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

வரும் 26ம் தேதி தனது 31வது பிறந்தநாளைக் கொண்டாட உள்ள செரீனா, இரட்டையர் பிரிவில் 13 மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவில் 2 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளதுடன் ஒலிம்பிக் போட்டியிலும் 4 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.


## 'கெருட சத்தி' தேசிய கரப்பந்தாட்ட அணியில் யாழ்.மாவட்ட வீரர் தெரிவு

'கெருட சத்தி' தேசிய கரப்பந்தாட்ட அணியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வீரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியின் மாணவனும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் வீரருமான சச்சிதானந்தம் ஜெனகன் என்ற வீரரே இவ்வாறு தெரிவாகியுள்ளார்.

தேசிய ரீதியாக தெரிவு செய்யப்பட்டு நடாத்தப்படும் 'கெருட சத்தி' தேசிய கரப்பந்தாட்டப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை இவர் பெற்றுள்ளார்.

யாழ்.மாவட்ட கரப்பாந்தாட்ட சங்கத்தின் சார்பில் இவருக்கான பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் சுரேஸ் தெரிவித்தார்.



விளையாட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஐஃபோன் அறிமுகம்



உலகளாவிய ரீதியில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஐஃபோன் 5 நேற்றிரவு அமெரிக்காவில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது. அப்பில் நிறுவனத்தின் புதிய வரவான ஐஃபோன் 5 (iPhonc 5) பல அதி நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கி வெளிவந்திருக்கின்றமை சிறப்பானதாகும். அப்பிள் நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி டிம் குக் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (Pix: AFP)

# மடிக்கணனியை வடிவமைத்தவர் மரணம்



கையில் எங்கும் எடுத்து செல்ல வசதியாக திறந்து மூடும் வசதி கொண்ட கணினியான மடிக்கணனியை வடிவமைத்த தொழில்நுட்ப நிபுணர் பில் மோக்ரிட்ஜ் கடந்த 10ஆம் திகதி காலமானார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த மோக்ரிட்ஜ்(வயது 69) காலமான தகவலை மோக்ரிட்ஜ் இயக்குநராக பணியாற்றி வந்த நேஷனல் டிசைன் மியூசியம் அறிவித்தது

# தகவல்களை சேகரிக்கும் கரப்பான் பூச்சி

தொழில்நுட்ப வளர்ச்சியானது சகல துறைகளையும் ஆக்கிரமித்து வரும் அதேவேளை இராணுவத்துறையிலும் அதன் பயன்பாடு அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதற்காக பல்வேறு கண்டுபிடிப்புக்களும் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன.

இவற்றின் அடிப்படையில் தற்போது எந்த ஒரு சிறிய இடத்திலும் புகுந்து தகவல்களை சேகரிக்கக்கூடிய வகையிலும், றிமோட் மூலம் தொலைவிலிருந்து இயக்கக்கூடிய வகையிலும் இலத்திரனியல் கரப்பான் ஒன்றினை நோர்த் ஸ்டேட்



கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

வியாபார நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட இந்த இலத்திரனியல் கரப்பான் ஆனது வயர்லெஸ் மூலம் இயங்கும் தகவல் வாங்கி (Receiver), தகவல் பரிமாற்றி (Transmitter) மற்றும் கட்டுப்படுத்தியை (Controller) கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.






# சர்பேஸ் டேப்ளட் பிசி



விண்டோஸ் 8 ஒப்பரேட்டிங் சிஸ்டம் குறித்து தகவல் தந்த சில நாட்களில், மைக்ரோசொப்ட் தான் ஹார்ட்வேர் பிரிவிலும் தடம் பதிக்கப் போவதாக அறிவித்தது. சர்பேஸ் டேப்ளட் பிசியினை வெளியிட இருப்பதாகக் கூறி, அதனை அறிமுகம் செய்தது.


சர்பேஸ் டேப்ளட் என்பது, டேப்ளட் பிசி விற்பனைச் சந்தையில் அப்பிள் நிறுவனத்திற்குப் போட்டியாக மைக்ரோசொப்ட் கொண்டு வரும் சாதனம். இதில் சிறப்பு என்னவெனில், இதற்கான ஹார்ட்வேர் மற்றும் சாப்ட்வேர் என இரண்டு பிரிவின் பொறுப்பையும் மைக்ரோசொப்ட் மேற்கொண்டுள்ளது. எனவே இதன் வடிவமைப்பு, கட்டமைப்பு, இயக்க தொழில்நுட்பம் என அனைத்தும் மைக்ரோசொப்ட் வல்லுநர்களாலேயே தரப்பட்டுள்ளது. இதுவரை டேப்ளட் பிசி தயாரிக்கும் நிறுவனங்களுடன், சொப்ட்வேர் தொகுப்பு சார்ந்து ஒப்பந்தங்களை மேற்கொண்டு மைக்ரோசொப்ட் இயங்கி வந்தது. ஆனால் தன்னுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தியவர்கள், ஐபேட் ஆளுமையைத் தகர்க்கும் வகையில் ஒன்றும் செய்திடவில்லை என்ற ஆதங்கத்தில், மைக்ரோசொப்ட் தற்போது சர்பேஸ் டேப்ளட் பிசியை வெளியிட உள்ளது.

சர்பேஸ் பிசி இரண்டு மொடல்களில் வர உள்ளது. விண்டோஸ் ஆர்.டி. ஒப்பரேட்டிங் சிஸ்டம் மற்றும் ஏ.ஆர். எம். ப்ராசசருடன் இயங்கும் ஒன்று. அடுத்தது விண்டோஸ் 8 ப்ரோ சிஸ்டத்துடன் இன்டெல் கோர் ப்ராசசருடன் இயங்கும் ஒன்று. விண்டோஸ் ஆர்.டி. யுடன் இயங்கும் சர்பேஸ் டேப்ளட், விண்டோஸ் 8 வெளியாகும் போதே கிடைக்கும். விண்டோஸ் 8 ப்ரோ மொடல், மூன்று மாதங்கள் கழித்து 2013 தொடக்கத்தில் கிடைக்கும்.

விண்டோஸ் ஆர்.டி., யு.எஸ்.பி. மற்றும் மைக்ரோ எஸ்.டி. கார்டினைப் பயன்படுத்தலாம். 32 மற்றும் 64 ஜிபி என இரண்டு மொடல்களில் கிடைக்கும். விண்டோஸ் 8 பயன்படுத்தும் சர்பேஸ் டேப்ளட், 903 கிராம் எடையில் 13.5 மிமீ தடிமனில் கிடைக்கும். இதில் 64 மற்றும் 128 ஜிபி மொடல்கள் உண்டு. ஒபீஸ் அப்ளிகேஷன் பதிவு செய்யப்பட்டு தரப்படும். அனைத்து மொடல்களிலும் 10.6 அங்குல திரை, 16:9 வைட்ஸ்கிரீன் எச்.டி. டிஸ்பிளேயுடன் இயங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசைன் போல்டின் வேகத்தை மிஞ்சும் ரோபோ சிறுத்தை தயாரிப்பு!




உலகின் அதிவேக மனிதனான உசைன் போல்டையும்விட மிக வேகமாக ஓடக்கூடிய ரோபோ சிறுத்தையை அமெரிக்க இராணுவ ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

பெண்டகனின் நிதியொதுக்கீட்டில் உருவாக்கப்பட்ட இந்த நான்கு கால்களையு டைய ரோபோ இயந்திரமானது, மணித்தியாலத்திற்கு 28 மைல்கள் வேகத்தில் ஓடியுள்ளது.

இந்த சீட்டா ரோபோவின் வேகமானது, உலகின் அதிவேக மனிதனான உசைன் போல்டையும் விட அதிகமானதாகும். உசைன்போல்ட் 2009 ஆம் ஆண்டில் நூறு மீற்றர் தூரத்தை 27.8 விநாடிகளில் ஓடி புதிய உலக சாதனையை நிலைநாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி இயந்திரமானது போஸ்டன் டைனமிக்ஸ் நிறுவனத்தினால் வடி வமைக் கப்பட்டுள்ளது. அமெரிக்க பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சி பணித் திட்டங்கள் நிறுவனத்தினால் வெவ்வேறு வகையிலான இராணுவ ரோபோக்களின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் நிதிகளைக் கொண்டு ரோபோக்களை வடிவமைக்கும் செயற்பாட்டில் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

'மணித்தியாலத்திற்கு 28 மைல் வேகத்தை அடைவது என்பது மிகவும் சவால் மிக்க குறிக்கோளாகும். இதற்காக நான் எனது ரோபோ குழுவினரை பாராட்டுகிறேன்' என ரோபோவியல் விஞ்ஞானியான டாக்டர் அல்பிரட் றிசி தெரிவித்துள்ளார்.



"இந்த இயந்திரமானது வேகமாக ஓடும் போது அதனது வெளிப்புறப் பகுதிகள் சுதந்திரமாக இயங்க வேண்டுமென்பதே எமது நோக்கமாகும். இதற்காக 'வைல்ட் கெட்' என்ற பெயரில், திறந்த வெளியில் ஓடக்கூடிய இயந்திரத்தை உருவாக்கி வருகிறோம். இது அடுத்த வருடத்தின் முன்பகுதியில் பரிசோதிக்கப்படும்'' எனவும் அவர் கூறினார்.

எதிர்காலத்தில் இந்த இயந்திரமானது அவசர நிலைமைகளிலான பதிலளிப்பு, மனிதாபிமான உதவிகள், மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பங்களிப்புச் செய்யும் என அமெரிக்க படையினர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இதேவேளை, மனிதனைவிட வேமாக ஓடக்கூடிய இந்த இயந்திரத்தின் மூலம், யுத்தகளங்களில் அதிவேக கொலையாளியாக உருவாகலாம் என ஷெபீல்ட் பல்கலைக்கழகத்தின் செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோ இயந்திரத்துறை பேராசிரியரான நோயல் ஷார்க்கி தெரிவித்துள்ளார்.






## ஊசி போட பயமா?



உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு டாக்டர்கள் ஊசி மூலம் மருந்து செலுத்துகின்றனர். இதனால் ஏற்படும் வலி காரணமாக பலர் ஊசி போட்டுக் கொள்வதற்கே அஞ்சுகின்றனர். அதற்குரிய மாத்திரையை மட்டுமே விரும்புகின்றனர். தற்போது வலியே இல்லாமல் போடும் ஊசியை தென் கொரியா விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இதற்கான ஊசிகள் லேசர் முறை மூலம் தயாரிக்கப் பட்டுள்ளன. இது மிகவும் மெலிதானது. உடலில் ஊசி குத்துவதே தெரியாத அளவில் இருப்பதால் வலி ஏற்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எட்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2012 செப்ரெம்பர் 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது.